Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

**அன்பளிப்பு**

மில்க்வைற் சோப் பாவிப்பாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! நீங்கள் பாவிக்கும் மில்க் வைற் சோப் மேலுறைகளை சேகரித்து அனுப்பி உடனுக்குடன் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

கிளை:- மில்க் வைற் டிப்போ
83, ஜிந்துப்பிட்டி தெரு.
கொழும்பு 13.

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | சௌமிய | ஆனி 19 | ரபி ஆகிர் 28 | (3-7-70) | வெள்ளிக்கிழமை | இதழ் — 142

## மாவிட்டபுரம் ஆலய பிரச்னை:

# உற்சவத்துக்குப் பின் ஆலய பிரவேசத்துக்குவழிசெய்வேன்

### உள்ளூராட்சி மன்றத் தலைவர்களிடம் ஸி. சுந்தரலிங்கம் கூறினார்

(நமது சிறப்பு நிருபர்)

''1966-ம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையில்உற்சவத்தை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு அளித்தால், உற்சவத்துக்கு ஒரு மாதத்துக்குப் பின்னர் ஆலயப்பிரவேசம் சுமூகமாக நடக்க வழிவகுப்பேன்'' என்று தம்மைச் சந்தித்த தெல்லிப்பழை, மயிலிட்டி, மல்லாகம் கிராமசபைத் தலைவர்களுக்கும், காங்கேசன் துறைப்பட்டினசபைத் தலைவருக்கும்மாவை ஆலயப்பரிபாலகர் திரு. ஸி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இம்மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகும் மாவை ஆலய உற்சவத்தின்போது ஆலயப்பிரவேசம் சுமூகமாக நடக்க வழிவகுக்குமாறு மாவை ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், திரு. ஸி சுந்தரலிங்கம் ஆகியோரை நான்கு உள்ளூராட்சிமன்றத்தலைவர்களும் சந்தித்துப் பேசினர்.

இதற்கிடையில், ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அரசாங்க உயர்மட்டத்தில் தீர்வுகாண்பதற்கு சிலர் கொழும்பு சென்றுள்ளனர்.

''மாவை ஆலய உற்சவம் ஆரம்பமாவதற்கு முதல் நாளே ஆலயப் பிரவேசம் செய்யப்போவதாக'' தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப்பிரமுகர் தெரிவித்தார்.

### வல்வை பட்டினசபை நகரசபை ஆகிறது

#### தேர்தல் ஆகஸ்ட் 29-ம் திகதி

பருத்தித்துறை, வியா. ஐந்து வட்டாரங்களைக் கொண்ட வல்வெட்டித்துறைப் பட்டினசபை அடுத்தாண்டு தொடக்கம் ஒன்பது வட்டாரங்களைக்கொண்ட நகரசபையாக மாறுகிறது புதிய நகரசபையில் பொலிகண்டிப் பகுதியும் தொண்டமானாறுப்பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளன.

கலைக்கப்பட்ட நெல்லியடிப்பட்டினசபைக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் 5-ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. இதற்கான தேர்தல் அடுத்த மாதம் 29-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட கட்டைவேலிக்கிராமசபைக்கான தேர்தல் அடுத்தாண்டுஆரம்பத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



சதங்கை நர்த்தனாலய அதிபர் லீலா நாராயணனின் மாணவி செல்வி ரோகினி சேவியரின் பரத நாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 6-ம் திகதி மாலை 6-30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு ஏ. [illegible] ரம், திருமதி சுந்தரம் ஆகியோர் பிரதம விருந்தினர்களா[illegible]க் கலந்துகொள்ளுகிறார்கள்.

### ''வழிபடுவோரை தடைசெய்வது சட்டரீதியான குற்றம்''

#### கோப்பாய் எம்.பி. சொல்கிறார்

மாவை ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக கோப்பாய் எம் பி விடுத்துள்ள அழிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாவது:-

''சுந்தரலிங்கத்துக்கு மாறாக மாவிட்டபுர ஆலயப்பிரவேச வழக்கில் இலங்கையின் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தபின் சட்டத்தைப்பற்றிச் சந்தேகிப்பதற்கு இடமில்லை. இதற்குமேல் ஆலயத்திற்கு போய் வழிபடுவர்களை சாதி காரணமாகத் தடைசெய்வது சட்டரீதியான குற்றம் என்பது உறுதியாகிவிட்டது. இப்படிப்பட்ட குற்றத்தைத் தொடர்ந்து 'பகிரங்கமாகச் செய்வேன்' என்று சொல்லி திரு. சுந்தரலிங்கம் இயங்குவதை பொலிஸார் தக்க நடவடிக்கை எடுத்து தடுக்க வேண்டும். அதாவது குற்றம் செய்வோம் என்று சொல்பவரை அதனால் கலவரம் உடுவாகும் என்பதை அறிந்து முன்நடவடிக்கையாக அவர்களைக் கைது செய்து குற்றத்தையும் கலவரத்தையும் தடுப்பது பொலிசார் கடமை. ஆகவே அரசாங்கம் திரு. சுந்தரலிங்கத்தையும் அவரோடு நின்று

(16-ம்பக்கம் பார்க்க)

#### புங்குடுதீவில் சம்பவம்

### கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் சிறுமி இறந்து கிடந்தாள்

#### 3 பெண்களுடன் நால்வர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், வெள்ளி

பத்து வயது வேலைக்காரச்சிறுமிகழுத்தில்சுருக்கிட்டு தொங்கிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் புங்குடுதீவு மேற்கு 3-ம் வட்டாரத்திலிருந்து இப்பரபரப்பூட்டும் சம்டவம் அறிவிக்கப்படுகிறது.

மாத்தளை கலுவல என்னுமிடத்தைச்சேர்ந்த வள்ளித்தாய் என்ற சிறுமி கயிற்றில் தொங்கியபடி புங்குடுதீவு மங்கயர்க்கரசி ஐயம்பிள்ளை என்பவரது வீட்டில் காணப்பட்டார். இது சம்பந்தமாக 3 பெண்களுட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு, இராசையா ஸ்தலத்துக்கு விரைந்துசென்று விசாரணை நடத்தினர். இச்சம்பவம் சம்பந்தமாகக் கூறப்படுவதாவது:-

மேனகை அம்மா என்ற (40 வயது) 8 பிள்ளைகளின் தாய்க்கும் யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த பத்மநாதன் (வயது 24) என்பவருக்குமிடையே தொடர்பிருந்ததாகவும். வேறுவீட்டில்வசிக்கும் இவர்கள் இருவரும் மங்கையர்க்கரசி ஐயம்பிள்ளை என்பவரது வீட்டுக்குசினியில் நேற்றுப்பகல் தகாத முறையில் நடந்துகொண்டிருந்தபோது அதே வீட்டில் வேலைசெய்யும் சிறுமி அவ்விடத்துக்கு வந்ததகவும், அவள் அப்போது ''கெட்டபழக்கம், கெட்டபழக்கம்'' என்று கூறியதாகவும் இதைத் தொடர்ந்து சிறுமி படுமோசமாகத் தாக்கப்பட்டதாகவும் பெலிஸ் விசாரணையின்போது தெரியவந்தது.

வேலைக்காரச் சிறுமியைத் தாக்கிவிட்டு, அவள் இறந்துவிட்டதாகக் கருதி கழுத்தில் கயிறிட்டு தொங்கவிட்டதாவும் புலன் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக மேனகை அம்மா, பத்மநாதன், வீட்டுச்சொந்தக்காரி மங்கையர்க்கரசி, பக்கத்துவீட்டுக்காரிஇராசம்மா ஆகியோர் கைது செய்யப்

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அரங்கு

# அரசியல் நிர்ணய சபையில் செனட்டர்களுக்கும் பங்கு

**எஸ். எம். ஜி.**

செனட்சபை அவசியம் தானா? இப்படியொருகேள்வி 1956-ம் ஆண்டிலிருந்து அடிக்கடி கேட்கப்படுவதுண்டு. அரசியல் அமைப்பைத் திருத்துவது பற்றி ஆராய்வதற்காக ஆட்சிமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டபோதெல்லாம் செனட்சபை இருக்கவேண்டுமா அதன் எதிர்காலம் என்ன? என்பது பற்றி ஆராய்வதும் அந்தத் தெரிவுக்குழுவின் வேலைகளில் ஒன்ருக இருந்தது. புதிய கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் நிகழ்த்தப்பட்ட முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதுநடைபெற்றவிவாதத்தில் யு. என். பி. அரசாங்கத்தின் உதவிமந்திரியாகவிருந்த நிந்தவூர்ப் பிரதிநிதி ஜனுப் எம். எம். முஸ்தபா பேசுகையில், செனட்சபைக்காக பெருந்தொகைப்பணம் வீணுகச் செலவாகிறதென்றும் அந்தச் சபையை ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்றும் அதனுல் ஒருவித பிரயோசனமுமில்லையென்றும் கூறியிருந்தார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் செனட்சபையில் சென்ற வாரம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு பேசிய அங்கத்தவர்கள்பலர் தெரிவித்த கருத்துக்கள் மிக மிக உபயோகமானவை. இவற்றில் செனட்டர் எஸ். நடேசன் தெரிவித்தகருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. செனட்சபை இங்கு உருவான காலத்திலிருந்து மிகக்குறுகியகாலம் தவிர அதில் அங்கம் வகித்துவருபவர் செனட்டர் நடேசன். சிவில், கிறிமினல், அரசியல் அமைப்பு ஆகிய மூன்று துறைகளிலும் வல்லுனரான பிரபல வழக்கறிஞர். ஆற்றலும் அனுபவமும் மிக்கவர். சிம்மாசனப் பிரசங்கம் பற்றி வெகுநுணுக்கமாக சகலஅம்சங்களையும் ஆராய்ந்து மிகத்தெளிவாக அவர் எடுத்துக் காட்டியிருப்பதிலிருந்தே செனட்சபை அவசியம் தானு என்ற கேள்விக்கு அவசியம்தான் என்றுஇனிப் பதில்சொல்ல நேரலாம்.

''மக்களால் தெரிவுசெய்யப்படும் ஆட்சிமன்றம் அரசியல் நிர்ணய சபையாகக் கணிக்கப்பட்டு புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்கும்'' என்று கூட்டணியினர் தமதுதேர்தல்விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தனர். இந்தவிஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டு மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மைப்பலத்துடன் இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடத்துக்கு மக்கள் அனுப்பிவைத்திருக்கின்றனர். தேர்தல் விஞ்ஞாபனத்தில்தெரிவித்தபடி புதியஅரசியல்அமைப்பு உருவாக்கப்படு மென்பதை சிம்மாசனப் பிரசங்கமும் கூறியிருந்தது. இதன்படி அரசியல் அமைப்பை உருவாக்கும் அமைச்சராக டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார். அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அதற்கு மிகப் பொருத்தமானவர் என்பதை செனட்டர் நடேசன் தமது பேச்சில் எடுத்துக் கூறியதுடன் சோஷலிஸக் குடியரசு அமைப்புக்கேற்ற வகையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படவேண்டுமென்பதையும் சகலரின் அடிப்படை உரிமைகளும் பாதுகாக்கப்படக்கூடியதாகப் பார்த்துக்கொள்ளப்படவேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

சோஷலிஸம் பல ரகப்பட்டவை என்று கூறிய செனட்டர் நடேசன் ஹிட்லரின் ''தேசியசோஷலிஸம்'' பற்றியும் அங்கு சிறுபான்மையினர் பட்ட அவஸ்தை பற்றியும் தொட்டுக்காட்டிவிட்டு சோஷலிஸம் பற்றி தெளிவான விளக்கம் அவசியமென்றும் கூறினர். சகிப்புத்தன்மை, கருணை அனைவரின் உரிமைகளுக்கும் பாதுகாப்பு என்பவைதான் சோஷலிஸம் என்பது தனது கருத்து என்றும் கூறிய செனட்டர் நடேசன்பௌத்தத்துக்கு உரிய இடமளிக்கப்படுமென சிம்மாசனப் பிரசங்கம் தெரிவித்திருப்பதால் அரசியல் அமைப்பை உருவாக்கும் அரசில் நிர்ணய சபையில் புத்தபெருமானின் கருணை, அன்பு, பொறுமை ஆகியவைகளை அங்கத்தவர்களுக்கு நினைவுறுத்துவதற்காக புத்தபிரான் சிலையொன்றையும் அங்குவைக்கவேண்டுமென நல்லதொரு யோசனையையும் தெரிவித்திருந்தார்.

மலையகத் தமிழ்மக்களின் நிலைபற்றியும் வெகுவாக எடுத்துப்பேசிய செனட்டர் நடேசன் இலங்கை பிரஜைகளாகப் பதிவுசெய்யப்பட்டவர்கள், தேசவிரோத, சமூகச்செயல்களில் ஈடுபட்டார்களென நிரூபிக்கப்பட்டால் அவர்களது பிரஜாவுரிமைகள் ரத்துச்செய்யப்படுமெனக் கூறும் பிரஜாவுரிமைச்சட்டத்தின் 24-வது (1 பிரிவை எடுத்து அதன் வரலாற்றையே ஆராய்ந்தார், காலஞ்சென்றபிரதமர் திரு. பண்டாரநாயகா' டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பீட்டர் கெனமன் ஆகியோர் அதை முன்பு வன்மையாக எதிர்த்ததை எடுத்துக்காட்டி பண்டாரநாயகாவின் கொள்கையைப் பின்பற்றும் திருமதி பண்டாரநாயகாவின் தலைமையிலான கூட்டணித்தலைவர்கள் அந்தச் சட்டவிதியை நீக்கவேண்டுமென்று வலியுறுத்தினர்.

நீதிமன்றமொழி சிங்களமாக இருக்கவேண்டுமென்ற மசோதா கொண்டுவரப்பட்டபொழுது அதை அச்சமயத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வன்மையாக எதிர்த்ததை எடுத்துக் காட்டிய செனட்டர் நடேசன் ''நீதிமன்றமொழி மசோதா ஓர் அடிப்படை வகுப்புவாதக் கொள்கையைத்தான் கொண்டுள்ளதே தவிரமொழிக்கொள்கையை அல்ல' என்று அச்சமயத்தில் டாக்டர் கொல்வின் குறிப்பிட்டதையும் மேற்கோள் காட்டினர். மொழிப் பிரச்னையின் வரலாற்றை ஆதியோடந்தமாக எடுத்துக் கூறிய செனட்டர் நடேசன், மக்கள் எதிர்க்கிருர்களென்பதற்காக மக்கள் சொல்வதன்படி நடப்பதல்ல தலைவர்களின் பொறுப்பு; மக்களுக்கு விளங்கப்படுத்தி மக்களை அந்த வழியில் திருப்புவதுதான். இதைத்தான் கம்யூனிஸ்ட் நாடுகளில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் மக்களுடன் கலந்து பழகிச் செய்கின்றனர் என்றும் கூறினர்

சமஷ்டிக்கட்சியும் தமிழ்க் காங்கிரசும் தமிழ் மக்களின உரிமைக்காகப் போராடுகின்றன. சிங்கள மக்களுக்கு ஐக்கியமுன்னணி பிரதிநிதித்துவம் வகிப்பதுபோல சமஷ்டிக்கட்சியும் தமிழ்க் காங்கிரசம் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறதென்பதும் உண்மையே' என்று கூறிய செனட்டர் நடேசன், இந்த நாட்டில் தமிழ்மக்களுக்குச் சமத்துவம் வழங்கி சோஷலிஸத் திட்டங்களை நிறைவேற்றலாமென்றும், அதன் மூலம் நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியுமென்றும் அவர்சொன்னர்.

### அமைச்சரின் பேச்சு

கூட்டணி அரசின் ஒரேயொரு தமிழ் அமைச்சரான தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தமது கன்னிப் பேச்சை அருமையாக நிகழ்த்தியிருந்தார். தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள்முன் சமர்ப்பித்து அதன் அடிப்படையிலேயே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்கிறது. வேறுவிதமான அரசியல் அமைப்பை உருவாக்க இந்த அரசாங்கம் விரும்பினாலும் தேர்தல்விஞ்ஞாபனத்துக்கு மாருக இந்தக்கட்டத்தில் அது எதையும் செய்யமுடியாது'' என்று அமைச்சர் குமாரசூரியர் விளக்கினர். அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கினல் அதில் மாற்றமே செய்க்கூடாதுஎன்பதுதனது கருத்தல்ல என்பதையும் அவர் தெரிவித்தார்.

பொதுவாக செனட்சபையில் விவாதம் காரசாரமாக இருப்பதில்லை. தமிழில் 'மூதவை என்று அந்தச் சபையை அழைப்பது பொருத்தம் என்று கூடச் சில சமயங்களின் அதன் நிகழ்ச்சிகளைப்பார்த்துப் பலரும் நினைப்பதுண்டு

ஆனல் இம்முறை சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நடைபெற்ற விவாதம் விறு விறுப்பாகவும் பயனுள்ளதாகவுமிருந்தது.

### பங்குபெறட்டும்

கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனப்படியும் கூட்டணி அரசின் சிம்மாசனப் பிரசங்கத்தின்படியும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள்பிரதிநிதிகள்சபையே புதிய அரசியல் நிர்ணய சபையாகஇயங்கும். செனட்சபையிலும் ஆற்றலும் அனுபவமும் நிறைந்தவர் பலர் உள்ளனர் அவர்களின் கருத்துக்கள் உபயோகமானவை. அவர்களையும் அரசியல் நிர்ணயசபையில் அங்கம் வகிக்கச்செய்தால் என்ன?

---




**சின்னஞ்சிறுகதைகள்:** ஆசிரியர்: ச. வே. பஞ்சாட்சரம். வெளியீடு: தமிழருவிப்பதிப்பகம், கலாதேவி அச்சகம், சுன்னுகம். விலை; ரூ:1—25.

இன்றைய அவசர உலகில் மனிதன் நின்று நிதானிக்கும் திராணியற்றவனுகவுள்ளான் எதிலும் மனம்ஒன்றுபடமுடியாத பல பிரச்சினைகளின் இழையில் ஊசலாடுகின்ற மனிதனுக்குரிய அறிவும் பசியைப் போக்கும் சாதனமாகவுள்ளன இலக்கியங்கள் காலத்துக்கமைய இலக்கியங்கள் வடிவம்குறுகவேண்டிய தேவையாயுள்ளது. இந்தக்கருத்தின் அடிப்படையில் ஆக்கப்பட்டவையே ''சின்னஞ்சிறுகதைகள்'' என்னும் இந்தநூல்.

இதன் ஆசிரியர் ச. வே. பஞ்சாட்சரம் நாடறிந்த கவிஞன். பல கவிதை நூல்களின் ஆகிரியர். இந்த நூலை இன்றைய காலதேவைக்கமைய ஆக்கியுள்ளமையைப் பாராட்டுதல் கடனுகும்.

''வலுவான தெளிவான கருக்களை மையமாகக் கொண்டு அளவான வார்த்தைகளினுல் அத்தியாவசியமான கருத்துக்கள் கவிதைச் செறிவோடு ஆக்கப்பட்டுள்ளன.'' என்று கதையோடு கதையாக தனது முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். உண்மையில் அவரது படைப்பில் இந்தக் கருத்துத் துலாம்பரமாக விளங்குகின்றதைக் காண்கின்ருேம். [illegible] நோக்கி ''வேள்வி மயக்கம்'' தொடங்கி ''மானங் காக்கும் மண்'' வரை 45 தலைப்புகளில் அமைக்கப்பட்டுள்ள கதைகள் அவரது அனுபவ உணர்ச்சிகளின் கலப்பாகவேயுள்ளன.

''மேனி முழுதும் ஆயிரமாயிரங் கங்குமட்டைக் கரங்களை நீட்டிக்கொண்டு செம்புழுதியில் குளித்துப் பசுமை மங்கிய ஓலைகளோடு நிற்கும் பனை வடலிகளின் நடுவே'' என்று கவிஞனுக்குரிய இலக்கியப் பார்வையுடன் முதற் கதையை ஆரம்பிக்கிருர். செழுமையான அளவான சின்னஞ்சிறுகதைகளில் வாழக்கூடிய மையக் கருத்துகளுள்ளன.

72 பக்கங்களுடைய இப்புஸ்தகத்தின் அட்டைப் படம் உள்ளடக்கத்துக்கமைய கவர்ச்சிப் படாமையினுல் புஸ்தக அமைப்பு குறைவுபடுகின்றது. மறுபதிப்பில் இந்தக் குறைபாடு நீங்கி நிறைவுறும் என எதிர்பார்க்கிருேம். —இ.நா

0 0 0

**தேர்மலர்.**

எழுதியவர்: பிரம்மஸ்ரீ சி. சுவாமிநாத ஐயர். வெளியீடு: பிரம்மஸ்ரீ சோமசுந்தரசர்மா, மெமோறியல் ஆங்கில பாடசாலை, புன்னலைக்கட்டுவன்.

விலை: ரூ 2-50.

கிடைக்குமிடம்: திரு. எஸ். இராசரத்தினம், புன்னலைக்கட்டுவன், சுன்னுகம்.

மலர்கள் மணம் கமழ்வதுடன் அழகையும் கொண்டிருத்தலே சிறப்புடையது. புன்னலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேர்த்திருமலர் அழகுடன் நல்ல விஷயங்களையும் கொண்டு சிறப்புப் பெறுகிறது. புன்னலைக்கட்டுவன் வாசரும், மெமோறியல் ஆங்கில பாடசாலை கனிஷ்ட அதிபருமான பிரம்மஸ்ரீ சி. சுவாமிநாதஐயர் (சோமசுந்தரசர்மா) வின் முயற்சியால் மலர்ந்த இம்மலரின் இதழ்களான பிரம்மஸ்ரீ குமாரசுவாமி குருக்களின் ''சித்திவிநாயகர் தோற்ற வரலாறு'' பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மாவின் ஸ்ரீ கணேச-பஞ்சரத்தினம் போன்றவை மணம் வீசுகின்றன.

வித்துவசிரோன்மணி கணேசய்யரின் தோற்றவரலாற்றை நூலாசிரியர் எடுத்துக் கூறி ''கடவுள் பக்தியால் எதையும் சாதிக்க

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ உணவு மூலம் நோயைக் குணப்படுத்தும் ரஷ்ய நிபுணர்

**பேராசிரியர் நிக்கொலாய் என்ற மருத்துவ நிபுணர் தமது நோயாளிகளுக்கு சைவ உணவுகள் கொடுத்து அதன் மூலம் நோயாளிகளிடம் அபிவிருத்தி ஏற்படுத்தி வருகிறார்.**

**சோவியத் யூனியனில் பாதைகளை பன் முறைகள் தண்ணீர் தெளித்து சுத்தம் செய்கிறார்கள்.**

**சோவியத் யூனியனில் இரண்டு வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள சென்னை டாக்டர். பி. கிருஷ்ணன் இந்தத் தகவல்களை வெளியிடுகின்றார்.**

**— டாக்டர். பி. கிருஷ்ணன் —**

இஸ்கஸ் கழகத்தின் தேசிய கவுன்சில் சார்பில் கள்ளிக் கோட்டையைச் சேர்ந்த டாக்டர் சாந்தகுமார், டில்லியைச் சேர்ந்த டாக்டர் சென், சென்னையிலிருந்து நான் ஆகிய மூவரடங்கிய மருத்துவத் தூதுக் குழுவொன்று சோவியத் யூனியனுக்குச் செல்வதெனத் முடிவாகியிருந்தது. ஆனல் டாக்டர் சென். எங்களுடன் வர இயலவில்லை. எனவே டாக்டர் சாந்தகுமாரும் நானும் சோவியத் யூனியனில் சுற்றுப்பயணம் செய்தோம். நாங்களிருவரும் இஸ்கஸ் கழகத்தின் டாக்டர்கமிஷனில் நிர்வாகப் பதவிகளை வகித்து வருபவர்கள்.

நாங்கள் சோவியத் யூனியனில் தங்கியிருந்தபோது பல மருத்துவ மனைகளையும் நோய்ச் சோதனை நிலையங்களையும் ஆரோக்கிய நிலையங்களையும் பார்வையிட்டோம்.

சோவியத் யூனியனில் எல்லா மருத்துவ மனைகளும் மிகவும் சுத்தமாக இருக்கின்றன. மருத்துவ நிலையங்கள் சோவியத் சுகாதார அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழோ அல்லது மருத்துவப் பேரவையின் கட்டுப்பாட்டின்கீழோ உள்ளன. மருத்துவப்பேரவையும்கூட சுகாதார அமைச்சகத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டது என்றாலும் அது பெரிய அளவுக்குச் சுதந்திர நிறுவனமாகவே செயல்பட்டு வருகிறது

அல்மா அதாவில் பேராசிரியர் பரிகோவ் தலைமையிலுள்ள உளஇயல், நரம்பியல் நோய்கள் ஆராய்ச்சிக் கழகத்துக்குச் சென்றிருந்தோம். இங்கு தொழுநோய் பிரச்னைகள் குறித்து பேராசிரியர் ஒமரோவுடன் விவாதிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. சோவியத் யூனியனில் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்குக் கையாளப்பட்டுவரும் முறைகளை அவர் விவரித்தார். தொழுநோயைப் பிறருக்குப் பரப்பும் நோயாளிகளைத் தனிமைப்படுத்துவதில் அவர்கள் கண்டுள்ள வெற்றி அந்நோயை ஒழிப்பதில் பெரும்பங்காற்றியுள்ளது என்பதைத் தெரிந்து கொண்டோம். தொழுநோயைக் கட்டுப்படுத்துவதில் பி. சி. ஜி.யின் பங்கையும் நோய்த்தடுப்பு நடவடிக்கையாக சல்போன் மருந்துகளைப் பயன்படுத்துவதையும் பற்றி அவர் எங்களுடன் விவாதித்தார்.

பேராசிரியர் நிக்கொலாயின் மருத்துவ நிலையத்துக்குப் போயிருந்தோம். பேராசிரியர் நிக்கொலாய் மரக்கறி உணவு மட்டுமே உட்கொள்ளும் சுத்த சைவர். இறைச்சி உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கக்கூடியது என்ற கருத்துடையவர். அவர் தமது நோயாளிகளுக்கு முற்றிலும் சைவ உணவு அளித்து, அதன் மூலம் அவர்களிடம் அபிவிருத்தி ஏற்பட்டு வருவதை மெய்ப்பித்துக்காட்டி வருகிறார். அவர் ஒரு புதிய சிகிச்சை முறையை உருவாக்கி இருக்கிறார். இதன்படி ஆரம்பத்தில் நோயாளிகளுக்குப் பேதி மருந்து தரப்படுகிறது. பிறகு அவர்கள் பட்டினி கிடக்கச் செய்யப்படுகின்றனர். இதன்பின்னர் அவர்களுக்குப் பூரணமாகச் சைவ உணவு அளிக்கப்படுகிறது. 15 அல்லது 20நாட்கள் வரை தண்ணீரை மட்டுமே ஆகாரமாக அருந்தி வந்த பல நோயாளிகளை அவரது மருத்துவ நிலையத்தில் கண்டோம். அவர்கள் மிகவும் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டனர், தொன்மையான இந்திய ஆயுர்வேத மருத்துவமுறையிலிருந்தே இந்த சிகிச்சை

## வைத்திய ஒளி

முறையைத் தாம் கற்றுக் கொண்டதாக பேராசிரியர் நிக்கொலாய் கூறினர். அவர் யோகாசனங்களையும் தவறாமல் செய்து வருகிறார். மன நோய்க்கு சிகிச்சையளிக்கும் நிக்கொலாய் முறை பற்றி அவருடனும் அவர்களது ஊழியர்களுடனும் இரண்டு கனடிய டாக்டர்கள் விவாதித்துக்கொண்டிருந்த போது நாங்களும் உடனிருக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றோம்.

மய்ஸ்னிக்கோவ் இருதயவியல் கழகத்துக்குச் சென்றிருந்தோம். பேராசிரியர் முபார்லமோவ் எங்களை மருத்துவமனையின் பலபகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார். 'கரோனரி திராம்பசிஸ்' என்னும் இருதய நோய்க்கு அளிக்கப்படும்சிகிச்சைபற்றி தெரிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினேன். 'கரோனரி திராம்பசிஸ்' நோயாளிகள் குணமடைவதற்கும் அந்த நோய் வராதபடி தடுப்பதற்கும் படிப்படியாலை உடற்பயிற்சி முறையை முதன் முதலில் சென்னையில் பயன்படுத்திய டாக்டர்களில் நானும் ஒருவன். எனது முறை சரியானதே என சோவியத் இருதயவியல் நிபுணர்கள் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். அவர்கள் இந்தஉடற்பயிற்சிகளுக்கு மிகவும் நுணுக்கமான கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். நோயாளியின் இருதயம் எந்தஅளவுக்கு உடற்பயிற்சிகளைத் தாங்கமுடியும் என்பதை இக்கருவிகள் துல்லியமாக மதிப்பிட்டுக்கூறிவிடுகின்றன.

தொற்றுநோய் மருத்துவ மனையைப் பார்வையிடும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. பேராசிரியர் லோபன் எங்களை வரவேற்றார். தொற்று நோய்களைத் தடுப்பதில் சோவியத்மருத்துவத்துறைமிகுந்தஅக்கறை காட்டிவருகிறது. பெரியம்மை, டைப்பஸ், டைப்பாய்டு போன்ற தொற்று நோய்கள் சோவியத் யூனியனில் ஒழித்துக்கட்டப்பட்டுவிட்டன.

மாஸ்கோவில் நாங்கள் ஒரு பாலிகிளினிக்குக்குச் சென்றிருந்தோம் சோவியத் யூனியனில்பாலிகிளினிக்குகள் நோய்த்தடுப்பு, சிகிச்சை ஆகிய இரண்டு பணிகளையும் செய்துவருகின்றன. பாலிகிளினிக் ஊழியர்கள் மருத்துவஆராய்ச்சியில் பெரும்சிரத்தை காட்டுகின்றனர்; அவ்வப்போது கூடி விவாதிக்கின்றனர்; மருத்துவ சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் எழுதுகின்றனர். மத்திய காசநோய் மருத்துவ மனையில் இந்த நோய் சம்பந்தமாக கையாளப்படும் ரஷ்ய சிகிச்சை முறைகளைப்பற்றித்தெரிந்து கொண்டோம். நோய்த்தடுப்புக்கு சிறந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக, காசநோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து பல காசநோய் மருத்துவ மனைகளை மூடும்படியாகிவிட்டது.

நட்புறவுப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சருமவியல் மருத்துவ நிலையத்துக்குச் சென்றிருந்தோம். பேராசிரியர் பபாயாந்த்ஸ் மாணவர்களுக்குசெய்முறை விளக்க வகுப்பு நடாத்திக் கொண்டிருந்தார். ஒரு மணி நேரம்வரை அங்கு தங்கியிருந்து அதனைக் கவனித்துக் கொண்டிருந்தோம்.

மொஸ்கோவிலிந்து நாங்கள் சோச்சிக்குவிமானமூலம் சென்றோம். சோச்சியில் வளைந்துவளைந்து செல்லும் மலை பாதைகளின் வழியாகக் காரில் செல்லும்போது எங்கிருந்தோ கந்தக நெடி நம் மூக்கைத்துளைத்துவிடும். இயற்கைச் செல்வங்களை மக்களின் நலத்துக்காகவும், இன்ப வாழ்வுக்காகவும் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு சோச்சி ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது புரட்சிக்கு முன்னர் இந்த இடம் சதுப்பு நிலமாக இருந்தது. மலேரியா காய்ச்சல் போன்ற நோய்களால் இது மனிதன் குடியேறி வசிக்கத் தகுதியற்றபிரதேசமாக இருந்தது. ஆனல் இப்போது இங்கு ஏராளமான ஆரோக்கிய நிலையங்களும், ஒய்வு இல்லங்களும் உதித்தெழுந்துவிட்டன. சோவியத் யூனியனில் இத்தகைய ஆரோக்கியநிலையங்கள் மொத்தம் சுமார் 450 இருக்கின்றன. சோச்சியில் ஆண்டு தோறும் ஏறத்தாழ 20 லட்சம்பேர் தங்கள் விடுமுறையை இனிய முறையில் கழிக்கின்றனர் அல்லது இங்கு தங்கி ஒய்வும் சிகிச்சையும்பெறுகின்றனர்.

''நெருப்பு நீர்'' என்று பொருள் படும். ''மத்செஸ்தா'' ஆரோக்கிய நிலையத்தையும் நாங்கள் பார்வையிட்டோம். அந்த இடம் முழுவதும் கந்தகத்தின் நெடி வீசுகிறது எனினும் ஒரு சில மணிநேரம் தங்கியிருந்ததும் அந்த நெடிக்கு நாம்பழக்கப் பட்டு விடுகிறோம். வாதம், மூளையின் மூக்கிணை எலும்புப் புழையழற்சி போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களும், வழுக்கை விழுந்தவர்களும் இங்கு கந்தக நீரைக் கொண்டு சிகிச்சைபெற்று வருவதைக் கண்டோம்.

மருத்துவத் தூதுக்குழு உறுப்பினர்கள் என்ற முறையில், நகர்கள் எந்த அளவுக்கு துப்புரவாக இருக்கின்றன என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினோம். நவீன நகரான அல்மா அதாவில் நாள் தோறும்சாலைகள் பன்முறை தண்ணீர் தெளித்து சுத்தம்

( 4-ம் பக்கம் பார்க்க )



லண்டனிலுள்ளமத்தியதகவல் காரியாலயம் மே 1-ம் திகதி முதல் ஜூலை 17-ம் திகதி வரை தகவல் அதிகாரிகளுக்கென ஒரு விசேஷ பயிற்சித் திட்டமொன்றை நடாத்தி வருகிறது இதில் பல வெளிநாட்டு அரசாங்கத் தகவல் அதிகாரிகள் தற்போது பங்கு பற்றி வருகின்றனர்.

இலங்கையின் தெங்குப் பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரசுர அதிகாரியாக இருக்கும் திரு. ஏ. கே. குணபாலா இலங்கையில் இருந்து இப் பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றவென லண்டனுக்குப் போய் இருக்கிறார் இங்கு திரு. குணபாலா, மத்திய தகவல் காரியாலயத்தின் அதிபர் [illegible] உரை [illegible] [illegible] காணலாம்.


குறைந்த விலையில்
சிறந்த பொருட்கள் பெறுவதற்கு
'ரொலறம்ஸ்'
★ சூட்டிங் ★ சேட்டிங்
★ மணிப்புரிசாறிகள் ★ வொயில்சாறிகள்
★ சிறுவர்கட்கு ஏற்ற றெடிமேட் சூட்ஸ்
இன்னும் அனேக தினுசுகள் பெறக்கூடிய இடம்
ரொலறம்ஸ்
போன் 7099
46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தவள் நோய் என்றுள்; வைத்தியர் இல்லை என்றுர்

இவ்வித நிகழ்ச்சிகள் எங்களை ஆச்சரியப்படுத்தாவிட்டாலும்கூட, ஏதோ இத்தன்மையானஒரு செயல் எமக்கு நடைபெறுகிறதென்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். மனதையும் உடலையும் தாக்கும் எல்லாவித மனவெழுச்சிகளையும் உணர்ந்துகொண்டால், இவ்வித எழுச்சிகள் ஏற்படும்பொழுது தடைசெய்யவேண்டும் அல்லது இவ்வித உணர்விலிருந்து மாற்றம் தேடவேண்டும்.

''எல்லாவித உணர்வுகள், மனவெழுச்சிகள், எல்லாவிதமான சக்தியுடைய, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் யாவும் நாட்டமுள்ள செயலுடன் சேர்ந்தேவரும். இது முற்றுக நிலைத்திருப்பதோ, தானுகத் தனித்து நிற்பதோஇல்லைஎன பிரபல பிரான்ஸ் உளவியல்அறிஞர் போல்கன் (Paulhan) கூறுகிறுர். இதற்குக் காரணம் எல்லாவிதமான தூண்டுதல்களும் மனவெழுச்சி முரண்பாடுகளைத் தடைசெய்கிறது அல்லது ஒருமுகமான அல்லது எதிர்த்தூண்டுதல்களால் கட்டுப்படுத்தப்படுகிறது எனலாம். நமக்குள் இருக்கும் ஆன்மா (உயிர்) இரண்டுபட்டு தமக்குள் தாமே எதிர்க்கத்தொடங்கியதும் இந்நிலை ஏற்படுகிறது எனக்கருதப்படுகிறது. பதகளிப்புகளாலும் எந்தவிதமான மனவெழுச்சிக் குழப்பங்களாலும் நாம் பாதிக்கப்பட்டிருக்கும்பொழுது அந்நோயைக்குறைத்து வைப்பதற்கு இச்செயலே காரணமாகும்.

இவ்விதமான உடல் உணர்ச்சிகள் மனதிற்கு எதிர்பாராத முடிவைத் தரும். உதாரணமாக, இருவர் நடப்பதற்காகச்சென்றுகொண்டிருக்கிறுர்கள். அப்பொழுது ஒருவர் இடதுபக்கமாகவும் மற்றவர் வலது பக்கமாகவும் செல்லவிரும்பும்பொழுது ஒருவர் ஒருவருக்காக விட்டுக்கொடுக்க வேண்டும் அல்லதுஇருவரும் வேறுதுணையுடன் செல்ல வேண்டும்.

ஒருபொழுதும் நாமேநமக்குத் துணையாகச் செல்ல முடியாது. இந்நிலையில் அவனுக்கு ஏற்படும் இரண்டு விதமான விருப்பத்துக்கிடையில் போராட்டம் நிகழும். அந்நிலையில் நாம் மற்றவனேடு எமது விருப்பத்தைவிட்டுச்செல்லவேண்டும் அல்லது எமக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பத்திற்கு ஏதாவதுஒன்றுக்குத்தள்ளப்படுவோம் அல்லது சில வேலைகளில் மனவெழுச்சிச் சிக்கல்கள் இக்குழப்பத்திற்கு முடிவுகாணும் வகையில் உடல் கோளாறை உருவாக்கும்.

ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். ஒருவன் தன்னுல் சமாளிக்க முடியாத பொறுப்பைச்செய்யஆசைப்பட்டான். அதனைச்செய்யும்பொழுது அப்பொறுப்புள்ள செயல் தனது சக்திக்கு மீறியதனுல் தான் அச்செயலைச் செய்வதில் தோல்வி அடைந்துவிடுவோம் என்ற பயம் அவன் உள்ளத்தில் ஏற்படுகிறது. இந்நிலையில் இயற்கையாகவே உணவு ஜீரணியாமை, தூக்கமின்மை (Insomnia) அல்லது இது போன்ற உடல்நோய்களை இப்பதகளிப்பு ஏற்படுத்தி இவ்வித உடல் கோளாறு காரணமாக தன்னுல் செய்ய முடியாத அந்தச் செய்ய விரும்பிய ஆசையுள்ள செயலைச் சுகமில்லை என்ற காரணத்தைக் காட்டி விட்டுவிடவும்கூடும்.

இவ்விதமாவதினுல் அவன் அச்சுமையிலிருந்துவிடுபட்டு, தன்னுல் செய்ய முடியாமற்போன தோல்வியிலிருந்தும் ''மன்னிப்பு'' பெற்றுவிடுகிறுன்.

ஒரு மாணவன்நல்லமுறையில் படித்துப் பரீட்சை எழுதப்போகிறுன். பரீட்சை மண்டபத்துக்குள் சென்றதும் வினுத்தாளைப் பார்க்கின்றுன். அதில் இருக்கும் வினுக்களுக்குரிய பதில் அவனுக்குத் தெரியாமல்

**- இலங்காதிபன் -**

இருப்பதனுல், அவன் உள்ளத்தில் ஒருவித நடுக்கம், பயம். இது அவன் மனத்தைக் குழப்புகிறது. இதனுல் அவன் தெரிந்த வினுக்களுக்குக்கூட விடையைத் தெளிவாக எழுத முடியாமற் போய்விடுகிறது.

ஒருபெண் ஓர் ஊரில் வாழ்ந்துவந்தாள் அவள் அழகானவள். அவள் மோகனப் புன்னகையில் இவ்வுலகம் இருப்பதாக எண்ணிய வாலிபர் எத்தனையோ அவள் உள்ளத்தில் திருமண ஆசை அரும்பியது ஒரு வாலிபனைக் காதலித்தாள் அக்காதலுக்காக அவள் ஏங்கித் தவித்தாள். காதலும் கைகூடியது. ஆனுல் பெற்றோர் மறுத்தனர். பல குறைபாடுகளை, அவள் விரும்பிய காதலன்மீது சுமத்தினர்; அவள் அதைக் கேட்கவில்லை. இச்சமூகக் கட்டுப்பாடு காரணமாக— பெண் தனக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்று கேட்பது பெண்மைக்குக் குறைவு என எண்ணும் இச் சமூகத்தில்— அவள் பெற்றோருடன் போராடவில்லை. இதனை தான் விரும்பியபடியோ அல்லது பெற்றோர் விரும்பியபடியோ செய்ய அவள் மனம் இடம் கொடுக்கவில்லை.

அவளுக்கு முதலில் பல் வலி ஏற்பட்டது; பின் நெஞ்சுக்குத்து ஏற்பட்டது; அதன் பின் குடற்புண் (Peptic ulcer) ஏற்பட்டது. பல வைத்தியரை நாடினர். மருந்தும் செய்தனர். நோய் தீரவில்லை. அவள் விரும்பிய ஆடவனைத் திருமணஞ் செய்ய ஒழுங்குகள் செய்தனர். நிச்சயித்தனர். அதன் பின் அவளுக்கு அந்நோய் மாறிவிட்டது. எப்படி இது ஏற்பட்டது, இந்நோய் எங்கிருந்து பிறந்தது?

இவ்விதமாக நாம் எமது வாழ்வில் எத்தனையோ நிகழ்ச்சிகளைக் கண்டுதான்வருகின்றேம். ஆனுல் அதனை உணரும் அறிவுதான் எமக்கில்லை அதனுல் பேயென்றும் பிசாசென்றும் பெல்லிசூனியமென்றும் அறியாமையில் ஆழ்ந்து வளமான வாழ்வுக்குப் பதிலாக வாழ்வில் சீரழிந்துபோகிறேம். இந்த விதமான அறியாமையினுல் சீரழிவோர் ஒருவரா? இருவரா? ஆயிரக்கணக்கானேர் இப்படிப் பரிதவிக்கின்றனர். இவ்வித உணர்ச்சிகளை நாம் உணர்ந்து அதற்குத் தகுந்த முறையில் நாம் தெரிந்து கொண்டுவிட்டால், குடும்பப் பிரச்சினைகளோ, காதல் தோல்விகளோ, விவாகரத்துக்களோ, விபச்சாரங்களோ (இதற்குப் பொருளாதாரம் பெரும்பாலும் காரணமாகும் என்பது என் அபிப்பிராயம்) திருமண ஏமாற்றங்களினுல் மனமுறிவுகளோ நடைபெறுமா?

உடலில் ஏற்படும் உணர்ச்சிகள் மனத்தில் எழும் மனவெழுச்சிப் பிரச்னைகளை எதிர்பாராதவகையில் தீர்த்துவைக்கலாம். இவ்வித மனவெழுச்சிக் குழப்பங்கள் உடலில் நோய்க்குறிகளை முற்றுக இல்லாமல் நீக்கி அவனை அமைதி அடையச் செய்து. அவன் உண்மையில் எப்பொழுதும் நரம்பு நோயால் பீடிக்கப்பட்டவனல்ல என்பதைக் காட்டிவிடும்.

(தொடரும்)

## சைவ உணவு......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுகின்றன. சோவியத் யூனியன் எங்கணும் கார்களும் லொறிகளும் உயர்ரக பெட்ரோல் அல்லது டீசல் எண்ணெயையே பயன்படுத்துகின்றன. இதனுல் அவை புகையை வெளியிடுவதில்லை வாகனப் போக்குவரத்து மிக ஒழுங்கான முறையில் நடைபெறுகிறது. நகர்களில் 'ஹாரன்' சத்தம் எழுப்பஅனுமதிக்கப்படுவதில்லை. ஆலைகளின் புகைபோக்கிகள் நச்சுப் புகையை வெளிடுவதில்லை. எல்லாக் கழிவுப் பொருள்களும் ஆலைகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு காற்றும் தண்ணீரும் நச்சாகாமல் சுத்தமாக இருக்கின்றன. சாலைகளின் இரு மருங்கிலும் நிழல்தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன. ஆங்காங்கு ஏராளமான பூங்காக்களும் விளையாட்டு மைதானங்களும் அமைக்கப் பட்டுள்ளன. உள்ளம் கொள்ளைகொள்ளும் அழகிய சிற்பங்களும் நீரூற்றுகளும் அவற்றை அணிசெய்கின்றன. நான் இதுவரைசென்றுவந்த நாடுகளிலேயே காதைத் துளைக்கும் ஒலிபெருக்கிகளின் அலறல்களைக் கேட்காத நாடு சோவியத் யூனியன்தான்.

விஞ்ஞானம் வழங்கியுள்ள அறிவுச்செல்வம் அனைத்தும் மனிதனின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப்படும் போதுஅங்குஆரோக்கியமும் மகிழ்ச்சியும் மிக்க ஒரு சமுதாயம் முகிழ்ந்தெழுவதைக் காண்கிறேம்.

## உங்கள் இராசி பலன்

3—7—70 — 10—7—70

**மேடம்:**
கவலையின் மத்தியில் வாழ்வு ஆரம்பமாகின்றது. நடந்தேறியவற்றைச்சிந்திக்காதீர். பெண்வழித் தொந்தரவு உண்டு. கருச்சிதைவுற ஏது உண்டு. தனியார் வியாபாரம் மந்தமுறும், தொழில் முன்னேற்றம் குன்றும். திடீர்ப்பிரயாணமுண்டு.

**இடபம்:**
அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் உண்டு. படிப்பில் முன்னேறலாம். உத்தியோக உயர்ச்சி கிட்டும். கடினப் பொருள் வியாபாரம் பெருஞ்செல்வத்தைத் தேடிக் கொடுக்கும். எதிராளிதொல்லை சிறிது உண்டு.

**மிதுனம்:**
குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கலாம். பெண் வழி உதவி உண்டாகும். வரவுசெலவு சமநிலை காணும். தாவர உற்பத்தி பலன்கொடுக்கும். புத்திரசோகம் உண்டு. புண்ணியதல யாத்திரை மேற்கொள்ளுவீர்.

**கடகம்:**
வீடுகட்டும், புதுமனைபுகும் வாய்ப்பு உண்டாகின்றது. எதிர்பாராதபணவரவுண்டு. சோதரர்களால் பலவகை உதவிகிட்டும். பெண்களுக்கு ஒரே குதூகலகாலம்தான்.

**சிங்கம்:**
மனதில் பதட்டநிலை, பல விஷயங்களையும் சாதிக்கமுற்படுவீர். தோல்வியும் கிட்டலாம். எதிராளியையும் நேசக்கரம் கொண்டுவர வேற்கவும். அடக்குமுறைக்கு இடமேயில்லை. திடீர்முடிவுஇன்னல்கொடுக்கும்.

**கன்னி:**
கலகங்கள் காத்திருக்கின்றன. தெய்வசிந்தனை தூய வழிகாட்டும். கருணைஉள்ளம் தேவை. நீதிஸ்தலம் போகவும் நேரும். அடுத்தடுத்து பிரயாணம்நிகழும்.

**துலாம்:**
மனதில் குடும்பவிஷயம் பற்றிய வேதனை தலையெடுக்கும். பெண்களின் உதவி கிட்டலாம். பொன்பொருள் சேரும். புத்திரச் சிறப்புக் காண்பீர். மூலரோகம், சலரோகம் தோன்றஏதுஉண்டு. உல்லாசப்பிரயாணம் நிகழும்.

**விருச்சிகம்:**
எடுத்த கருமங்கள் நிறைவேறவில்லையேயென ஏங்குவீர். வார மூன்றும் நாளில் சுபசெய்தி கிட்டும். உத்தியோக உயர்ச்சி, மாற்றம் காத்திருக்கின்றது. தாவர உணவுகளில் நாட்டம் உண்டாகும். தனிவழிப் பிரயாணம் வேண்டாம்.

**தனு:**
வியாபார வகையில் வீழ்ச்சி எதிர் நோக்கும். தனியார்துறை வியாபாரத்தில் ஏமாற்றம் காத்திருக்கின்றது. உல்லாசப் பயணம் உண்டு. வாகனவகைக் கொள்வனவு நிகழும். உடலில் சிறு புண் தோன்றலாம். பெரியார் ஒருவரின் உதவி கிட்டும்.

**மகரம்:**
இல்வேந்தன் 4ல் நீசனுகின்றுர். காணித் தகராறு உண்டு. செலவு கூடும், குடும்பத்தில் சிறு சச்சரவு குடி கொள்ளும். மனதில் நிம்மதிக்கிடமில்லை. திடீர் விபத்துக்களை எதிர் நோக்குவீர். வேலைத்தலத்தில் சிறு தகராறு தலைகாட்டும்.

**கும்பம்:**
சோதரரை நம்பி ஏமாறுதீர். பணவிஷயம் சிக்கல் நிலைகாணும். கருமங்கள் எண்ணியாங்கு நிறைவேறும். தொழிலில் சிறு மாற்றமுண்டு. தொழிலினுல் நிம்மதிக் குறைவு.

**மீனம்:**
அரசியலில் பலர் உன்னத நிலை காணக் கோள்கள் வழிகாட்டும். பணப்பெருக்கு உண்டெனினும் செலவு குறைபடுவதாயில்லை. தொழில்வகைப் பிரயாணம் வாரக் கடைக்கூறில் உண்டு. குழந்தைப் பாக்கியமுண்டு.

## மெஸ்மரின் மெஸ்மெரிஸம்

உயிரினங்களிடையே ஒருவகை காந்தசக்தி உண்டு என்றும் அதனுல் மற்றவர்களை வசப்படுத்தல் முதலியவற்றை செய்யலாம் என்றும் ஆஸ்திரியா டாகடரான 'மெஸ்மர்' என்பவரால் சாதித்துக் காட்டப்பட்ட முறைதான் மெஸ்மெரிஸம் எனப்படுகிறது.

மெஸ்மெரிஸத்தை ஹிப்நாடிஸம் என்றும் அழைப்பர்.

இவ்விதத்தை ஆதிகால இந்தியக்குடிகளும் அறிந்திருந்தார்களாம்.

### மின்சாரவெளிச்சம் பெற்ற முதலிடம்

விஞ்ஞானி எடிஸன் புதிதாக மின்சாரபல்பு ஒன்றை 1879-ல் தயாரித்தார். இதைச்சோதித்துப் பார்ப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் இதுதான்.

அமெரிக்காவிலுள்ள நியூஜெர்ஸி மாநிலத்தைச் சேர்ந்த 'மெல்லோ பார்க்' எனுமிடத்தில் ஒருசாப்பாடு ஹோட்டல் விடுதியின்கூடத்தில்தான் எடிஸன் பல்பை எரியவைத்தார்- வெற்றிகரமாக. உலகிலேயே மின்சார பல்பு வெளிச்சம் பெற்ற முதலிடம் இதுதான்!

ஜோதிஷமணி மேல்கரவை
-தாவ.சிவப்பிரகாசன்-

'பிரபல எழுத்தாளர்களின்'
நவீனங்கள், நாவல்கள், சிறுகதைகள்
சொற்ப செலவில் இரவல் எடுப்பதற்கு
சிறந்ததோர் ஸ்தாபனம்
'சிவானந்தாஸ்'
LENDING LIBRARY
மற்றும்
ஆடவர் பெண்மணிகளுக்கேற்ற வாசனைப் பொருட்களும், சாய்ப்புச் சாமான்களும் மற்றும் தேவையான பொருட்களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்
'சிவானந்தாஸ்'
49, 51 பிரதானவீதி, தலைமைக்காரியாலயம் யாழ்ப்பாணம். 'பொகுமால்ஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கானல்

## செல்வி. நளாயினி வைத்திலிங்கம்

விரைந்தோடும் கால வெள்ளத்திலே அலைகின்ற இவ்வுலகையும், வாழ்க்கையின் சுவையான கட்டங்களையும் வெறும் போலியென உடைத்துக்காட்டும் மனப்பான்மையை ஆக்குகின்ற சூழல் அது. 'சே, இதுவா வாழ்க்கை' என்ற சிந்தனையை அங்கு நிகழும் ஒவ்வொன்றும் தூண்டிவிடும் இயற்கையின் பாதகத்தாலோ. அன்றி என்றோ செய்த பாவத்தின் எதிரொலியாகவோ உடலைப் பற்றிக்கொண்ட நோயின் கொடுமையை மறந்து நோயாளிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். நோய் கொடுக்கும் மிதமிஞ்சிய வேதனையாலும், வெய்யிலின் உக்கிரத்தாலும் ஒரு சிலர் மட்டும உறக்கமின்றிப் படுக்கையில் புரள்கின்றனர். சாதாரணமான மக்களைப் போலத் தம்மாலும் வாழ்க்கையை இரசிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் சிலரைக் குடைகிறது......

''எஃ...க்!''

நெஞ்சை ஊடுருவி, இதயத்திலே மோதும் அந்த விம்மலோசையின் அலைகள் 'வார்ட்டில்' பரவித் தேய்கின்றன. மனத்தின் கவலைகளின் விசையால் விம்மலாக வெளித்தள்ளப்படும் அம் மெல்லிய ஒலி அலைகள். அந்தப் பேதையின் உணர்ச்சிகளோடு பின்னிப் பிணைந்து வெளிவருகின்றன.

இருபத்தியாறே வயதும், இளமைத் துடிப்பும் கொண்ட அவளுக்கு அமைதியான வாழ்வு கிடைக்கவில்லை. அவள் விதவை!

குருடி!

பிறவுலகம் அவள் முன்னே இருண்டு கிடக்கிறது. ஆனால் அவள் மனத்திலோ நம்பிக்கையொளி அகன்று சுடர் விடுகிறது. தான் பெற்ற செல்வத்தைப் பெற்று மூன்றுண்டுகளாயும் ஒரு தடவையாவது ஆசை தீரக் கண்களால் பார்க்கக் கிடையாத பேறு என்றாவது ஒரு நாள் கிட்டியேதீரும் என்ற நம்பிக்கையிலே வாழும் அபலை அவள். காத்திருந்து காத்திருந்து மனம் திரைந்து அழுகையாகப் பொங்குகிறது.

விம்மல்களோடு துணையாக வடிந்தோடும் நீர்த்துளிகள் தலையணையோடு ஊறி அழிகின்றன. மனத்திற் சுழியிட்ட ஒரே ஆசைக்காக ஒரு கணத்தை ஒரு யுகமாகக் காணும் நரக வேதனையையெல்லாம் தாங்கி சோர்ந்துவிட்ட நிலையிலும் தன் குழந்தையின் உருவத்தை நெஞ்சிற் பரவிய ஒளியிலே அவள் கண்டு மகிழ்கிறாள். குழந்தையின் கற்பனை உருவம் தோன்ற ஆரம்பித்ததும் விம்மல்களின் வேகம் மெது மெதுவாகக் குறைந்து தேய்கிறது. மன அரங்கத்திலே அவள் குழந்தையின் உருவத்தோடு குலவி மகிழ்கிறாள். அவள் 'வார்ட்டை' மறக்கிறாள்...ஆஸ்பத்திரியை மறக்கிறாள்... ஏன், உலகையே மறந்து தன் மதலையோடு விளையாடுகிறாள்!

குழந்தையின் பிஞ்சுக் கரங்களை நீவி விடுகிறாள்' தலையைக் கோதி. முகத்தை வருடி துடிப்போடு வாரி முத்தமிடுகிறாள்.

'டக், டக்!'

பல கிழமைகளாக ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து பழக்கப்பட்டுவிட்ட அவள் மனம் 'டாக்டரின்' வருகையை அறிந்துவிடுகிறது. குழந்தையை அணைத்திருந்த கைகளை எடுக்க மனமில்லாமல் மெதுவாக எடுக்கிறாள்.

''ஐயா...''

தன் குழந்தையைத் தனக்குக் காட்டப்போகும் தெய்வமே அந்த டாக்டர் என முற்றாக நம்பி அவள் பணிவாகக் குழைந்து அழைக்கிறாள்.

''என்ன?'' பரிவோடு வினவுகிறார் டாக்டர். நோயாளிகளுடனேயே இரவு பகலாக உறவாடி அவர்களின் உணர்ச்சிகளை வெகு தெளிவாக ஆராய்ந்தறிந்து அதற்கேற்ப மாறிவிட்ட அவரது மனத்தின் மென்மையான சுபாவம் அந்தக் குரலிலே கனிந்து தொனிக்கிறது.

''குழந்தையை நான் ஒருக்கால் பார்ப்பேனே ஐயா? எனக்குப் பார்வை கிடைச்சிடுமா?''

''கட்டாயமாக ஒருக்காலல்ல வாழ்நாள்முழுக்கவுமே குழந்தையையேபார்த்து சந்தோஷப்பட்டுக் கொள்ளப் போகிறாய்- அமைதியாகப் படுத்திரு'.

டாக்டர் கனிவான குரலிலே கூறினாலும் அது முற்றிலும்உண்மையாகுமென்றில்லையல்லவா? கடமையிலே மனம் லயித்து ஒன்று பட்டுப் போகும். அத்தொழிலில் அடுத்தகணம் இறக்கப்போகிற ஒருவனுக்கும் கூட டாக்டர் கூறுவது இப்படிப்பட்ட தேறுதல்மொழியைத்தானே!

அவள் நெஞ்சில் உவகை பொங்க, என்றோ இருண்டுவிட்ட தன் கண்களின் மடல்களை மென்மையாக மூடிக் கொள்கிறாள். டாக்டரின் சொற்கள அளித்த நம்பிக்கை உருவாக்கிய பூரிப்பினால் நீர்த்துளிகள் கண்களில் திரண்டு மடல் இடுக்கில் திரையாகக் கோவையிடுகின்றன. தடம் புரண்டு கொண்டிருந்த அவள் நினைவுகள் கண்ணீர்த் திரையிலே சுழன்றோடுகின்றன, தேய்ந்த கனவாக பழைய நிகழ்ச்சிகளாக.

0 0 0

அழகையெல்லாம் ஒருங்கு சேர்த்து நவீன பாணியில் வளர்ந்து கொண்டிருந்தது அக்கட்டிடம். வேலையாட்களின் அயரா உழைப்பினாலும், திறமையாலும் சிறப்பாக உருவாகி மணவறைக்குச் செல்வதற்காக அலங்கரிக்கப்படும் மணப்பெண்ணின் நிலையில் அந்தக் கட்டிடம் காட்சியளிக்கின்றது.

அதன் உயர்ந்த முகப்பிலே வளர்பிறையாக வளர்கிறது, பாலமுருகனின் அருட்தோற்றம். அதை உருவாக்கிக்கொண்டிருந்த கலைஞனின் மனம் சூழலை மறந்து அந்தச் சிலையோடு தற்காலிகமாகச் சங்கமித்து நிற்கிறது. வேலேந்திய கைகள், சிலம்பணிந்த பாதங்கள், அருள் பொழியும் கண்கள்... எல்லாமே உருவாகிவிடுகின்றன. இறுதி வேலையாக முருகனின் இதழ்கட்கிடையே ஒரு குறுநகையைத் தோற்றுவிப்பதற்காக இதழ்களை உளியால் தக்கவிதமாகச் செதுக்கிக் கொண்டிருக்கிறான் அவன். மனத்திலே நிரம்பி வழிகின்றன தனக்கு வரப்போகிற குழந்தை பற்றிய நினைவுகள். அவன் நாட்கூலி பெற்று வயிறு வளர்க்கும் சாதாரண கூலியான்தான் என்றால் என்ன? அவனும் மனிதனல்லவா? செதுக்கிக் கொண்டிருந்த உருவிலே தன் குழந்தையைக் கண்டு மகிழ்கிறான். அச்சிறு சிலையின் இதழ்களில் புன்னகையின் சுவடு தெரிய ஆரம்பிக்கிறது. அவன் தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையாகவே அதனை எண்ணி விடுகிறான்.

மெதுவாக வானம் இருண்டு வருகிறது மெல்லிய குளிர்காற்றாகத் தொடங்கிய காற்றுவேகம் அதிகரித்துச் சுழன்றடிக்கத் தொடங்குகிறது.

பளீரெனத் தோன்றி மறைந்தது ஒரு மின்னல். தன்னைமறந்து நினைவுகளில் மூழ்கியிருந்த அவன் திகைத்து விழிக்கிறான். இது என்ன வெளிச்சம், எங்கிருந்து வந்துதோ?' என்று முதலில் அவன் உணர்வு ஆராய்ந்தது. நெடுநேரமாகக் கற்பனையில் ஆழ்ந்திருந்ததனால் சுயநிலை மெல்ல மெல்லவே அணுகுகின்றது, தன்னிலையை உணர ஆரம்பிக்கிறான்.

'ஐயையோ இறங்குங்கோ! இறங்குங்கோ என்கிறன்' கீழே நின்று துடியாய்த் துடிக்கிறாள் பூரணம்—அவன் மனைவி.

'என்னங்கோ காற்றுப் பலமாக அடிக்கிறதற்குள்ளாக இறங்கி வந்துடுங்கோ எல்லாரும் இறங்கிப் போய் விட்டார்கள்'

நடப்பதை அப்போதுதான் உணர ஆரம்பித்த அவன் தட்டுக்கெட்டு முகட்டுநுனியில் நின்று வழுகுகிறான். அந்தநேரம் பார்த்து அவன் விதியை நிர்ணயிக்கச் சுழன்றடிக்கிறது காற்று.

காற்று வேகத்தோடு முகட்டிலிருந்து வழுவிய அவன் சுழன்று எங்கோ தூரதூக்கியெறியப்படுகிறான்

அதேகணம் பயங்கரமான மின்னல்ஒளி திடீரெனப் பரவுகிறது.

அவனது அலங்கோல நிலையைக் கண்டு துடிக்கும் துர்ப்பாக்கியநிலை பூரணத்திற்குக் கிடைக்காதபடி அதிர்ஷ்டவசமாக மின்னல் துணைக்கு வருகிறது. அவள் கண்ணின் ஒளியை மின்னல் பறித்துக் கொண்டு கலந்துபோய்விடுகிறது'

அவனது இட்சிய உயிர் புயலில் அணைந்த தீபமாகிவிடுகிறது. குழந்தையைப் பற்றிய எண்ணங்களோடு கலந்துநின்று சிலையில் உருவாகிவிட்ட தன் கற்பனைக் குழந்தையைக் கண்டவன் சொந்தக் குழந்தையைப் பார்க்காமலே போய்விடுகிறான்

அவள் கடைசி விநாடியில் தன் கணவனைக் காணக் கிடையாதது மட்டுமன்றித் தன் குழந்தையையும் அது பிறந்து மூன்றுண்டுகளாக ஒருதடவையாவது காணமாட்டாத கபோதியானாள்.

தந்தையின் உயிரும், தாயின் பார்வையும் போய்விட்ட நிலையில் பிறக்கிறது அந்தச் சிறு மதலை அதுஉலகத்தைப்பற்றி எதுவும் தெரியமுடியாமல் தாயின் மடியை மட்டும் தன் உலகமாகப் பற்றிக்கொண்டு வளர்கிறது. மூன்றுண்டுகளாகப் பட்டகஷ்டம் அவளுக்குப் போதும் போதுமென்றாகிவிடுகிறது

ஆலமரத்தின் நிழலே வீடாக, குழந்தையின் குரலே வாழ்க்கையின் இன்பமாகக்கண்டு மகிழ்கிறாள் பேதை. குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு வீதியோரத்திலே அந்த மரத்தின்கீழிருந்து வெகு உருக்கமாகப் பாடுவாள் அவள் கணவனை இழந்தாலும் குருடியானாலும், குழந்தையைப் பார்க்கமுடியாத வளானாலும் அவளிடம் குரலினிமையும் பாட்டுத்திறனும் யாவரும் கேட்டு பிரமிக்கத்தக்க விதமாக அமைந்திருந்தது. ஒருதடவை மட்டும் காதால் கேட்கிற பாடல்களை நினைவில் பதியவைத்து அப்படியே தத்ரூபமாகவும், இனி

( 12-ம் பக்கம் பார்க்க )

படிப்பனைக் கதை

# கஜகேசரியும் சீடனும்

விக்கிரமசிம்மனென்னும் அரசனுடைய தர்பாரில் அறுபத்துநான்கு கலைஞானங்களிலும் வல்ல நிபுணர்கள் அரண்மனை வீரர்களாக விளங்கி வந்தனர். அவர்களுள் கஜகேசரி என்பான் மல்யுதத வீரன் அவனிடம் யானையின் பலமும் சிங்கத்தின் ஓர்மமும் ஒருங்கே அமையப்பெற்றிருந்த காரணத்தினால் அவனுக்கு கஜகேசரி என்னும் பெயர் உண்டாயிற்று

முந்நூறு றுத்தல் எடையுள்ள அவனது மலைபோலும தேகத்தில் தசைநார்களெல்லாம் விம்மிப் புடைத்து இரும்புக் கோளங்களென இறுகியிருந்தன. அவன் ஒருகையால் விடும் குத்து நூறு சம்மட்டி அடிக்குச் சமமானது அழுங்குப் பிடி, கரடித்தழுவல், நண்டு இடுக்கு' வெங்கணுந்திச் சுருக்கு முதலிய நூற்றைம்பது விதமான பிடிகளையும் பூட்டுகளையும் அவன் அறிந்திருந்தான். உலகில் எந்த வீரனாவது அவனோடு மல்யுத்த சண்டை போடுவதற்கு முன்வரவில்லை.

கஜகேசரிக்குப் பல சிஷ்யப்பிள்ளைகள் இருந்தார்கள். ஆயினும் அவன் அகோரமூர்த்தி என்ற இலைஞனிடத்தில்தான் அதிகம் பிரியம் காட்டி வந்தான். இளைஞனும் தனது குருவினிடத்தே அபார அன்பு செலுத்தி அவருககு வேண்டிய சகலவிதமான சிசுருஷைகளையும் செய்து வந்தான். நாளடைவில் அகோரமூர்த்தியும் மல்யுத்த வித்தையில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும் வகையில் முன்னேறி விட்டான். ஆனால் கஜகேசரி தனக்குத் தெரிந்த நூற்றைம்பது நுட்பமான பிடிகளில் நூற்று நாற்பத்தொன்பது பிடிகளையும் தனது சீடனுக்குச் சொல்லிக்கொடுத்து ஒன்றைமட்டும் சொல்லிக்கொடாமல் ஒளித்துவைத்திருந்தான்.

நாட்கள் பல சென்றன. அகோரமூர்த்தியின் புகழ் தேசம் முழுவதுப் பரவலாயிற்று அவனைவிடச் சிறந்த மல்யுத்த வீரன் உலகில் இல்லையென்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். இது சாடையாக அகோரமூர்த்தியின் காதுகளிலும் விழுந்தது. இறுமாப்பும் மிடுக்கும் தலைக்கேறின. ஒரு நாள் அவன் அரசன் முன்னிலையில் நின்றுகொண்டு பின்வருமாறு உளறினான்.

[ வி. என். பி. ]

'ஓ, அரசனே! மல்யுத்த வித்தையில் இனி எவரும் என்னை மிஞ்சமுடியாது. கஜகேசரி எனது குருவானவர் என்று பார்க்கிறேன், இல்லாவிட்டால் அவர் எனக்கு எம்மாத்திரம்? குருவுக்குரிய மரியாதையைக் கொடுக்கவேண்டாமா?'

இந்தப் புளுகைக் கேட்ட அரசனுக்கு அவன்பால் கோபமும் வெறுப்பும் ஏற்பட்டன. நேற்று வந்த இந்த முளையான் இப்படி அவமரியாதையாக என்முன் பேசுகிறானே என்று எண்ணிக் கொண்டு, 'சரி அப்படியானால் நாளை நீயும் கஜகேசரியும் என்முன்னே மல்யுத்தம்புரியுங்கள். யார் வெற்றியடைகிறாரோ அவருக்கு ஓராயிரம் வராகன் பரிசளிக்கப்படும்' என்று தீர்ப்பளித்தார்.

கஜகேசரியும் சீடனும் மோதுவதைப் பார்க்க அரசனும் பரிவாரங்களும் பிரதானிகளும் மகாஜனங்களும் கூடியிருந்த அரங்கத்துக்கு வந்ததும் அகோரமூர்த்தி தோளிலும் துடையிலும் தட்டிஆர்ப்பரித்தான் மதம் பிடித்த யானைபோல் குமுறினான். இதைக்கண்ட கஜகேசரி 'ஒஹோ இவன் என்னிலும் பார்க்க எத்தனையோ வயது இளையவன். வாலிப முறுக்கும் துடிதுடிப்பும் அவன் சார்பிலிருக்கின்றன. என் மரியாதையைக் காப்பாற்ற ஒரே ஒரு வழி தானுண்டு' என்று நினைத்தவனாய் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

போட்டி ஆரம்பமாகியது. கஜகேசரி எடுத்த எடுப்பிலேயே அகோரமூர்த்திக்கு சொல்லிக்கொடாமல் வைத்திருந்த அந்த நூற்றைம்பதாவது பூட்டைப்போட்டு எதிரியை திக்குமுக்காடச் செய்து அவனை அப்படியே அலாக்காக ஆகாயத்தில் தூக்கி அரங்கத்துக்கு வெளியே சுழற்றி வீசினான். அரசனும் சபையோரும் கைகொட்டி ஆரவாரித்தனர்.

அகோரமூர்த்தி தலைகுனிந்தவனாய் கஜகேசரியிடம் வந்து வணங்கி, 'குருநாதா! எனக்குச்சொல்லிக்கொடாத ஒரு பூட்டை நீர் என்மீது உபயோகித்தது நியாயமா?' என்று கேட்டான்.

அதற்கு கஜகேசரி சொல்வான்; 'ஓ, என் பிரிய சீடனே! கேளாய்! நான் அதையும் உனக்கு சொல்லிக்கொடுப்பேனாகில் இன்று இச்சபையில் என் கதி என்னவாயிருக்கும் என்று நினைத்துப்பார். தன்னிடமுள்ள [illegible] யும் பிறருக்கு வெளியிட்டால், அது அவர்களிடம் பொறாமையை உண்டாக்கும். அவற்றை அபகரிக்க எது வேண்டுமானாலும்செய்யத்துணிவார்கள். அறிவிற் சிறந்த பெரியோர் தம்முடைய உடமைகளை இலகுவில் வெளியிடமாட்டார்கள். இதை நீயும் அறிந்திரு.'

படிப்பனை: உடையது விளம்பேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சிப் பகுதியில்

# சிறுபோக செய்கையில் செழிக்கும் பயிர்கள்: முயற்சி நிச்சயம் பயன் தரும்

உப உணவுப் பயிர்களையும், பசுந்தாட் பயிர்களையும் பண்டைக் காலம் தொட்டு யாழ்ப்பாண விவசாயிகள் செய்கைபண்ணி வருகிறார்கள். பாசிப்பயறு, பயற்றை, சணல் போன்ற அவரைப் பயிர்களினால் இருவித நன்மைகள் பெறப்படுகின்றன.

1 அவரைப் பயிர்களில் உள்ள வேர் முடிச்சுகளில் பக்ரீறியங்கள் உண்டு, இவை காற்றிலுள்ள நைதரசனை நிலத்துள் சேமித்து விடுகின்றன. அத்துடன் இப்பயிர்களின் இலைகளும் தரையில் சேரும்பொழுது போதிய சேதனப் பசளையைக் கொடுத்து நிலமக்கை அதிகரிக்கின்றன.

2. கடலை, உழுந்து, துவரை போன்ற பருப்புவகைகள், மாமிசம் உண்ணாதவர்களுக்கு சிறந்த புரத உணவாகின்றன.

நெற்செய்கைக்குப்பின் சணலைப் பயிரிட்டு அது பூக்கும் பருவத்தில் அழித்து உழவு செய்து நிலத்துடன் சேர்க்கும்போது பத்துத்தொன் பசுந்தாட்பசளை நிலத்துக்குக் கிடைக்கின்றது. இதனால் தரையின் வளம் நன்கு அதிகரிப்பதுமல்லாமல் காலபோகத்தில் பெருகக்கூடிய புல், பூண்டு களைகளைக் கட்டுப்படுத்தி நெல்விளைவை அதிகரிக்க உதவி கமக்காரர்களுக்கு நன்மை பயக்கிறது. அத்துடன் தரைக்கு இடவேண்டிய யூறியா போன்ற நைதரசன பசளைகளை அரைப் பங்காக்குதற்கும் உதவுகிறது.

கிளிநொச்சிப்பகுதி விவசாயிகள் யாழ்ப்பாணத்திலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள். ஆகையால் அவர்களுக்குப் பாசிப்பயறு, ஆலிங்ரன் பயறு. நிலக்கடலை, சணல் போன்ற அவரைப் பயிர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி அதிகம் கூற வேண்டிய அவசியமில்லை? சோயா போஞ்சி தவிர்ந்த ஏனையவைகள் அவர்களுக்குப் புதியனவல்ல. விசேட நெல் அபிவிருத்தி இயக்கப் பகுதிகளிலிருந்தும், விசாலிப்புப் பகுதிகளிலிருந்தும் குறிப்பிட்ட விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு 'ஏலகரா' விசேஷ திட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு இப்பயிர்கள் செய்கை பண்ணப்படும் முறைகளை நேரில் கண்டறிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட பயிரினங்களை 1970-ம் ஆண்டு நெல் வேளாண்மைக்குப் பின்



— எம். நடராஜா —

(மேலதிக மா. வி. வி. உத்தியோகத்தர்)

பயிர் செய்வதற்கு இவற்றின் விலைவாசிகளையும், ஏக்கர் ஒன்றிற்கு தேவைப்படும் நடுகை விதைகளையும் அதனால் கிடைக்கக்கூடிய நன்மைகள் என்பனவற்றைப்பற்றி கிளிநொச்சிப்பகுதி விவசாயிகள் தெரிந்திருப்பது அதிக நன்மையானது.

### (அ) பாசிப்பயறு

இது இந்துக்களின் திருமண வைபவங்களிலும், அமரகிரியைகளுக்கும் உபயோகமானது.

இனங்கள்:- M I 1 பளபளப்பான பெரிய மணிகள். இவை மகா இலுப்பள்ளம் ஆராய்ச்சி நிலையத்தில் தெரிவு செய்யப்பட்டன.

M. I 2. சிறிய மணிகள்.

**உவர்வலயத்தில் பயிரிடும் காலங்கள்**

பெரும்போகப் பயிராகக் கடும்மழையின்பின் தைமுற்பகுதியில் பயிர் செய்யலாம். சிறுபோகப் பயிராக பங்குனி பிற்பகுதி சித்திரை முற்பகுதியில் பயிர் செய்யலாம் ஓர் ஏக்கருக்கு வேண்டிய விதையளவு 12—15 இருத்தல். எதிர்பார்க்கக் கூடிய விளைவு 4—5 அந்தர். உரிய காலத்தில் பசளையிட்டு பயிர் செய்தால் ஏக்கருக்கு 6—8 அந்தர்வரை விளைவு பெறலாம். இதன் ஏக்கர் பயிர்ச் செய்கைச் செலவு 200/- ரூபா உத்தரவாத விலை அந்தர் ஒன்றுக்கு 67 ரூபா 20 சதம் இதனால் சுத்தலாபம் 200/-க்கும்மேல் ஒரு ஏக்கருக்குக் கிடைக்கிறது. வித்துநீக்கியபயற்றுச் செடி சிறந்த கால்நடைத் தீனியாகவும் உதவுகிறது.

### 2. ஆலிங்ரன் பயத்தை

இது சிறந்த மரக்கறி உணவு. பருப்பு வகைக்குப் பதிலாகவும், உணவு வகைகளில் பாவிக்கலாம் ஏக்கருக்கு வேண்டிய விதையளவு 10 றூத்தல் 3 மாதத்தில் விளைவைப் பெறலாம் உலர் வலயத்தில் பயிர் செய்யக் டியகாலம் நெல் வேளாண்மைக்குப்பின் பங்குனி முற்பகுதி, விளைவு சிறந்த பயிர்ச் செய்கை முறையினால் 800-1000 றூத்தல் (ஏக்கர் ஒன்றுக்கு) பெறலாம். செலவு- 200 - 250 ரூபா. சுத்தலாபம் 250-300ரூபா. உத்தரவாத விலை ஒரு அந்தருக்கு 56 ரூபா.

### 3. நிலக்கடலை

கிளிநொச்சிக் கமக்காரர்களுக்கு இதுபற்றி நன்கு தெரியும். இனம்: அ. A20 ஆ. ஸ்பானிஸ் சிவப்பு இ. A 92 ஒரு ஏக்கருக்கு வேண்டிய நடுகை விதையளவு கோதுடன் 100-120றூத்தல் விளைவு 8-10 அந்தர் ஒரு ஏககருக்கு பயிர்ச் செய்கைச் செலவு ஒரு ஏக்கருக்கு 300 ரூபா சுத்தலாபம் 200 - 250 ரூபா:

உத்தரவாத விலை 49/-28 சதம். சந்தை மதிப்பைப் பொறுத்து இறாத்தல் 70-80 சதம் வரை கூடிய விலையிலும் விற்க முடியும். அறுவடைக்குப்பின் தண்டுகள் கால்நடைத் தீனியாகவும் உதவுகிறது.

### 4. சோயா போஞ்சி

இவ்வினம் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகளுக்குப் புதியதொன்றாகையால் இது பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் இது ஓர் முக்கிய பயிராகச் செய்கைபண்ணப் படுகிறது. வித்துக்களிலிருந்து தாவரநெய் பெறப்படுகிறது: இது கோழித் தீனியாகவும், மாட்டுத்தீனியாகவும் பயன்படுகிறது. மீன் தூளுடனும், கோதுமைத் தானியத்துடனும் கலக்கப் படுகிறது. இதன் பிண்ணாக்கு சிறந்த கால்நடைத்தீனியாகும், கோதுமைமாவுடன் கலந்து பிஸ்கற்றும் தயாரிக்கலாம்.

**மண்வகை:** இதனைச் செய்கைப்படுத்த நீர் வடியும் தன்மையுள்ள இருவாட்டி மண் வாய்ப்பானதாகும். நீர்த்தேக்கம் இருத்தலா

(14-ம் பக்கம் பார்க்க)

## கோயிலும் கலையும் (2)

# சோடனைகளும் சின்ன மேளமும்

இன்றைக்குச்சரியாகஏழு வருடங்களுக்கு முன்பு 16-6-63-ல் வெளியான 'ஈழநாடு' இதழில் இதே 'கோயிலும் கலையும்' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியிருந்தேன்.

'திருவிழாக் காலங்களில் புகுந்திருக்கும் இன்னொரு ஆபாசம் சிகரச்சோடனை. வானோங்கி வளர்ந்திருக்கும் மாளிகைபோலச் சிகரத்தை வாசலில் கட்டுகிறார்கள் அதற்கு இரண்டு மூன்று மாடிகள் இருப்பதுபோலத் தோன்றும், ஒரு மாடியின் ஜன்னலில் முருகக்கடவுளின் உருவம் தெரியும். அதற்கடுத்த அறையில் எம். ஜி. ஆர். தலையைச் சிலுப்பிக் கொண்டு நிற்பார்! ஒன்றில் சரஸ்வதியின் உருவம்காட்சியளிக்கும். மற்றதில் சாவித்திரி கணேசன் ஒய்யாரப்புன்னகை புரிவார். இந்த அற்புதமான காட்சியைப் பார்க்கும்போது தெய்வங்கள் சினிமா நட்சத்திரங்களின் மட்டத்துக்கு இறங்கிவிட்டனவா, அல்லது சினிமா நட்சத்திரங்கள் தெய்வங்களின் ஸ்தானத்துக்கு உயர்ந்துவிட்டனவா என்ற பிரச்னை உண்டாகிறது.... தெய்வத்துக்கு உருவத்தைக் கொடுத்தது ஆதித்தவறு, பிற்பாடு அதை மானிடர்களோடு சமமாக நின்றுதாண்டவமாடச் செய்வது இமாலயத் தவறு!

இவ்வருடத் திருவிழாக்களில் நான் கண்ட சிகரச் சோடனைகளில் சினிமாக்காரரைக் காணவில்லை. இதுமிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆயினும் இராத்திருவிழாச் சோடனைகளில் இன்னும் எவ்வளவோ அபிவிருத்திக்கு இடமிருக்கிறது.

ஆண்டவனுடைய உருவத்தையும் சன்னிதானத்தையும் அலங்கரிப்பது ஒருஅபூர்வமான கலை. ஏழெட்டுச் சிகரங்களைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் நிறுத்தி ஒவ்வொன்றுக்கும் கண்களை உறுத்தும் ஆயிரக்கணக்கான வெளிச்சங்களைப் பூட்டுவது அழகுக்கலையாகாது. எதற்கும் ஓர்அளவு வேண்டும். உச்சிமுதல் உள்ளங்கால் வரை பொன்னாபரணங்களைச் சுமந்துநிற்கும் பெண்ணைக் கண்டவுடனே பரிதாபம் வருகின்றது. பிரமிக்கிறோம், ரஸிப்பதில்லை. கழுத்தில் ஒரு மெல்லிய சங்கிலியும் கொண்டையில் ஒரு பூவும் அணிந்துவரும் ஆரணங்கைக் கண்டதும் இன்னுமொருமுறை பார்க்கவேணடும்போலத் தோன்றுகிறது. ஆயிரம் விளக்குகளுக்குப் பதிலாக நூறு விளக்குகளைப் பொருத்தமான இடங்களில் பூட்டினால் கண்ணுக்கு மிருதுவாகவும் இருக்கும்.

கோயில் வீதிகளில் பெரிய பெரிய விருட்சங்கள் நிற்கின்றன. கொத்துக் கொத்தாக சின்னஞ்சிறு கலர் பல்புகளை மரக்கிளைகளினூடே தொங்க வைத்தால் எவ்வளவு லட்சணமாயிருக்கும். சிகரங்களுக்குப் பதிலாக குலையீன்ற வாழைகளையும் மாவிலைத் தோரணங்களையும் தாளங்காய் முதலிய பச்சனவுள்ள இலைகுழைகளையும் மலர்களையும் கோயில் வீதிகளில் ஜோடித்து விட்டால் கண்ணுக்கு எவ்வளவு குளுமையாகவும் இதமாகவும் இருக்கும். செலவும் சுருக்கமாய் முடிந்துவிடும்.

சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்குமுன்பு சின்ன மேளம் என்றவுடனே திருவிழாவுக்கு சனங்கள் அள்ளுப்படுவது இயல்பு. அதற்கு நியாயமான காரணமும் இருந்தது. அழகான பெண்கள், இனிமையான சங்கீதம், ஒயிலான நடனம் இவை யாவும் அக்காலத்து சின்னமேளங்களில் இருந்தன இக்காலத்தில் இவை எதுவுமே கிடையாது. அவலட்சணமான பெண்கள், அபஸ்வரமான சங்கீதம், ஆபாசமான நடனம் இவற்றைத்தான் இந்நாட்களில் காணமுடிகிறது. சின்ன மேளம் என்றாலுமகூட சனங்கள் இப்பொழுது அள்ளுப் படுவதில்லை.

அழகான பெண்களை வேண்டுமென்றால் இப்பொழுது பஸ் ஸ்ராண்டுக்குப் போனால் பார்க்கலாம். அறுபத்தைந்து சதமுண்டானால் பத்மினியையும் ஜெயலலிதாவையும் பார்க்கலாம். கோயிலுக்கு ஏன் போக வேண்டும்.

அன்றொருநாள் ஒரு சதுர்க் கச்சேரி மேடையில் சுவாமிக்கு எதிரே ஒருவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கழுத்தில் 'அக்கோடியனை' மாட்டி வாசிக்கிறார். காகக் குஞ்சுகள் போல இரண்டு பெண்கள். அவர்களுடைய சாரீரமும்

## லாவண்யம்

அப்படித்தான். ஆர்மோனியம் நாலுகட்டை. மிருதங்கம் மூன்றரைக்கட்டை. அக்கோடியன் நாலே கால், பெட்டைகள் ஐந்தேகால்! அவர்கள் துள்ளிக் குதிக்க மேடை தொம் தொம்மென ஸ்பீக்கர் அலற— அப்பப்பா! ஒரே அமர்க்களம் தான். ஏண்டா இதற்குள் வந்து சிக்கினோம் என்றாகி விட்டது.

அந்தக்காலத்தில் குலப் பெண்கள் நாட்டியமாடுவது இழிவான செயல் என்று கருதப்பட்டது. இளம்பெண்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்யாத காலம் அது. இப்பொழுது எல்லாம் மாறிவிட்டன. பெண்கள் மேடைகளில் பாடுகிறார்கள். நாட்டியமாடுகிறார்கள் நாடகங்களிலும் [illegible] நடிக்கிறார்கள்.

நன்றாகப் பரதநாட்டியம் ஆடக்கூடிய நமது குலப் பெண்கள் கோயில் சன்னிதானங்களில் நடனமாடி தங்கள் கலையை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வதில் என்ன குறையிருக்கிறது. பொதுமேடைகளில் அவர்களைப் பார்த்து ரசிக்கும் பொதுமக்கள்தானே கோயிலிலும் பார்ப்பார்கள் சின்னமேளம் என்ற சொல்லுக்கு ஒருகாலத்தில் ஏற்பட்டிருந்த இழுக்குத்தான் இன்னமும் இதற்குத் தடையாக இருக்கிறதென்று நினைக்கிறேன். இப்பொழுதுதான் அற்றுப்போய்க்கொண்டிருக்கிறதே. குலப்பெண்கள் கோயில்களில் நடனமாடத் தொடங்கிவிட்டால் 'சின்ன மேளம்' இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

உயர் குடும்பத்திலுள்ள பணக்காரர் பலர் கோயில்களில் திருவிழா செய்கிறார்கள். இவர்கள் தங்கள் பிள்ளைகளையோ அல்லது பரதநாட்டியம் பயின்ற வேறு பெண்களையோ தங்கள் திருவிழாக்களின்போது நடனமாடச் செய்யலாமே அதில் எவ்விதமான தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உள்ளத்தில் களங்கம் இல்லாவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். திருவிழாக்களுககு வரும் சனங்கள் குலப்பெண்கள் நாட்டியம் ஆடுகிறார்கள் என்று தெரிந்தால் சின்னமேளத்தோடு சம்பந்தமான சேஷ்டைகளை விட்டுவிட்டு அடக்க ஒடுக்கமாக இருந்து அனுபவிப்பார்களென்பது திண்ணம். யாராவதுஒருவர் முன்னோடியாக நின்று வழிகாட்டிவிட்டால் போதும் மற்றவர்கள் மளமளவென்று பின்பற்றுவார்கள்.

பரந்த நோக்கும் முற்போக்கான எண்ணமும் உள்ளவர்கள் நினைத்தால் இந்தக் காரியம் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் திரைப்பட நடிகர் ஜெயகாந் விரைவில் தமிழ்ப் படத்தில் தோன்றுவார்!

"இந்த நாட்டுத் தமிழ்க் கலைஞர்களுக்கு ஆற்றலில்லையா? திறமையில்லையா? மூன்றும் தர, தரமற்ற தமிழ்ப் படங்களால் இந்த நாட்டுத் தமிழ் மக்களின் உள்ளங்கள் கெட்டுக் குட்டிச்சுவராகப்போவதுடன், சமூகமும் கெட்டுப் பாழாகிவிடுகிறதே! இந்த நாட்டில் நல்ல தமிழ்ப் படங்கள் தயாராகவேண்டும். அதற்கான நல்ல சூழ்நிலை இப்போது உருவாகிவருகிறது" என்று உணர்ச்சியுடன் என்னிடம் சொன்னவர், சிங்கள திரைப்பட நடிகரும், தமிழ் நாடக நடிகருமான ஜெயகாந்த் என்ற நமசிவாயம்தான்.

'பாரவலலு' என்ற சிங்களப் படத்தின் மூலம் திரைப்பட உலகுக்குள் புகுந்துகொண்ட இவர் 'கலையரங்கம்' வாசகர்களுக்குப் பழையவர்தான்!

கொழும்பிலிருந்து தனது பிறப்பிடமான அச்சுவேலி கதிரிப்பாய்க்கு வரும்போது என்னைச் சந்திக்காமல்போக மாட்டார். கலையென்றால் போதும், உணர்ச்சிவசப் பட்டுவிடுவார்!

திரைப்படத் தமிழ் கலைஞர் சங்கமொன்றை ஜெயகாந்த், தமிழ்த் திரைப்பட நடிகரும், தயாரிப்பாளருமான 'நிர்மலா' ரகுநாதன், எழுத்தாளர் மு. கனகராசன் போன்றவர்கள் இப்போது கொழும்பில் ஆரம்பித்திருக்கிறார்கள். தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், திரு. வி. பொன்னம்பலம் ஆகியவர்கள் இந்தச் சங்கத்தின் போஷகர்கள். ஜெயகாந்த் இந்தச் சங்கத்தின் இணைக் காரியதரிசிகளில் ஒருவர்!

இளைஞரான இனியவர் ஜெயகாந்த் பேசிக்கொண்டேயிருந்தார். 'இறக்குமதி செய்யப்படும் தமிழ்ப்படங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கமே இறக்குமதியைப பொறுப்பேற்கவேண்டும். இந்தத் திட்டங்கள் புதிய ஆட்சியில் நிறைவேறத்தான் போகிறது; வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகும் 'குப்பை' தமிழ்ப் படங்கள் தடை செய்யப்பட்டு, நல்ல தமிழ்ப் படங்களை மட்டும் இறக்குமதி செய்யவேண்டும். மக்கள் அரசு இதனை நிச்சயம செயல்படுத்தத் தான்போகிறது."

"ஈழத்தில் தமிழ்ப்பட முயற்சி ஒன்றும் நடக்கவில்லையா" என்றேன். "ஏன் இல்லை கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா நல்லதொரு தமிழ்ப் படத்தை எடுக்க திட்டமிட்டு. அதற்கான ஆரம்ப வேலைகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார். கட்டடக்கலை நிபுணரான அவர் சினிமாவிலும் புதுமை செய்யத்தான்போகிறார்" என்றார்!

விரைவில் தானும் ஈழத்துத் தமிழ்ப்படமொன்றில் முக்கிய பாத்திரமேற்று நடிக்கத்தான்போகிறேன் என்பதைச் சொல்லாமல் சொல்லிவைத்தார், என்னிடம்!

—'மேகலா'



தன் சதங்கையிலிருந்து பிறந்த இரு மணிகள் ரமணியையும், நளனியையும் அன்போடு அணைத்துக்கொள்கிறார் 'நாட்டியக் கலாபமயில்' லீலா நாராயணன்! பிரபல வர்த்தகர் அரசரத்தினம் தம்பதிகளின் புதல்விகளான ரமணி, நளினி சகோதரிகளுக்கு பரதம் சொல்லிக்கொடுத்த 'சதங்கை நர்த்தனாலய' இயக்குனர் லீலா இப்படி அணைத்துக்கொள்வதை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமீபத்தில் நடந்த இவர்களது பரத அரங்கேற்றத்தின்போது நமது படப்பிடிப்பாளர் தமது கமிராவுக்குள் நுழைத்துக்கொண்டுவிட்டார்! —மேகலா.




## சினிமாத் துளிகள்!

### சௌகார் கவலை

சவுகார் ஜானகியின் முகம் வாடியிருப்பதை காணவே முடியாது. மலை போல் கஷ்டம் வந்தாலும் அதை துரும்பாக நினைத்துச் சிரித்த முகத்துடன் இருப்பவர் அன்று அவர் முகம் வாடி இருந்தது.

சவுகார் ஜானகியின் இரு புதல்விகளான யக்ஞவும், அம்முலுவும் அன்று மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டார்களாம். 'பொடி எழுத்தைக்கூடப் படிப்பதற்கும் வெகு தூரத்துப் பொருளையும் துல்லியமாகத் தெரிந்து கொள்ளவும் என்னால் முடிகிறது. நான் கண்ணாடி போடவில்லை, என் குழந்தைகள் கண்ணாடி அணிந்து கொண்டார்களே!' என்று வருத்தத்துடன் கூறினார் சௌகார் ஜானகி.

### அனுமார் பக்தர்கள்

அனுமார் சாமியின் பக்தையாக இருக்கிறார் ஒரு நடிகை. அவர்தான் வையந்திமாலா. அவர் எங்கு போனாலும் கூடவே ஒரு வெள்ளி அனுமார் சிலையையும் எடுத்துச் செல்வார். புதுப்பட ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுவதற்கு முன்புகூட அனுமார் சாமியை வணங்கிவிட்டுத் தான் கையெழுத்துப் போடுவார்.

மாதம் ஒருதடவை 108 வடைகளை மாலை ஆக்கி அனுமார் சாமிக்கு சூடி வணங்கும் நடிகர் தேங்காய் சீனிவாசன்.

### சுந்தரராஜனின் முதல்வேலை

நடிகர் சுந்தரராஜன் காலையில் எழுந்து குளித்ததும் முதலில் செய்யும்வேலை என்ன தெரியுமா? 'ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்' என்று நூறுதடவை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதுவார். அதன்பின்புதான் மற்றவேலைகளில் இறங்குவார்.

நாடகவிமர்சனம்

## 'சுடுகாடு காத்த வேந்தன்' முதல்பரிசைத் தட்டியது!

இலங்கைக் கலைக் கழகம் வருடாவருடம் நடாத்தி வரும் நாடகப் போட்டியில் முதல்ப்பரிசைத் தொடர்ந்து தனதாக்கிவரும் மகாஜனக்கல்லூரியில் இல்லங்களுக்கிடையிலான நாடகப் போட்டி சமீபத்தில் நடைபெற்றது. நடைபெற்ற நான்கு நாடகங்களிலும் அரிச்சந்திர மயானகாண்டப் பகுதியை விளக்கும் "சுடுகாடு காத்த வேந்தன்" என்ற நாடகம் மற்றையவைகளிலும் கூடிய சிறப்புடன் மிளிர்ந்ததோடு முதற் பரிசையும் கைப்பற்றியது.


பல தடவைகள் மேடைகளிலும் திரைகளிலும் ரசித்த ஒரு காவியத்தைப் புதுமெருகுடன் தெரிந்த காவியம் என்ற உணர்வை முற்றிலும் மறந்து ரசிக்கக்கூடிய முறையில் ஓரங்க நாடகமாக அமைத்தமை இன்நாடகத்தின் சிறப்புக்கு முக்கிய காரணம் எனலாம்.

நடிகர்களின் திறமைமிகு நடிப்பு இன்நாடகத்தின் மற்றைய சிறப்பு அரிச்சந்திரனின் நடிப்பு சிறப். சந்திரமதியாக நடித்தவர் வசனங்களுக்கு உயிரோட்டமாக உணர்ச்சியை ஏற்றிய தன் மூலமே தம்நடிப்பை நன்கு சோபிக்கச்செய்துவிட்டார். விஸ்வாமித்திரராக நடித்தவர் தம்பாத்திரத்தை நன்கு புரிந்து நடித்து அசல் விஸ்வாமித்திரமுனிவரையே கண்ணெதிரே நிறுத்தினார். பொதுவாகக் குறைகள் ஏதுமற்றிருந்த அவர் நடிப்பு அனைவரையும் கவரும் வண்ணம் அமைந்தது. மந்திரியின் நடிப்பு சற்று மிகையாகத் தோன்றியது. வசிட்டர் மற்றும் உப நடிகர்கள் யாவரும் எடுத்த பாத்திரத்தைக் குறைவின்றிச் செய்தார்கள்,

கதையமைப்பின் சிறப்புக்கு வசனம் நன்கு கைகொடுத்து உதவியிருக்கிறது. ஒப்பனை, மேடை நிர்வாகம் ஆகிய எவற்றிலும் குறைகளைக்காணமுடியவில்லை. மொத்தத்தில் பண்டைக்காவியங்களை வசன நடையில் நாடகமாகப் படைக்கும் போது சோடைபோய்விடும் என்ற கருத்துக்குப் பலத்த அடியாக இன் நாடகம் அமைந்திருக்கிறது!

ப. வை. ஜெயபாலன்.

நம் நாட்டு இசைக் கலைஞர்



## அண்ணாமலையில் முதல் வகுப்பில் சித்தி பெற்ற செல்வன் பத்மலிங்கம்

ஈழத்துக்கும், நமக்கும் பெருமைதேடித்தர இசைக் கலையை சாஸ்திர ரீதியாகப் பயின்றவர்தான் செல்வன் சி. பத்மலிங்கம்! புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், அண்ணாமலை சர்வகலாசாலை இசைக் கல்லூரிப் பிரிவில் நான்கு வருடங்கள் பயின்று சங்கீத பூஷணப் பரீட்சையில்முதல் வகுப்பில் இப்போது சித்தியடைந்துள்ளார்.

நான்கு வருடங்களும் கர்னாடக இசைக்கலையை சென்னை அரசாங்க நன்கொடை பெற்று பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. நன்கொடைபெற்று இசை பயின்ற இலங்கைமாணவர் இவரேஎன்பதும்குறிப்பிடத் தக்கது!

இசைப் பேராசிரியர் எம். எம். தண்டபாணி தேசிகர், எம். பி. வஜ்ரவேலுமுதலியார், ரி. என். சிவசுப்பிரமணியம் பிள்ளை, எஸ். வேணுகோபால்ஐயர் முதலிய கர்னாடக விற்பன்னர்களிடம் இசைபயின்றவர் இவர்!

தவில் வித்துவான் கி. சின்னத்தம்பி இவர் தந்தையார். புத்தூர் விஷ்ணுவித்தியாலய பழைய மாணவர் இவர். மாவட்ட பாடசாலைப் போட்டிகளில் பங்குகொண்டு தான் படித்த பள்ளிக்குப் புகழைத்தேடிக் கொடுத்துள்ளார்.

1966-ல் தான் இந்தியா சென்று அண்ணாமலையில் பயில ஆரம்பித்தார். இவருக்கு அப்போது நேர்முகப் பரீட்சை வைத்த இசைப் பேராசிரியர் எம். எம். தண்டபாணிதேசிகர் இவரின் சங்கீத ஞானத்தையும், திறமையையும்கண்டு வியந்துள்ளார்! பாராட்டியுள்ளார்!

"பயலின் எதிர்காலம் எல்லோரையும் மிஞ்சிவிடும்" என்று அன்று அவர் சொன்னதை பத்மலிங்கம் இன்னமும் மறக்காமல் இருக்கிறார்!

### இவரின் ஆசை

"கர்னாடக இசை உலக வழக்கில் பிரபலமான இராகங்களையும், மற்றும் அபூர்வ இராகங்களையும் இசை உலகுக்குஅறிமுகப்படுத்தவேண்டும்."

### இவருக்கு பிடித்தமான இராகங்கள்

சங்கராபரணம், பகுதாரி, தேனுக, நாகாநந்தினி, சாருகேசி!

இவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை மட்டும் என்னால் கூறமுடிமுடிகிறது!

—பாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் புரட்சிக் கருத்துக்கு சிறப்பிடம் அளித்தனர் ரஷ்ய

ஆரம்பத்தில் ரஷ்யர்கள் அதாவது ரஷ்யப் புரட்சிக்கு முன்னர் திராவிடவியலில் ஈடுபாடுடையவர்களாக, இருந்தபொழுதும் இத்துறையில் அவர்கள் விரிவானதொரு கல்வியைப் பெறவில்லை. குறிப்பிட்ட அறிஞர் வட்டாரத்துக்குள் அடங்கியிருந்த இக்கல்வியில் இந்தியமொழிகளின் ஆராய்ச்சியே முக்கியத்துவம் பெற்று விளங்கியது. எனினும் காலப்போக்கில் ரஷ்ய அறிஞர்கள் திராவிட மொழிகளைக் குறிப்பாகத் தமிழைக் கற்கவேண்டுமென ஆர்வம் கொண்டனர். இதற்குப்பல கீழைத் தேசக் கல்விநிறுவனங்களை ரஷ்ய அரசும் நிறுவி இக்கல்விக்கு உதவியதைக் கடந்தவாரக் கட்டுரையில் ஆராய்வோம்.

## திராவிடவியலுக்கு வித்திட்ட அறிஞர்

இவ்வாறு கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்ட வேளையில் தேச வழக்கங்கள் பற்றிய கல்வியில் ஆர்வமுடையவரும், மொழியியலாளருமான ஏ. எம். மேவாட் என்னும் ரஷ்ய இளைஞர் 1914-ம் ஆண்டு தனது மனைவியுடன் தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சென்றார். சோவியத் நாட்டில் திராவிடவியல் கல்விக்கு வித்திட்டவர் எனக்கூறப்படும் இவ்வறிஞர் திராவிட மக்களின் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், கலை கலாச்சாரம் இலக்கண இலக்கியங்கள் ஆகியவற்றைக் கற்கும் நோக்கத்துடனேயே சென்றார். திரு. மேவாட்டுக்கும் அவரது மனைவிக்கும் இந்தப் பயணம் சிறப்பாகத் தமிழ்மொழியையும் மற்றும் இந்திய திராவிட மொழிகள் சிலவற்றையும் பற்றியாராயப் பெருவாய்ப்பளித்தது. 1918-ம் ஆண்டுவரை இந்தியாவில் தங்கியிருந்துவிட்டு நாடு திரும்பிய இந்த அறிஞர் இந்திய தேச வழக்கங்கள் பற்றிய அறிக்கையொன்றை வெளியிட்டார் இதேவேளையில் இவரது மனைவி இந்திய தேச வழமைகளின் பிரச்னைகள் நன்மைகள் குறித்துப் பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். இதைவிட இப் பெண்மணி இந்திய கலாசாரம், இந்திய கலாச்சாரத்தில் நூதனசாலைகள் வகிக்கும் இடம் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து திராவிட நாடகங்கள் குறித்தும் ஆராய்ச்சி செய்தனர். இவ்வாறு திராவிடவியலின் பல்வேறு துறைகளில் நாட்டங்கொண்ட திரு. மேவாட் திராவிட மொழிகளில் முக்கியத்துவம் வாய்ந்ததான தமிழ்மொழி இலக்கணம், சொற்றொடர்கள் ஆகியவற்றை விரிவாகக் கற்றார். தமிழருடன் நெருங்கிய தொடர்பு கொண்டே இவர் மேற்படி கல்வியில் ஈடுபடலாயினர். இவ்வாறு ஈடுபட்ட இவ்வறிஞர் 1929-ம் ஆண்டில் தமிழ் இலக்கண நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்நூலே ரஷ்யாவில்திராவிட மொழிகள்பற்றிய முதல் நூலாகும்.



### மறுமலர்ச்சிக்காலம்

ரஷ்யாவில் திராவிடவியல் கல்வியின் மறுமலர்ச்சிக் காலம் 1950-க்குப் பிற்பட்ட காலப் பகுதியேயாகும். இக்காலப் பகுதியிலே தான் சோவியத் இந்தியவியலாளரான வி. எஸ்- வொரோபீவ் — தேசியரோவ்ஸ்கி என்பவர்தமிழ்மொழியைப் பற்றி ஆராயத் தொடங்கினார். பலமொழிகளில் பாண்டித்தியமுடையவரான இவர் இந்தோ—ஆரிய மொழிகளின் விருத்தியில் திராவிட மொழி எந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றுள்ளது என்பதுபற்றி விரிவாக ஆராய்ந்து 1956-ம் ஆண்டில் இவ்விடயம் சம்பந்தமாக ஒரு விசேஷ கட்டுரையெழுதி வெளியிட்டார்.

## தேமதுரத் தமிழோசை - 11

— குணம் —

இவரைப் போன்றே மற்றுமொரு தமிழ் மொழியாராய்ச்சியாளரான எம்.எஸ். அன்ட்றேனேவ் 1952-ம் ஆண்டிலிருந்து தமிழ்மொழி பற்றியும் வேறுசில திராவிட மொழிகள்பற்றியும்ஆராய்ந்தார் இத்துறையில் இவ்வறிஞர்செய்த ஆக்கவேலைகள் சோவியத் நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும் மற்றும் நாடுகளின் திராவிடவியலாளர்கள் மத்தியிலும் பெரும் மதிப்பு வாய்ந்தவைகளாக விளங்குகின்றன. இவர் உயர் பட்டபடிப்புக்காக சென்னைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்று அங்கு டாக்டர் மு. வரதராஜன், காலஞ்சென்ற ரா. பி. சேதுப்பிள்ளை பி. சி. லிங்கம், மற்றும் சில தமிழ் அறிஞர்கள் ஆகியோரிடம் தமிழை நன்கு கற்றார். நாடு திரும்பியபின்னர் தமிழ் இலக்கணம் பற்றிச் சிறந்த கட்டுரைகள் எழுதினார். இதைவிடத் தமிழ்நாட்டின் பல பகுதிகளின் பேச்சுத் தமிழ் பற்றியும் நன்கு ஆராய்ந்து கொடுந்தமிழ்ச் சொற்றொடர்களைச் சேகரித்தார்.

### லெனின்கிரட் பல்கலைக்கழகத்தில்

லெனின்கிரட் பல்க… கழகத்தின் கீழை… தேசக்கல்விப் பிரிவின் த… மொழிப் பேராசிரியர… எஸ். ஜி. ருடின் என்பவ… எம். அன்ட்றே… போன்றே சுயமாகத் த… மொழியைக் கற்க ஆ… பித்தவர். பின்னர் இப… கலைக்கழகத்தில் தெலு… தமிழ் ஆகிய மொழிக… போதித்த பேராசி… ஆதிலக்ஷ்மியின் உதவியு… தமிழைக் கற்றார். 196… ஆண்டு இவர் 38,000 ெ… கள்கொண்ட தமிழ்-ர… அகராதியைத்தொகு… வெளியி…டார். இவ்… தமிழ்மொழியில் … ஆராய்ச்சியாலும், … வேலைகளாலும் 196… ஆண்டு தமிழ் எழுத்தா… சங்க மகாநாட்டில் … ருக்கு பதக்கம் கிடைத்… தனது தமிழ் அறி… மேலும் வளர்க்க வி… இவ்வறிஞர் 1965-ல் த… நாட்டுக்குச்சென்று 196… ஆண்டுவரை தமிழ்க் க… யில் ஈடுபட்டார்.

மற்றுமொரு ரஷ்ய அ… ரான வை. வை. … ஷோவ் என்பவர் திரு… ளில் மிகுந்த ஈடுபாடு… யவர். இவர் தனது … நிதிப் பட்டப்படிப்புக்… நூல் பற்றி ஆய்வுக்கட்… எழுதினார். இவர் 196… ஆண்டு ஏ. கிருஷ்ணமூ… எனும் …மிழ் அறி…

# நிறைபாட்டைக் கூறி குறைபாட்டை ஒதுக்கும் இலக்கியம் முழுமையானதல்ல

(சென்றவாரத் தொடர்ச்சி)

குளம்தொட்டு வளம் பெருக்கி உயிர்வளம் பொலியச் செய்தும் — ஆயுதம் செய்தும்-காகிதம்செய்தும்-கல்விச்சாலை அமைத்தும் ஆலைகள் அமைத்தும் புதிய உலகத்தைச் செய்வோம் என்கின்றார்

பாரதியார் தமது யுகப் புரட்சியால் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைக்காணவேண்டுமென ஆசைப்பட்டார். 'தகரென்று கொட்டு முரசே பொய்மைச் சாதி வகுப்பினை எல்லாம்' என புதிய சமுதாயம் மலர்ச்சியைக் கண்டு எழுச்சியைக் காணவேண்டும்' என்பது அவர் அவா.

### பெண்களும் பாரதியாரும்

வரலாற்றில் பெண்களின் சாதனை பெரிது பெண்களின் அடிமைத்தளையை அறுத்தெறியமுற்பட்டார். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக கொளுத்துவோம்' என்கின்றார். இளங்கோ வழிவந்த பாரதி பெண்களுக்குஏற்றம்கொடுக்கத்தவறவில்லை. பெண்ணடிமை நீங்காவிடின் மண்ணடிமையும்நீங்கா. எனவே பெண்களின் விடுதலை அவசியமாகும். இவ்வாறு பெண்களைப் பாரதியார் போற்றிய முறையைக்கொண்டு அவர்பழமைக்கும்-புதுமைக்கும் எல்லைக்கோடு என்பதனை உணரலாம், பெண்களுக்கு தமிழர் சமுதாயம் உரிமைகொடுக்கவில்லை. ஆனால் இலக்கியத்தில் பெண்கள் உயர்வாக வர்ணிக்கப்பட்டு புகழப்படுகிறார்கள். இப்புகழ்ச்சி உரிமையின் பின்னணியில் நிகழாது அடிமையை அடித்தளமாகக் கொண்டு ஏற்பட்டதாகும். அடிமையாக வாழும் பெண்ணைத்திருப்திப்படுத்த எடுத்த முயற்சியே இது.

''தெய்வந் தொழாஅள்
கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
மழை''

என வள்ளுவரும் திருப்திப்படும் முயற்சியில் ஈடுபடுகின்றார். தெய்வத்தை தொழாது கணவனைத் தொழும் கற்புடைய மங்கைக்கு அந்த உலகில் நல்ல இடமுண்டு. அவன் நினைத்தால் மழை பெய்யுமென வள்ளுவர் கூறுகின்றார். இவ்வாறு திருப்திப்படுத்திக் கூறுவது பழைய மரபு.

''போற்றி போற்றி-எனத்
தொடங்கி
சாற்றிவந்தனை மாதரசே-
உங்கள்
சாதிசெய்த தவப்பயன் நீ
வாழ்க''

எனப் போற்றுவது பழைய மரபின் ஆதிக்கமாகும். அவற்றுடன் பாரதி நின்றுவிடவில்லை. தான் கண்ட கொள்ளுவார்கள்.

### இலக்கியப் புரட்சி

அடுத்து இலக்கியத்தில் புதிய மரபு—கருத்து என்பதற்கு உறுதியும் உரமும் கொடுத்தார் காலத்திற்கு ஏற்ப இலக்கியம் மாறுதல் அடையவேண்டும் என்பதனைக் கூறுகின்றார். பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் இன்றைய தமிழுக்கு எத்தகைய இலக்கியம் வேண்டும் என்பதினைத் தெளிவு படுத்தினார். பண்டிதரிடம் காணப்பட்ட தமிழைப் பாமர மக்களிடம் பழகவிட்டவர் பாரதியாவர். யாப்பு வகையிலும், சிந்து தெம்மாங்கு என்பவற்றைப் புகுத்தினார்.

இலக்கியம் என்பது வாழ்க்கையைச் சித்தரிக்க வேண்டும். நிறைபாட்டைக்கூறி. குறைபாட்டை ஒதுக்கினால் அது முழுமையானது அல்ல. முழுமையைக் காட்டுவதே யதார்த்தமாகும், இவ்வாறு யதார்த்த இலக்கியத்திற்கு மூலம் கொடுத்தவர் பாரதியாவர். இது அவருடைய யுகக் கருத்தாகும்.

## — மூ ன ச் சி ன —

புதிய யுகத்தில் புதுமைப் பெண்களாக—பிற்போக்குக் கொள்கைகளைத் தகர்க்கும் பெண்களாக அமையவேண்டும் என்பது அவர் கனவு.

நிமிர்ந்த நன்நடை நேர்
கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச்செருக்
கும் இருப்பதினால்
செம்மை மாதர் திறம்பு
வதில்லையாம்.

எனப் புதியயுகத்தில் வாழப்போகின்ற பெண்களைக் கூறுகின்றார். இவர்கள் தாம் இக்கவர்களை ஈன்று இத்தரணிக்கு ஈந்து பெருமை[illegible]

புதுமைப் பித்தனின் 'பொன்னகரம்' என்னும் கதை கணவனைக் காப்பாற்றத் தனது கற்பைப் பணயம் வைத்தாள் என்ற கருத்தைக் கொண்டது. இவ்[illegible] இதற்குப் பல கண்டனங்கள் எழுப்பப்பட்டன. இக்கதையில் வரும் கருவி அடிப்படை புதுமைப்பித்தனுக்கு சொந்தமானது அல்ல. மூலக்கருத்துப் பாரதியாலேயே கொடுக்கப்பட்டது.

பேணுமொரு காதலினைக்
கருதியன்றோ
பெண் மக்கள் கற்புநிலை
பிறழ்கின்றனர்
காண்கின்ற காட்சியெல்
லாம் மறைத்து
வைத்துக்
கற்பென்று உலகோர்
கதைக்கின்றனர்

என்ற பாடலில் அம்மூலம் தங்கியுள்ளது.

தாவரம்போல மனிதன் தான் முளைவிட்ட சூழலால் கட்டுப்படவில்லை. சூழலில் மனிதன் செயலற்றவனல்ல இவ்வாறு மனிதனின் வளர்ச்சி மொழியிலும் வளர்ச்சியினை ஏற்படுத்தும். உலகிலே இலக்கியத்தை இலக்கணமாகக் கொண்டவன் தமிழன். எனவே இலக்கணத்தால் இலக்கியம் அடைக்கப்பட (Frame)க்கூடாது. இவ்வாறு புதிய மரபுகள் வேண்டும் எனக்கூறிப் புதிய மரபுக்கு வித்திட்டார்.

சமீபகாலத்தில் பொருளாதார நோக்கு இலக்கியத்தில் வலுப்பெற்றுள்ளது. புதுமைப்பித்தனின்' பொன்னகரம்' கதைக்கு மூலமாக அமைத்த பாரதியின் மேற்கூறிய பாடல் அடங்கப் பல பாடல்கள் பொருளாதாரத்தினைப் பின்னணியாகக் கொண்டவை. பொருளியல் அறிஞன் மோல்தஸ் 'பஞ்சம், பசி, பட்டினி ஏற்பட்டால் அங்கே விபச்சாரத்தினையும் காணலாம்' என்றார். வாழ்வு வளம்படப் பொருளாதாரம் அவசியமா

(12-ம் பக்கம் பார்க்க)

## இளங்கோவும் - திரு…
## புதுமைப் பித்தனும்
## அழகிரியும் - ஜான…
## கல்கியும் - கி. வா…
## ரஷ்யர்களைக் கவர்…

1965-ம் ஆண்டில் சோவியத் கலைக்களஞ்சிய வெளியீட்டு நிலையம் எம். எஸ். அன்ட்றனேவும் அவரது இரு மாணவர்களும்சேர்ந்து தொகுத்த 23,000 சொற்கள் அடங்கிய ரஷ்ய-தமிழ் அகராதியொன்றை வெளியிட்டது. இந்த அகராதி ஆக்கத்துக்குத் தமிழ் நாட்டுக் கல்விமான்களான பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் வரதராஜன், டாக்டர் பி. சி. கணேஷ்சுந்தரன் போன்றோர் உதவிசெய்தனர். இந்த அகராதியுடன் ரஷ்யமொழியின் இலக்கணம் தமிழில் எழுதி வெளியிடப்பட்டது. இது ரஷ்ய மொழியைவிரும்பிக் கற்கும் தமிழ் மக்களுக்கு உதவியளிப்பதாகவுள்ளது. இதைவிட 1966-ம் ஆண்டில் எம். அன்ட்றனேவ் தமிழ்மொழி இலக்கணநூலொன்றையும் எழுதி வெளியிட்டார்.

சேர்ந்து முதல் தடவை… திருக்குறளைரஷ்யமொழ… எழுதினார்.

மேற்குறிப்பிட்ட … அறிஞர்கள் தாங்கள் … தனியாக தமிழ்க்கல்… ஈடுபட்டு பல இலக்… அகராதி. இலக்கிய ஆரா… நூல்களை வெளியிட்ட… டுமன்றி காமில் ஸ்வ… போன்ற செக். நாட்டு … விடவியல் அறிஞர்க… சேர்ந்து அவர்களின் … துழைப்புடன் தமிழ்… யின் இலக்கண வரல… நூல் ஒன்றை வெளிய… னர்.

தமிழ் மொழிக்கல்வி… பொறுத்தமட்டில் … அறிஞர்களுக்கு … உதவி அளித்தவர்கள் … அறிஞர்களாவர். பி, … சுந்தரம், எம். பிள்ளை… எஸ். மணிவர்மன், … பிரமணியம் போன்ற … அறிஞர்கள் …

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து முதுபெரும் தமிழ்ப் புலவராகிய நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அமரத்துவம் அடைந்த தினம் 7—7—70ம் தேதியாகும். இப் புலவர் பெருமானை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை வெளியாகிறது.

# மொழிக்கு உரிமைக்குரல் எழுப்பிய 'தங்கத் தாத்தா'

தமிழகத்திற்கு அடுத்த நிலையில் தமிழ் இலக்கியத்தைத் தகை சார்ந்த முறையில் வளர்த்த பெருமை ஈழத்திற்கு உரியது. தங்க இலக்கியம் எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலேயே ஈழத்துப் பூதந்தேவனார் பெயர் இடம் பெற்றதிலிருந்தே மிகத்தொன்மை காலந்தொட்டே ஈழத்தமிழ்ச் சான்றோர் இத் தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்ற செய்தியைப் பாரெங்கும் பறைசாற்றப் போதிய சான்ருய் அமைகிறது. ஈழத்துப் பூதந்தேவனாரைத் தொடர்ந்து அரச கேசரி, புலவர் சின்னத்தம்பி, சேனதிராய முதலியார், முத்துக் கவிராய சேகரர், குமார சுவாமிப் புலவர், நவநீதக் கிருஷ்ண பாரதியார் (மாவைக்கவுணிய வெள்ளைக் கண்ணனர்) ஆகியோர் வழி வழித் தமிழ்ப் பாக்கள் யாத்து புகழ் தேடியுள்ளனர். இவர்கள் வழிவந்து தனக்கெனத் தனியிடம் பெற்று விளங்குபவர்தான் 28-6-1876ல் தோன்றி, 7-7-53ல் தனது 77ம் அகவையில் எம்மை விட்டுப் பிரிந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவராவர்.

## 'தெய்வத் தமிழைச், சிங்களத்தை தேச மொழிகளாக்குவோம்' என்று கூறிய சமரச நோக்காளர்

### பழமையைப்பேணி புதுமைக்கு இடம்கொடுத்தவர்

இப் புலவரின் புறவெளித் தோற்றத்தைக் கண்டவர்கள் மறக்க முடியாது. சிலர் நேரிற்காணும் வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றனர், ஏனையோர் படங்களிற்ருன் பலர் அப் பெருமகனின் வடிவத்தைக் காணும் நிலை பெற்றுள்ளனர். அவரின் எழில் உருவத்தை யாம் ஓரளவு எம்மனதில் பதிக்கத் துணை செய்யும் என்ற நம்பிக்கையோடு அவரின் கவிதைகள் உள்ளே புகுந்து அவற்றின் சிறப்பினை ஆய்தல் நலமுடைத்து.

ரெனிசன், வோட்ஸ்வோத் தாகூர், கவிமணி போன்று சோமசுந்தரப்புலவர் இயற்கை அருள் சுரக்கப் பாடுபவர். பழமையைப் பேணி புதுமைக்கு இடம் கொடுத்தவர். பெண்மை, தண்மை, எளிமை, அமைதி, ஆழ்ந்த கடவுள்பற்று ஆகிய பண்புகள் இவரிடத்தில் தலை தூக்கி நிற்கின்றன.

### தங்கத் தாத்தா

கவிஞர்கள் மென்மைஉள்ளம் படைத்தவர்கள். இந்த மென்மையுள்ளம் குழந்தைகள் உள்ளத்தோடு பெரிதும் ஒத்துவிளங்குகிறது. அதனுற்ருன் குழந்தைகள் பற்றிக் கவிஞர்கள் நிறையப்பாடுகிருர்கள். எம்மிடம் இருந்து மறைந்த தங்கத்தாத்தாவும் குழந்தைகளுக்குத் தனிச் சிறப்போடுபாடல்கள் இயற்றியுள்ளார் நம் புலவரின் ''சிறுவர் செந்தமிழ்'' என்ற நூல் அவரின் குழந்தைக் கவியுள்ளத்தைத் திறம்பட எடுத்துக்காட்டுகிறது 'சீரும் சிறப்பும் திருவும் பெருக வந்த ஆரும் விரும்பும் அரு மருந்தே கண்வளராய்'' என்றும், ''தெள்ளமுதே தேனே தெவிட்டா நறும் பாகே உள்ளங் குளிர வரும் ஓவியமே கண்வளராய்''

போன்ற தாலாட்டுப்பாடல்களும், வெண்ணிலா, பவளக் கொடி, கத்தரிவெருளி, எலியுஞ் சேவலும், மிகப் பெயர்பெற்ற ஆடிப்பிறப்பு முதலிய பாடல்கள் குழந்தைகளோடு அவர் உள்ளம் எவ்வளவுதூரம் ஒன்றியிருந்ததென்பதை அழகுற எடுத்துக்காட்டுகிறது.

''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே......
கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம தோழர்களே''

என்றும்,

''வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
அடிப்புதுக்கூழ் குடிப்போமே''

என்றும் வரும் பாடல்களை யாம் இன்றும் பாடும்போது எம்மையறியாமலே இனிய பழைய நினைவுகள் எம் நெஞ்சில் மோதித் தோழர்

(10-ம் பக்கம் பார்க்க)

ஈழ வேந்தன்

---

## தித்திப்பு

### எழுதும் மை

O எழுத்தாளராக வரவிரும்பும் ஒருவர் எழுதும் பேனை கடதாசி என்பவற்றை மாத்திரமல்ல பேனைக்குள்ளேவிடும் மையைப்பற்றியே மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தூய்மை மிகச்சிறந்தமை. துப்புரவில்லாத மைகளைக் கலந்தெழுதி ஏசிப்பேசித்திட்டி ஆபாசம் அட்டாதுட்டித்தனம் சேர்த்தாற்தான் எழுத்து விலைபெறும் என்ற கொள்கை எனக்கு ஒத்துப்போகாது.

— முத்தையா (விடிவெள்ளி)

### எழுத்தாளன்

O ''எழுத்தாளன் யார்?'' இது விஷயம் சுலபமாக முடிவுகட்டிவிடக் கூடியதல்ல. எப்படியோ ஒரு வழியில் முடிபுகட்ட வேண்டுமானல் ''தமிழ் இலக்கிய வளம்பெற தமது சொந்த முயற்சியால், சொந்தக்கற்பனை கொண்டு எழுத்துக் கலைமூலம்-கட்டுரை கதை காவியமாக குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாவது தொண்டாற்றி இலக்கிய உலகில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சொற்சிப்பி'' என்றுதான் தீர்மானிக்கவேண்டும்.

— சோ. சிவபாதசுந்தரம்

### சிறுகதை வித்தை

O மனித வர்க்கத்தில் கோடிக்கணக்கான பேர்களுக்குக் கை கால் கண் முதலிய அவயவங்கள் ஒன்ருயிருந்தும் ஒருவனைப்போல் மற்ரெருவன் இல்லையென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். யோசிக்குங்கால் இதைவிட வேறு அதிசயமுண்டோ? ஒவ்வொரு மனிதனையும் அவன் முகஜாடையால் அறிந்து கொள்கிருேமல்லவா, அவனுடைய தூலசரீரத்துக்கு ஒரு முகஜாடை இருப்பது போலவே அவனுடைய ஆத்மாவுக்கும் ஒரு பிரத்தியேகமான 'முகச்சாயல்' இருக்கிறது மனிதனுடைய ஆத்மாவுக்கு மட்டுமல்ல பிரகிருதியிலுள்ள எல்லா ரூபங்களுக்கும் ரஸங்களுக்கும் இவ்வித அந்தரங்கமான ஓர் அடையாளம் உண்டு. அந்த அடையாளத்தைக் கையாளுவதுதான் கலை.

உதாரணமாக, நான் என்று சொல்லப்பட்ட வஸ்து நான் அணிந்திருக்கும் ஆடையல்ல; என்னுடைய தனிப்பட்ட சைகைகளுமல்ல. என் குணுகுணங்கள் கூட அல்ல. என்னில் உலகத்தாரால் அறியப்படும் பாகங்கள்சிலவே. நான் என்னை முழுதும் அறிந்துகொண்டேன் என்று சொல்லுபவர் இல்லை. நான் என்பதன் பூரணகலையையும் காட்டிக் கொடுக்கும் பூதக்கண் ஊடிதான் கவிதை என்றும் கலை என்றும் பலவிதமாய் வழங்கி வருகிறது.

சிறுகதை என்ற வகுப்பு மேற்கூறிய முகச்சாயல் போன்ற அகச்சாயலைப் படம்பிடிக்கும் வித்தை என்றே கூறலாம்.

—(சென்னை 'கதைக்கோவை' 1943 முன்னுரையிலிந்து)

### ஈழம்

O 1802-ம் ஆண்டில் செய்த உடன்படிக்கைப்படி பிரிட்டிஷாரிடம் விடப்பட்ட தமிழ் பிரதேசங்கள் 'ஈழம்' என்ற பெயருடன் தனிராச்சியமாக அழைக்கப்படவேண்டும்.


(1958 அடங்காத்தமிழர் முன்னணியின் வவனியா மகாநாடு தீர்மானம்)

### சிங்களத்துக்கறுவா

O சிங்களம் என்ருல் பட்டை எனப்பொருள்படும். இலங்கையில் கறுவாப்பட்டை மிகுந்தமையாலே சிங்களம் என்ற பெயர் உண்டாயிற்று. சிங்களத்துக்கும் சிங்கத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை. எனவே, இலங்கைத்தீவு பண்டைத்தமிழகத்தின் ஒருபகுதியேயாகும். சிங்களர் இங்குவந்து குடியேறியிருக்கவேண்டும். அல்லது தமிழராகிய நாகரும் இயக்கரும் வேடரும் கலந்து அதிலிருந்து தோன்றிய ஒரு புதுச்சாதியினராக இருக்கவேண்டும். சிங்களமொழி தமிழிலிருந்து பிறந்ததென மொழிநூல்வல்லுனராகிய காலஞ்சென்ற சுவாமி ஞானப்பிரகாசர் ஆணித்தரமான பல உதாரணங்களுடன் விளக்கியுள்ளார்.

— சுதந்திரம் (சென்னை)

---



...த்தில்

பெயர்ப்பு வேலையுட்பட பல வழிகளில் தமிழ்க்கல்வியையளிப்பதில் ரஷ்யர்களுக்கு உதவியாகவிருந்தார்கள். மொஸ்கோ தமிழ்மாணவர்களுக்கு பூர்ணம் சோமசுந்தரம் தமிழ்மொழியைக் கற்பித்ததோடு மட்டுமன்றி மொஸ்கோவில் வெளியிடப்பட்ட இரு தமிழ் அகராதிகளின் பதிப்பாசிரியராகவும் விளங்கினர். இதுமட்டுமன்றி தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ரஷ்ய மொழியில் பெயர்த்து அளித்துள்ளார்.

### மொழிபெயர்ப்புகள்

ரஷ்யாவில் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுகளில் முதன்முதல் ஈடுபட்ட அறிஞர் ஏ. எம் மேவாட்டேயாவார் இலக்கியத்துறையிலும் மொழியியல் பற்றிய கல்வியிலும் நிபுணத்துவம் வாய்ந்த இவ்வறிஞர் இந்திய மொழிகள், கலாச்சாரம் தென் இந்திய நாடகம் பற்றிய சில நூல்களை எழுதி வெளியிட்டதோடு மட்டுமன்றி மொழிபெயர்ப்பு வேலைகளிலும் ஈடுபட்டுள்ளார். 1929-ம் ஆண்டில் 'கொடுந்தமிழ் இலக்கண நூலொன்றை

...ருவள்ளுவரும்

...ம் - பாரதியும்

...னகிராமனும்

...வா. ஐ. வும்

...வர்ந்தனர்

எழுதிய இவர் தமிழ் இலக்கியத்துறையில் பேரார்வம் கொண்டு சில மொழிபெயர்ப்பு வேலைகளைச் செய்தார். தமிழிலுள்ள சில புராணக் கதைகள், கதைகள், முதுமொழிகள், அறிவுரைகள் போன்றவற்றை ரஷ்ய மொழியில் பெயர்த்தளித்தார். இவரது இந்த ஆரம்ப மொழிபெயர்ப்பு வேலைகளே ரஷ்யாவில் தமிழ் மொழி, மற்றும் திராவிட மொழி ஆகியவற்றில் இருந்து மொழிபெயர்ப்பு வேலைகள் செய்வதற்கு வித்திட்டனவெனலாம்.

குறிப்பிட்ட ஒரு மொழியில் ஆக்கவேலைகள் செய்வதற்கோ அல்லது அதன் இலக்கியங்களை மொழிபெயர்ப்பதற்கோ ஊக்கமளிப்பது அம்மொழியின் ஆராய்ச்சியில் மக்கள் காட்டும் ஆர்வத்தினளவேயாகும்.

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிக்கு உரிமைக்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

களோடு கூடிப்பனங்கட்டிக் கூழும் குடித்துக் கொழுக்கட்டை தின்னும் அந்தக் கவலையற்ற பள்ளிவாழ்க்கை மீண்டும் எமக்கு வராதா என்ற எண்ணம்ஏற்பட்டே தீருகிறது.

## ஆடுகளும் கவிஞரும்

ஆடுகளைக் கோவில்களிற் பலியிடும் கொடும் வழக்கம் தமிழகத்திலும் ஈழத்திலும் பெரிதும் பரவியிருந்தது. இந்த வழக்கம் இப்போது பெருமளவு குறைந்துவருகிறதெனினும் இன்னும் முற்றாக நீங்கவில்லை. ''ஆடு கதறியது'' என்ற பாடலில் நம்புலவர் அவர்கள் 'ஆசைமகனே என் அன்பான கண்மணியே நேசத்துரையே நெடும்பயணம் போனாயோ' என்றும்அம்மாவெனவழைக்கும் ஆசைத் திருக்குரலை எம்மாதவக் கொழுந்தே நான்கேட்பதெந்நாளோ' என்றும் 'ஓங்கிய கத்தி விழும்போ துடல் நடுங்க ஏங்கியெனை நினைந்தென் னம்மவோ வென்றாயோ' என்ற வரிகளோடு கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படும் ஆடுகளின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## பிறந்த மண்ணின் பெருமை

பிறந்தமண்ணின்பெருமை பேசாதார் பிறந்தும் பிறவாதவரே. பிறந்த மண்ணின் பெருமையை எண்ணும்போது அங்கு பிறந்தவனும் பெரியவனுகிருன். யாழ்ப்பாணம் தந்த நம்புலவர் தன் யாழ்ப்பாண மண்வளத்தை அங்கு நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகளை அழகுற அப்படியே படம்பிடித்துக் காட்டுவதில் அவருக்கு அவரே நிகர். யாழ்ப்பாணத்திற்குப் பெருமைதரும் மரங்களுள் தனிச்சிறப்போடு விளங்குவது பனைமரம். அந்தப் பனைமரத்தின் பெருமை பற்றிக் கற்பனை உள்ளத்தோடு உவமைச் செறிவோடு,

'உருக்கு வாளேந்திப்
பகைசெற்றுலகினை
ஓம்பு மணிமுடி
மன்னவன் போல்
கருக்கு வாள்ஏந்திக்
கலியையழித்திந்தக்
காசினியைக் காக்கும்
ஞானப்பெண்ணே'

என்று நம்புலவர் பாடும் போது யாம் மெய்ம்மறந்த நிலையிற் பாங்கான பனைமரமே, எமக்கு வாழ்வளிக்கும் கற்பகதருவே உன் பெருமைதான் என்னே என்று இயம்பிப் பெருமித உணர்ச்சி கொள்கிறோம்.

பனையின் பெருமை பேசிய இதே கவிஞன் பனைதரும் பொருளாகிய பனங்கிழங்கு பற்றியும் அதை எப்படிப் புழுக்கொடியலாக மாற்றிச் சுவைத்து உண்ணவேண்டும் என்பதுபற்றி 'உண்மைப் புழுக்கொடியல்-வாய் ஊறியூறிச் சுவைதேறிடுமே வண்ணப்பனங்கிழங்கது தான் வேறுமருந்துமாமென்று முன் சொல்லிவைத்தாரே'என்று பயன்தெரிந்து பாடும்போதுஎம்மைப்'பனங்கொட்டையா' என் எம் மாற்ருேர் ஏளனம் செய்வதை யிட்டு யாம் மருந்தளவும் கவலைகொள்ளத் தேவையில்லை: மாருகப் பனையின் பாங்கினை உணர்ந்து இறுமாப்பு எய்தவேண்டும்.

## திருமலையின் திறம் பாடிய பாவலன்

வடக்கினைக் கிழக்கினை இணைத்து எம் வாழ்விற்கு வளம்ஊட்டும் திருமலையை-எம்தலைநகரை வாழ்த்திய தமிழ்க் கவிஞர்கள் பலர். ஞானசம்பந்தர் பாடிய திருமலையை அவர்வழிவந்தநம் நவாலியூர் நற்றமிழ்ப் புலவர்,

'காதலனைப் பிரிந்தவளின்
மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெருன்
மனம்போல ஒன்று
தீதுபழி கேட்டவன்தன்
மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள்
மனம்போல ஒன்று
காதுமழுக்காறுடையான்
மனம்போல ஒன்று
கனலேறு மெழுநீர்கள்
உண்டு கன்னியாயில்'

என்றபாடல் வாயிலாக திருமலைக்குப் பெருமை தரும் ஏழுவெந்நீர் ஊற்றுக்களின் வேறுபட்ட வெப்பநிலையை மாறுபட்ட மக்களின் மனநிலையோடு ஒப்பிட்டு உரைத்திருப்பது உள்ளத்திற்குஉவப்பிலா உவகை தருகிறது.

## புலவரின் பொருளியல் புரட்சி

ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் என்பதை நம் புலவர் அன்றே உணர்ந்துள்ளார்போலும்.

''அடவி கொன்று வீடெ
ழுப்பி ஆங்கிருக்கப்
பேவமே
மேயபஞ்சு துயிலாடை
வன்னம்பன்னி
நெய்வமே
வேற்றுப்புலத்தர் நாண
வினைகள் வேறு நூறு
செய்வமே
காடு கொன்று வாவி
தொட்டு மேழிச்
செல்வம் காண்குவம்
கழனிதோறும் விளைவு
கண்டு கலத்திலேற்றி
யுலகிலே
நாடுந்துறைகளோடிச்
சென்று நல்ல நிதியைக்
கூட்டுவம்
நலிக்கும் பஞ்சம் கெஞ்சி
யோட நாட்டிற்
கெழிலுங் காட்டுவம்''

என்ற பாடல் வாயிலாகக் காடு வெட்டி நாடாக்குகிற முறையையும் பஞ்சுநூல் ஆடை செய்கின்றவிதத்தையும், கழனிகள் தோறும் விளைவு காணவேண்டும் என்றும் கலத்திலேறி உலக நாடுகளோடு கடல் வாணிபம் செய்யவேண்டும் என்றும் மற்றும் கைத்தொழில்கள் பலவற்றில் யாம் ஈடுபடவேண்டும் என்று வேண்டுகிருர். ''இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்'' என்றும், ''முயற்சி திருவினையாக்கும் உழவரே உலகின் அச்சாணி'' என்றும் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துகளையே புலவர் அவர்களின் உள்ளம் தழுவி நிற்பதை யாம் உணரலாம்: இவற்றை அறிந்த பின்பும் ''உத்தியோகம் இல்லாவிடின் உயிர்போய்விடும் என்றே'', ''உத்தியோகம் புருஷ இலட்சணம்'' என்றே யாம் எண்ணி ஏமாறுவது மதியீனம். வீழ்ச்சிதரும் இம் மனப்பான்மையை விடுத்துக் காணி நிலம் உள்ளவர்க்கே - உடலால் உழைக்கும் உத்தமர்க்கே எம் பெண்களைக் கட்டிக்கொடுப்போம் என்ற மனநிலை தமிழ் மக்களிடை ஏற்படவேண்டும், பேனமுனைகொண்டு வெறும் தாள்களை உழுதது போதும். இனிமேல் ஏர்முனைகொண்டு நிலத்தினை உழுது ஏற்றம் பெற முயலவேண்டும். இதுவே புலவர் சோமசுந்தரனர் விரும்பிய தமிழர்க்குரிய பொருளியற் புரட்சி.

## தமிழை வழிபட்ட பெரியார்

தமிழைப் பாடாத புலவன் தமிழகத்திலே தோன்றவில்லை. அந்தப் [illegible] வன் வழிவந்த ஈழத்தின் இணையற்ற புலவர் நம் மதி

(14ம் பக்கம் பார்க்க)




இனிய மாணவ மாணவிகளே!

நீங்கள் அனுப்பும் கட்டுரை, கவிதை மற்றும் விடையங்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில்மட்டும் எழுதப்படவேண்டும். நீங்கள் அனுப்பும் விஷயங்கள் வந்து குவிகின்றன. தகுதிகண்டு பிரசுரிக்கப்படும். செல்வன் என். பி. ஜெனிபட் பெர்னுண்டோ, பிரித்தானிய பிரதமர் எட்வேட் ஹீத் அவர்களை வரைந்து அனுப்பியிருந்தார். அவரது முயற்சியைப் பாராட்டுகிறேம்.

—விமலா அக்கா.

# பிரித்தானிய புதிய பிரதமர்

— செல்வன். என். பி. ஜெனிபட் பெர்னுண்டோ

1965-ம் ஆண்டு ஜுலை மாதம் 'சேர். அலெக்ஸ் டக்ளஸ் ஹியூம்' ராஜினமா செய்ததைத் தொடர்ந்து அடுத்து திரு. எட்வேர்ட் ஹீத் கொன்ஸர்வேடிவ் கட்சியின் தலைவராகவும், அதே வேளை பிரிட்டிஷ் எதிர்க் கட்சியின் தலைவராகவும் பதவி ஏற்ருர். 1951-1964 வரை கொன்ஸர்வேடிவ் அரசாங்கத்தில் முக்கிய பதவிகள் வகித்துள்ளார்.

முக்கியமாக வர்த்தக அமைச்சராகவும், கைத்தொழில் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 1950 தொடக்கம் 'பெக்லி' தொகுதியின் அங்கத்தவராக இருந்துவருகிருர்.

திரு. ஹீத் 1916-ம்ஆண்டு ஜுலை 9-ந் திகதி 'புரோட்ஸ்டெயர்ஸ்' என்னும் பட்டினத்தில் பிறந்தார். ஒரு பிரபல வர்த்தகரின் மகனுகப் பிறந்த இவர், ''ஒக்ஸ்போர்ட்'' சர்வகலாசாலையில் அரசியல், பொருளாதாரம் கற்று பட்டதாரி பட்டம் பெற்ருர். சர்வகலாசாலையில் பயின்றபோது சர்வகலாசாலையின் கொன்ஸர்வேடிவ்சங்கத்தலைவராக இருந்தார்.

சர்வகலாசாலைப் படிப்பு முடிந்ததும் அவர் அரசியலில் ஈடுபட்டு போலந்திற்கும், டான்சீக்கிற்கும் விஜயம் செய்தார். 1935-ம் ஆண்டு இரண்டாவது உலகமகா யுத்தம் தொடங்கியபோது யுத்தசேவையில் ஈடுபடத் தொடங்கினுர். இதனையடுத்து 1940-ம் ஆண்டு ரேயல் பீரங்கிப் படையில் அவர் சேர்ந்துகொண்டார். யுத்தகாலத்தில் திறமையாக சேவையாற்றி இறுதியில் ஒரு பீரங்கிப்படைஅணியின் 'லெப்டினன்ட் கோர்ண'லாக பதவியேற்ருர். வடமேற்கு ஐரோப்பாவில் அவர் மேற்கொண்ட யுத்த சாதனைகளை கௌரவித்து அவருக்கு 'M. B. E.' விருது வழங்கப்பட்டது.

1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திரு. ஹீத் தொழில் மந்திரியாக நியமிக்கப்பட்டார். 1960-ல் ஐரோப்பா விவகாரங்களுக்கான வெளிநாட்டுராஜாங்க மந்திரியாகவும் பதவிவகித்தார். ஐரோப்பிய பொதுச் சந்தைக்கு பிரிட்டன் விண்ணப்பித்த காலத்தில் இதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு திரு. ஹீத் பொறுப்பாக இருந்தார்.

ஐரோப்பிய கவுன்சில் ஆலோசனை மகாநாட்டில் திரு. ஹீத் பங்குபற்றியதுடன் மொஸ்கோவில்பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யாவுக்குமிடையிலான அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் 1964-ம் ஆண்டு மேமாதம் ஜெனிவாவில் நடைபெற்றஉலகவர்த்தக மகாநாடொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

1965-ம்ஆண்டுகொன்ஸர்வேடிவ் கட்சித்தலைவராகவும், எதிர்க்கட்சித்தலைவராகவும் பொறுப்பேற்ற திரு ஹீத், உள்நாட்டுப் பிரச்னைகளைப் படித்தறிவதற்காக பிரிட்டன் முழுவதும் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டார்.

திரு. ஹீத் இசைக் கலையில் மிகப்பிரியம் உடையவர். 1963ம் ஆண்டிலிருந்து லண்டன் கூட்டு வாத்திய இசை அரங்கின் தலைவராகவும் இருந்து வருகிருர். அத்தோடு படகு ஓட்டுவதிலும் அவருக்கு அலாதி பிரியம். இவர் பிரமச்சாரியாகும்.

## தெரிந்து கொள்ளுங்கள்!

அமெரிக்க சுப்ரீம் கோட் நீதிமன்ற நீதிபதிகளுக்கு ஓய்வுபெறும் வயதில்லை ஆனல பத்துஆண்டுக்காலம் பணியாற்றிவிட்டால் 70-வது வயதிலும் 15 ஆண்டுக்காலம் பணியாற்றிவிட்டால் 65-வது வயதிலும் அவர்கள்விரும்பினுல் ஓய்வு பெறலாம்.

**சுதந்திரச் சிலை என்ருல் என்ன?**

1886-ம்ஆண்டு முதற்கொண்டு நியூயோர்க் துறைமுகத்தி. லிபர்ட்டி தீவில் சுதந்திரத்தின் சின்னமாக இருந்து வருகிறது இந்தச்சிலை. 151 அடிஉயரம்உள்ள இந்தமாபெரும் சிலை செம்பினுல் வார்க்கப்பட்டது. ஒருகையில் சுடர் ஒன்றையும் மற்ருெரு கையில் சுதந்திரப் பிரகடனத்தையும் குறிக்கும் தகடு ஒன்றையும் ஏந்திநிற்கிறது இந்தச் சிலை.

இந்தச்சிலை, பிரெஞ்சு-அமெரிக்க நட்புறவுக்கு அடையாளமாக அமெரிக்க மக்களுக்கு பிரெஞ்சுமக்கள் வழங்கிய அன்பளிப்பாகும். உயிர் வாழ்க்கை, சுதந்திரம், இன்பநாட்டம் ஆகிய அமெரிக்க மக்களின் ஊக்கமூட்டும் கொள்கைகளுக்கு ஒரு சின்னமாக வழங்கப்பட்டது.

# உள்ளக்கிண்ணத்திலிருந்து ஊற்றெடுக்கும் விஞ்ஞான அறிவு

விஞ்ஞான யுகம் என்று போற்றிப் புகழப்படும் இந் நூற்ருண்டில் மனிதனது ஒவ்வொர் ஆக்கமும் தேவையும் விஞ்ஞான முறைப்படி செயலாற்றப்பட்டு வருகின்றன. ஆதிமனிதன் அன்று நெடுமலைக் குகைகளிலும் மரங்களின் கீழும் ஆற்றங்கரைகளிலும், உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி இலைகுழை பட்டைகளாலான ஆடை தரித்து தன் உணவுத்தேவைகள் நிறைவுருவகையில் இயற்கைக்கும் வனவிலங்குகளுக்கும் அஞ்சி அஞ்சி தன் வாழ்க்கைப் படகை ஓட்டினுன். ஆனல் இன்றே மனிதன் இயற்கையை வென்று அகன்று பரந்துகிடக்கும் அண்டவெளியிற் பறந்து சென்று வெண்ணிலவின் [illegible] தரையிலும் அடி வைத்து விட்டான் என்ருல் விஞ்ஞானத்தில் [illegible] வளர்ச்சி கூறுந்தரமன்று.

—செல்வி ச. அநுராதா —

[பட்டிருப்பு மகாவித்தியாலயம்]

**விஞ்ஞானம் என்ருல் என்ன!**

இயற்கையைப் பற்றித் தெளிவாக அறிந்து அதனைக்

(13ம் பக்கம் பார்க்க)

# எங்கள் பாட்டி

—செல்வி அ. சத்தியபூரணம்—

எங்கள் பாட்டி நல்ல பாட்டி
இனிய கதைகள் சொல்லுவாள்
அங்குமிங்கும் ஆய்ந்து எம்மை
அறிந்து கதைகள் சொல்லுவாள்.

பல்கிப் பண்பு பொருந்தி வாழ
பழைய கதைகள் சொல்லுவாள்
நல்லவராய் என்றும் வாழ [illegible]
நல் லுரைகள் புகட்டுவாள்.

அன்புப் பாட்டி என்றும் எம்மில்
ஆசை வைத்துப் பேசுவாள்
கண்கள் போலும் காத்து எம்மைக்
களிக்க வைத்து மகிழுவாள்.

நாளும் எங்கள் நன்மை பேணும்
நல்ல பாட்டி இன்னுமே
வாழ வேண்டும் நூறு ஆண்டு
வையகத்தில் என்றுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்



## ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ வேண்டியவள் பெண்

— சித்தி பரீடா முகமத் —

எங்கேனும் ஒரு இடத்தில் பெண்பிள்ளை பிறந்துவிட்டால் அவள் வருங்காலத்தில் 'சிறந்த துணைவி' என்று கருத்திற் கொள்கிறோம். பிள்ளை வளர்ந்து பருவவயதை அடைந்து 'கன்னிப்பெண்' என்ற பெயரையும் கேட்டுவிடுகிருள். 'கன்னி என்ற தன்மைக்குக் களங்கம் கற்பிக்கக் கூடாது' என்பதை கருத்தில் ஏற்று மணமங்களகரமான புனிதநாளை எதிர் நோக்கிக் காத்திருக்கிருள். பிறந்த வீட்டில் எவ்வளவுதான் செல்வமாகச் சிறப்பாக வாழ்ந்தாலும் அவள் மனம் ஒருநாள் நல்லவனை மணந்து ஆசைக்கேற்றதுணைவனுக்கு சிறந்தமனைவியாக வாழத்தான் விரும்புவாள். எப்போது ஒருபெண் தகுந்த ஆடவனைக் கரம்பிடித்து மனைவியாகிருளோ அன்றுதான் அவள்வாழ்வு முழுமை பெறுகிறது பிறந்த வீட்டிலும் பார்க்க புகுந்தவீடே அவளுக்கு மதிப்பளிக்கக் கூடியது. ஆசைக்காக வாழாமல் கடமைக்காக வாழ்பவளே பெண்ணாகும்.

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதுதான் வாழ்க்கையாகும். குடும்பமாகும். சேற்றிலே வளரும் செந்தாமரையைப்போல முட்கொடியிலே வளரும் ரோஜாவைப்போல சமுதாயமென்னும் கற்குழியிலே மலர்ந்திருப்பதுதான் வாழ்க்கையாகும். எனவே எச்சூழ்நிலையையும் சமாளிக்கும் பொறுப்பு இல்லத்தரசியைச் சேர்ந்ததாகும். ஒரு வீட்டுக்கு வெளிச்சம் எவ்வளவு முக்கியமாகக் கருதப்படுகிறதோ அவ்வாறேவாழ்க்கைக்கு ஒருபெண் முக்கியமானவளாக கருதப்படுகின்றுள் இத்தகையவளுக்கே கடமையும் கட்டுப்பாடும் அமைந்துவிடுகிறது. பெண்களாலே சாதிக்கமுடியாதது எதுவுமே இல்லை.

ஒரு பெண்ணுக்கு எண்ணற்கரிய கடமைகள் பெருகிவிட்டால் மனச்சலிப்பின்றி அவைகளை செய்து முடிப்பவளும் பெண்ணுவாள். ஒரு குடும்பப்பெண் வாழ்வில் அடையும் இன்னல்களோ பல. துன்பமே இன்பமென்றும் வேதனையே சோதனையென்றும் எண்ணி வாழும் பெண்ணே உலகின் கண்கள் என்றால் மிகையாகாது. தன் கணவனுக்கு வேண்டிய அத்தனை பணிவிடைகளையும் ஏற்று செய்து முடிப்பவளே சிறந்த மனையாட்டியாவாள். தன் கணவனையும், தாய், தந்தையரையும், பிள்ளைகளையும், உற்றார் உறவினர்களையும் பேணிப் பாதுகாத்து அன்பு செலுத்தும் குணம் ஒரு பெண்ணுக்கிருந்தால் அவளேவாழ்வதற்குரியவள். தன் கணவனுக்கோ அன்றி குடும்பத்திற்கோ துரோகம் செய்யாதபடி ஒழுத்தி வாழ்க்கை நடத்திஞல் அவளே உத்தமி. ஆயிரமாயிரம் இன்னல்கள் தம் வாழ்க்கையில் ஏற்பட்டாலும் அதனை வெளிக்காட்டாது சகித்து வாழக்கூடிய ஒரு பெண்ணுகத் திகழ்ந்தால் அவளே வாழ்க்கைக்கு தகுதியானவளாகக் கணிக்கப்படுவாள்.

வேலை முடிந்து வீட்டை நாடி வரும் கணவனை வரவேற்று கனிவுறப்பேசி மகிழ்விப்பதே சிறந்த மனைவியின் தலையாய கடமையாகும். சில பெண்கள் வாய் திறந்துவிட்டால் கணவனின் இதயத்தைச் சுட்டுப் பொசுக்கும் வன்சொற்கள் அம்பைவிட வேகமாகவந்து பாயும். இதனால் கணவனின் கோபத்துக்கு உள்ளாகி. வாழ்க்கையையே சீரழித்துவிடுகிருர்கள். எனவே ஒரு பெண், குறைந்த பேச்சையும் அதிக மௌனத்தையும் எந்தளவு கடைப்பிடிக்கிருளோ அந்தளவு அவளது வாழ்வு சீரும் சிறப்புமாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. வாழ்க்கையின் வெற்றிக்கு வேண்டியது பணமல்ல, பகட்டல்ல, அழகல்ல. தன்னம்பிக்கைதான். மனிதனையே வாழவைக்கும் உன்னத கருவியாகும். நம்பிக்கையென்ற விதையை நாளும் வளர்த்துவருவதே நாணயமான பெண்களின் தலையாய கடமையாகும். தாலி கட்டிய தலைவனுக்கு என்றும், எங்கும், எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் துரோகம் செய்யாதபடி அவள் தன் வாழ்வை எந்தளவு கட்டுப்பாட்டுடன் நடத்துகிருளோ அவளைப் புகழாத, பாராட்டாத உள்ளங்கள் இருக்கவே முடியாது. தாலி என்ற தத்துவக் கொடியை ஏற்று மதிப்பளிப்பவளே இல்லத்திற்கு இதமானவளாகிவிடுகிருள்.

பிறர் வாழ்வதையே பார்த்து பொருமைப்படவோ அல்லது பிறர் ஏழ்மையால் வாடுவதைப் பார்த்து இகழ்ந்துரைக்கவோ ஒரு பெண் முற்பட்டால், அவள் வாழ்வையே நாசமாக்க முற்பட்டவள் என்றேதான் கருத வேண்டும். தான் ஏழ்மையாக இருந்தும் பிறர் செல்வமாக வாழ்வதைப் பார்த்து மகிழும் ஒரு பெண் உலகில் உண்டென்றால் அவள் குடும்பத்தை சமாதான வழியில் கொண்டு நடத்தும் பெண் என்றே கருதப்படுவாள். ஒரு குடியைக் கெடுக்கும் பெண் உலகில் உண்டென்றால் அவள் இருப்பதிலும் பார்க்க இறப்பதே மேன்மையாகும். தாலி கட்டிய கணவனைத் தெய்வமாக மதித்து பணிவிடை செய்வதிலும், பிள்ளைகளை நல்ல முறையில் கவனிப்பதுடன், தனது இல்லத்தையும் நல்ல முறையில் நடத்துவதிலுமே குடும்பத்தின் சிறந்த மனைவியாகக் கருத முடியும்.

உள்ளத்தில் உண்மை, வாக்கிலே தெளிவு, துன்பத்திலே சகிப்பு இவைகள் வாழ்கையை இன்பமாக்கும்! இனிமையாக்கும்: இப்படியான அடிப்படையை ஏற்பவளே சிறந்த பெண்ணாகும். எனவே பெண்களாகிய நாம் நமது வாழ்க்கையை நல்ல முறையில் அமைப்பதிலேயே மகிழ்ச்சி தங்கியுள்ளது.

### பூனைகளை வேட்டையாடும் எலிகள்

நம்புவீர்களா, தலைப்பைப் பார்த்து? ஆனால் முழுக்க முழுக்க உண்மை.

இததாலி சிசிலியைச் சேர்ந்த பாலர்மோவில் உலகில் வேறு எந்த இடத்திலும் ஏற்படாத அதிசயம் நிகழ்ந்துவருகிறது.

அந்நகரில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட எலிகள் இருக்கின்றன. அவை பூனைகளை வேட்டையாடிக் கொன்று புசிக்கின்றன. இந்தத் தகவலை நகராண்மைக் கழகத்தின் எலி பிடிக்கும் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

## உழைப்பில் சளையாதவர் அன்னை ஸ்ரீமாவோ!

### எங்கள் பிரதமர்— 5

1959-ம் ஆண்டு செப்டம்பர் 25.ம் திகதி—

'அரசியல் மேதை' திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயகா 'ரோஸ்மெட்' பிளேசிலுள்ள அவரது இல்லத்தில் கொலைக்கார ஒருவனின் துப்பாக்கியிலிருந்து வெளிவந்த ஈவிரக்கமற்ற ஆறு குண்டுகளுக்கு இரையாஞர்.

அவரது உடல்தான் பிரிந்தது. ஆனல் அவர் உள்ளத்தில் ஊறி நின்ற கருத்துக்கள், செழுமையான சிந்தனைகள், எதிர்காலச் சந்ததிக்குநலமாகஉதவும் அர்த்த பூர்வமான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கு அவரது லட்சியத்துணைவியார் திருமதி ஸ்ரீமாவோ தனது சொந்தக் கவலைகளை மறந்து களத்தில் குதித்தார்.

வறுமை, பசிப்பிணி, அறியாமை, சுரண்டல் இவற்றுடன் போராட தன் கணவனின் ஆத்மாவின்சக்தியுடன் ஸ்ரீமாவோ புறப்பட்டார்.

தனதுஉடைந்தநெஞ்சக்கு மேலாக, ஏழை மக்களின் கண்களில்வழியும்கண்ணீர்த் துளிகளைத் துடைக்கவேண்டுமென்ற கொள்கையை லட்சியமாக ஏற்றார் ஸ்ரீமா!

1960-ம் ஆண்டு மார்ச் பொதுத்தேர்தலில் ஸ்ரீங்கா சுதந்திரக்கட்சியின்வெற்றிக்காக நேரடியாகத் தலைமை தாங்காவிட்டாலும் சுதந்திரக்கட்சி 46 ஸ்தானங்களையும் யு. என். பி 50 ஸ்தானங்களையும் பெற்றது. யு. என். பி. ஆட்சி அமைத்தது. ஆனலும் ஒரு மாதத்துக்குள் டட்லி அரசு தோற்றது

1960 ஜூலையில் நடந்த தேர்தலில் ஸ்ரீமாவோஆட்சி அமைத்தார். அவரது தலைமைப்பீடத்தை மக்கள் எவ்விதம் விரும்புகிருர்கள் என்பதை அத்தேர்தல் முடிவுகள் ஓரளவு தெளிவுபடுத்தியது.

பணத்துக்கும வறுமைக்கும் நடந்த போராட்டத்தில் வறுமை ஓரளவு வெற்றி பெற்றது!

ஸ்ரீமா இத்தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனல் செனட்டராகி பிரதமரானர்.

இந்தப்பொதுத்தேர்தலில் 900 கூட்டங்களுக்குமேலாக முழங்கித் தள்ளியிருக்கிருர். மூலைமுடுக்கெல்லாம் கணவர் லட்சியங்களை, கனவைநிறைவேற்ற சந்தர்ப்பம் அளியுங்கள் என்று மக்களை இரு கை நீட்டிக் கேட்டார். உழைப்பில் சளைக்காதவர் அவர்.

ராணிமாளிகையில் பிரதமராகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டு 'ரோஸ்

பாமா ராஜகோபால்

மெட் பிளேசி'லுள்ள தனது இல்லத்துக்கு ஸ்ரீமாவோ அருமை மகன் அனுராவுடன் திரும்பியபோது அங்கே—

இனத்தவர்கள், நண்பர்கள், ஏன் அரசியல்விரோதிகள்கூட அவரை வாழ்த்தவும், பாராட்டவும் வழி மறித்து நின்றனர். ஆனல் ஸ்ரீமாவோ எல்லா[illegible] விலகி திவிட்டுவீட்டினுள்ளே [illegible]தார். சென்றுர். தனது கணவர் படத்தின்முன்னே முழந்தாளிட்டு விழுந்து வணங்கினர்.

அவர் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர்த்துளிகள் நிலத்தில் முத்துமுத்தாக விழுந்தன.

எந்தெந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கவேண்டுமோ அப்படிச் சமாளித்தார் ஸ்ரீமா! பொருதவேண்டிய இடத்தில் பொருதி கொடுக்கவேண்டிய இடத்தில் கொடுத்து, மடக்க வேண்டிய சமயத்தில் மடக்கிஞர்.

அரசியல் சாணக்கியம் தெரிந்தவர் அவர்!

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பெருந் தலையிடியாகவிருந்துவந்த இந்திய வம்சாவழியினர் பிரச்னையை ஸ்ரீமா அணுகி ஆராய்ந்து தீர்வுகண்டார்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது இத்தீர்வு.

டில்லியில் காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியுடன் பேசி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டு வெற்றியுடன் திரும்பிஞர்.

இந்த சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஸ்ரீமாவோவின் அரசியல்ஞானத்தைஎன்றும் வரலாற்றில் உணர்த்திக் கொண்டேயிருக்கும்.

இதேபோன்றே அண்டை நாடான இந்தியாவுக்கும். சீனவுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தசமயம், சீன சென்று இருநாடுகளின் சமரசத்துக்கு சீனத்து சூ-என்-[illegible]

வெளிநாட்டினர் இவர் விவேகம் கண்டு வியந்து பாராட்டிஞர்கள்! எத்தனையோ தடவைஎத்தனையோ வெளி நாடுகளுக்குப் போய் வந்திருக்கிருர் ஸ்ரீமா! ஆனல், அவரது தேசப்பற்று சிறிதளவும் குறையவில்லை!

ஸ்ரீமா ஆட்சிக்காலம் முடிய சிறிது காலம்தான் இருந்தது! அவரைச் சில பிரச்னைகள் அணுகத் தொடங்கின

அந்தச் சமயத்தில் எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடந்தார். சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தார். அன்றே நாட்டுக்கும் விடிவு காலமும் பிறந்தது!

உண்மையான ஜனநாயகத்தை ஏற்படுத்த நல்ல திட்டமொன்றை ஆட்சிமன்றத்தில் கொண்டு வந்தார். ஒரு வாக்கிஞல் தோல்வி கண்டது!

ஆனல்—

ஸ்ரீமா கண்கலங்கவில்லை; நிலை தடுமாறவில்லை. இந்த நாட்டில் என்றே ஒருநாள் பூரணமான மக்கள்அரசாங்கம் அமைத்தே தீருவேன் என உறுதிபூண்டார்.

(வளரும்)

### நகச்சுற்று நலமாக

நகச்சுற்று வந்தவர்கள் வேதனையால் துடித்துப்போய் விடுவார்கள். இரவில் விரல் விண்விண்ணென்று தெரிக்கும். இதற்கு எலுமிச்சம் பழத்தைத் துளையிட்டு விரலில் சொருகுவார்கள். எரிச்சல் இன்னும் அதிகமாகும் சிறிதளவு கூட வேதனையோ எரிச்சலோ இல்லாது நகச்சுற்றைக் குணப்படுத்தலாம். கடைகளில் 'சப்ஜா' (கசகசா) விதைகளை வாங்கி ஊறவைத்து துணியில் வைத்து நகச்சுற்று வந்த விரல்மேல் வைத்துக் கட்டுங்கள். மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். அதேசமயத்தில் ஒரே நாளில் ஆறிவிடும். வலி சிறிதளவும் இராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் புரட்சி..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

1950- ஆண்டிலும் அதையடுத்த ஆண்டுகளிலும் தமிழ் மொழியிலும், திராவிட மொழிகளிலும் ரஷ்ய அறிஞர்களின் ஈடுபாடும் ஆய்வுமே 1960-ம் ஆண்டுகளில் தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சியடைவதற்குக்காரணமாகும் 1947ம் ஆண்டிலிருந்து இந்திய கலாச்சார, விஞ்ஞானத் தொடர்புஸ்திரப்படுத்தப்பட்டது.

குறிப்பாக சோவியத் யூனியனின் அன்னிய இலக்கிய நூல்நிலயத்தில் தமிழ் உட்பட திராவிட மொழிகளின் ஆக்கவேலைகள் பல சேகரித்து வைக்கப்பட்டன. இதைவிட தமிழ்க் கல்விக்கான பலவித உபகரணங்களும் இங்கு சேர்த்து வைக்கப்பட்டன. 1959ம் ஆண்டில் இரண்டாவது தடவையாக இந்நூல் நிலயத்தில் இந்திய எழுத்தாளர்களான கி. வ. ஜகந்நாதன், அழகிரிசாமி, ரி. ஜானகிராமன், புதுமைப்பித்தன், ஆகியோரது நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன. டாக்டர் ஜே. கிளாகோவ், டாக்டர் ஏ. பியட்டிகோர்ஸ்கி, ஆர். ஜவனேவ் போன்ற ரஷ்ய அறிஞர்கள் மேற்படி எழுத்தாளர்களின் நூல்களை ரஷ்ய மொழியில் பெயர்த்தனர். உரைநடை இலக்கியங்களில் மட்டுமன்றி தமிழ் கவிதைகளிலும் விருப்புக்கொண்ட இந்த ரஷ்ய அறிஞர்கள் மேலும் இந்நூல் நிலயத்தில் தமிழ்க் கவிதைகளும் சேகரித்து வைக்கப்படவேண்டும்; அவற்றின் சுவையை ரஷ்யர்கள் அறியவேண்டுமென அவாக்கொண்டு 'இந்தியாவின் இளம் கவிஞர்கள்' என்ற தலயங்கத்தில் அரசன், வனிதாஸன், வெங்கடபதி, துரைசுவாமி, துறைவன் போன்ற தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளை ரஷ்ய மொழியில் பெயர்த்து வெளியிட்டனர்.

## பாரதியின் பாடலில் ஈடுபாடு

சோவியத் தமிழ் அறிஞர்கள் புரட்சிகரமான கருத்தை விரும்புபவர்களல்லவா. ஆதலால்தான் போலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நமது புதுமைக் கவி சுப்பிரமணியபாரதியாரின் கவிதைகளைப் பெரிதும் விரும்பினுர்கள் போலும். சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளை நன்கு கற்றுச் சுவையான பல கவிதைகளைத் தம்மொழியில் பெயர்த்தனர். 1958-ல் பாரதியின் 'புதிய ரஷ்யா' என்ற கவிதை ஜி. கொட்ஸ், திருமதி ஐ. சிமிர்னேவா ஆகியோரால் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டது. ரஷ்யாவில் 1917-ல் நடைபெற்ற ஆகஸ்ட் புரட்சியின் சம்பவங்களே இக்கவிதையில் இடம்பெற்றுள்ளன. 1963-ல் பாரதியாரின் கவிதைகளில் 40 கவிதைகள் தெரிந்தெடுக்கப்பட்டு ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டன. ச்க்தி, காற்று, குயிற்பாட்டு ஆகியனவும் இதில் அடங்குவனவாகும். லெனின்கிராட்டிலுள்ள ரஷ்ய அறிஞர்களே இக்கவிதைகளை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்தவர்களாவர். மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவரான திருமதி ஐ. சிமிர்னேவா தமிழிலக்கிய வளர்ச்சிபற்றிய ஒரு நூலையும் எழுதிவெளியிட்டார். நமது நாடாகிய இலங்கையின் சில தமிழ்எழுத்தாளர்களின் கதைகளும் 1961-ம் ஆண்டு ரஷ்யமொழியில் பெயர்க்கப்பட்டன.

மேலும் புதுமைப்பித்தன். அழகிரிசாமி ஆகியோரது கதைகள் பல ரஷ்யமொழியில் பெயர்க்கப்பட்டது. 1964-ம் ஆண்டு ஏ. இப்பிரஜிமோவ் எனும் ரஷ்ய அறிஞர் பேராசிரியர் 'கல்கி'யின் 'ஆலை ஓசை' எனும் சுவையான நாவலை ரஷ்ய மொழியில் பெயர்த்தார். இதன்பின்னர் டி. ஜெயகாந்தனின் கதையொன்றையும் மொழிபெயர்த்துள்ளார்.

## பழைய இலக்கியங்கள்

புரட்சியை விரும்பும் ரஷ்யர் தற்கால புதிய இலக்கிய வகைகளில்மட்டும்தான் நாட்டமுடையவராகவிருந்தனர் என நாம் தவருகக் கருதிவிடக்கூடாது. அவர்கள் நமது பழைய இலக்கியங்களையும் மறந்துவிடவில்லையென்பதற்கு 'திருக்குறளின்' ரஷ்ய மொழிபெயர்ப்பு சான்று பகர்கின்றது. டாக்டர் வை. கிளாஷோவ், ஏ. கிருஷ்ணமூர்த்தியெனும் தமிழறிஞரின் ஒத்துழைப்பொடு உலகம்போற்றும் நம் திருக்குறளை ரஷ்ய மொழியில் பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பு 1963-ல் வெளியிடப்பட்டது. திருக்குறளோடுமட்டும் இந்த ரஷ்ய அறிஞர் நின்றுவிடவில்லை. சிலம்பின்கதை கூறும் இளங்கோவின் சிலப்பதிகாரத்தையும் கற்று அதையும் 1965-ம் ஆண்டில் ரஷ்ய மொழியில் பெயர்த்துத் தமதுமக்களுக்கு அளித்தார். இவற்றைவிட ரஷ்ய அறிஞர்கள் கீழைத்தேசமக்களின் முதுமொழிகள். அறிவுரைகள் ஆகியவற்றையும் தம் மொழியில் பெயர்த்துத் தொகுத்து வெளியிட்டனர்.

## சமய தத்துவச்சார்பு

புதிய இலக்கியங்களையும் குறள், சிலப்பதிகாரங்கள் போன்ற பழைய இலக்கியங்களோடுமட்டும் ரஷ்யர்கள் நின்றுவிடவில்லை. அவர்கள் சமய தத்துவ சார்பான பக்தி இலக்கியங்களையும் நுணுகிக் கற்றுள்ளார்கள். அவற்றை மொழிபெயர்த்துமுள்ளனர், மொஸ்கோ தத்துவஅறிஞரான டாக்டர் ஏ. எம். பியட்டி கோர்க்ஸ்ஸி தமிழ் சைவசித்தாந்தக் கல்வியில் சிறப்பான ஆராய்வு நடத்துபவர். இவர் இந்திய தத்துவ வரலாறுபற்றிய நூல் ஒன்றை எழுதியுள்ளார். சிவஞானசித்தியார், நாலடியார் ஆகியவற்றின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது இந்த நூல். இவ்வறிஞர் தமிழ் புராண வரலாற்றுக் கதைகள் சிலவற்றையும் மொழிபெயர்த்துள்ளார். இதில் திருவாதவூரர் புராணம், மணிமேகலை, சிலப்பதிகாரம். திருவிளையாடற்புராணம் போன்றவற்றின் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. 1966.ம் ஆண்டில் டாக்டர் பியட்டிகோர்க்ஸ்ஸி 'தமிழ் இலக்கியம்' என்றதொரு நூலையும் எழுதி வெளியிட்டார். இந்நூல் புராதன, மத்திய, கற்கால இலக்கியங்கள்பற்றி எடுத்துக் கூறுகின்றது.

இவ்வாருக ரஷ்ய அறிஞர்கள் மற்றைய ஐரோப்பியர்களிலும் பார்க்க தமிழ் கல்வியில் தமக்கென ஒரு தனி வழியைக் கையாண்டனர் எனக் கொள்ளலாம். அவர்கள் பெரும் புரட்சியை நடத்தியவர்களல்லவா?

அதனுற்ருன்போலும் பாரதியார், புதுமைப்பித்தன் போன்ற புரட்சி இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகளில் முதலில் ஈடுபட்டனர் அவற்றை விரும்பிக் கற்றனர். அவர்கள் திருக்குறள், சிலம்பு, பக்தி இலக்கியங்கள் ஆகிய பழைய இலக்கியங்களுக்கும் இடம் கொடுத்துள்ளமை தமிழர்களாகிய எம்மால் போற்றப்படத்தக்கதாகும். இவற்றையெல்லாம் நாம் நோக்குமிடத்து பல்வேறு துறையில் வளர்ச்சியடைந்து கொண்டே போகும் நமது இலக்கியங்களுக்கு சோவியத்யூனியன் எதிர்காலத்தில் நல்லாதரவு நல்கும் என நாம் நம்பக்கூடியதாகவுள்ளது.

(தொடரும்)

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மையாகவும் பாடுவாள். கைக்குழந்தையுடன் மனமுருக அவள்பாடும் பாட்டு எல்லோரரையும் நெக்குருக வைக்கிறது. வீதியால் போவோர் வருவோரெல்லாம் தம்மாலான 'சன்மானம்' அளித்துச் செல்கின்றனர், அதைக்கொண்டு தான் உண்ணுவிடினும் தினம் தன் குழந்தைக்கு ஊட்டி வளர்க்கிருள். அவள் கண்மட்டும் இருண்டதேயொழிய மனம் ஒளிர்ந்து சுடர் விடுகிறது; வாழ்க்கையில் ஒவ்வொரு மூலைமுடுக்கையும் படித்த அறிவொளி நிறைந்து வழிகிறது அவள் உள்ளத்தில்.

நாட்கள் செல்லச்செல்ல அவள் உள்ளத்தில் விரைந்து வளர்கிறது ஓர் ஆசை. 'தன் குழந்தையைப் பார்க்கமுடியாதா' என்ற தாபத்திலே அவள் ஆசை பெருகி வருகிறது. ஆசையின் வேகம் தீவிரமடைந்து அவள் போவோர் வருவோரையெல்லாம் தனக்கு வழிகாட்டும்படி கெஞ்சுகிருள். பெருவாரியான மக்கள் அவள வேண்டுகோளைக் காதில் வீழ்த்தாமற் செல்கிருர்கள்' நாளும், பொழுதும் அவள்ஆசை நெய்யிட்ட தீப்பந்தமாக எரிகிறது.

அவளது எண்ணம் முற்ருக வீண்போகவில்லை. வீதியால் தினம் அவளது அவலநிலையைப் பார்த்து அவள் கானத்தைக் கேட்டு இன்புற்றுச் செல்லும் வயோதிபர் ஒருவர் அவளுக்குக் கை கொடுக்கிருர். எவ்வளவோ சிரமப்பட்டு அவளுககு ஆஸ்பத்திரியில் இடம் எடுத்துக் கொடுக்கிருர் அவர் அவள் அந்த வயோதிபரை இதய பூர்வமாக வாழ்த்தி நன்றி செலுத்துகிருள்.

ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு கணத்தையும் தனக்கு விடிவைத் தரப்போகும் நாள் விரைவாக வந்துவிடும்என்ற நம்பிக்கையுடன் கழிக்கிருள்'

0 0 0

'கட, கட'வென்று உக்கிரமாகக் கிளம்பிய இடியோசை அவளை உலுக்குகிறது.

அவள்நெஞ்சு 'திக், திக்' என்று விரைவாக அடிககத் தொடங்குகிறது. தொடர்ந்து வந்து உடலில் படுகின்ற குளிர்காற்ருல் நோயாளிகள எல்லோரும் நடுங்குகின்ற நேரத்தில் அவளது நெற்றியில்மட்டும் வியர்வை துளிதுளியாக அரும்பி வழிறது;

எல்லோர் கண்களையும் கூசச்செய்து பரவுகிறது ஒரு மின்னல்!

கண்கள் இருண்டு போய்விட்ட அவளுக்கே அந்த செயலற்ற கண்களை ஊடுருவி வெளிச்சம் உள்ளே வந்துபோனது போன்ற ஒரு பிரமை ஏற்படுகிறது.

இதயம் 'படபடக்க' கைகளை நீட்டிப் பரபரப்பாக அருகே தேடுகிருள், குழந்தையை.

அவளுக்கு 'சுரீர்' என்கிறது.

'எங்கு போய்விட்டான், என் செல்வம்? ஐயையோ, இந்தக்கொடூர இயற்கையின் வேலைகள் அவனுக்கு எங்கே விளங்கப்போகுது'. அவள் மனம் ஆராய்ந்து முடிப்பதற்குள், அவளுக்குத் தலைசுற்றுகிறது.

வியர்வை பொங்கிவழிய, தலை மெதுவாகத் தலையணையில் சாய்கிறது.

மெல்ல, மெல்லக் கண்களின் இமைகள் இழுத்துச் செருகிக் கொள்கின்றன.

அவள் நினைவுகளும், ஆசையும் ஒருகரைகாணுகின்றன. தனக்குள் கண்டு மகிழ்ந்திருந்த தன் உலகத்தை மட்டுமல்லாது பரந்த புற உலகையே விட்டு அவள்ஆத்மா பறந்துவிடுகிறது.

இறங்கிச்சென்று சிறிது தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மின்னலும், இடியும் செய்த ஆர்ப்பாட்டத்திஞல் பயந்து நடுங்கி ஓடிவந்து கட்டிலில் ஏறிக்கொள்கிறது. தன்னையே வைத்து மனத்தில் அரங்குகட்டி, தன்னையே வாழ்க்கையின் இன்பமாகக் கொண்டு தாய் வாழ்ந்தாள் என்ற உண்மை அந்த மதலைக்கு எங்கே விளங்கப் போகிறது? வாழ்க்கையின் ஒரேதுணையாக எஞ்சிநின்ற அன்னையின் உயிர் பிரிந்துவிட்டது, அந்தப்பேதைக் குழந்தைக்குப் புரியவில்லை. குளிர்காற்ருல் ஏற்பட்ட நடுக்கத்தை நீக்கத் தாயின் உடலில் ஒட்டிக்கொண்டு சுகம்தேடுகிறது. உலகத்தில் வாழ்வதன் பயங்கரகஷ்டங்களை உணராத அக்குழந்தை.

நம்பிக்கையை நினைவில் நிறைத்து, நம்பிககைமனதிலாககிய உலகத்திலே, 'குழந்தையைப் பார்த்து விடுவோம்' என்ற நம்பிக்கையின் சுவட்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த அந்த அபலை, டாக்டர்கள் அதற்கோர் முடிவை நிர்ணயிக்க முன் இயற்கையாலேயே ஏமாற்றப்பட்டுவிடுகிருள்.

(யாவும் கற்பனை)

# நிறைபாட்டை..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

னது என்ற கருத்துண்டு. வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கியத்திற்குப் பொருளாதாரப் பார்வையும் அவ்வழியில் மக்களை எழுச்சி கொள்ளச்செய்வதும் அவசியம். அவ்வாருன நிலையில் தான் மொழியும் நாடும் முன்னேறும் என்ற கருத்தைப் பாரதி பரவலாக எங்கும் தெரிவித்துள்ளார்; இவ்வாறு பார்க்கும்போது பாரதி புதிய மரபுகளுக்கு முன்னேடியாகத் திகழ்ந்து யுகப் புரட்சிக்கு வழிவகுத்தார்.

## கலாச்சாரப் புரட்சி

பாரதகலாச்சாரம் பாரம்பரியமானது. 'யாதும்ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பாட்டு உணர்ச்சியைக் கொண்டவர்கள். இந்திய கலாச்சாரம் பாரத ஐக்கியத்தின் அச்சாணி. அக்கலாச்சாரம் அழியின் பாரதம் அழியும். புகழ்மிக்க இந்து கலாச்சாரம் வாழ— இலக்கியத்தில் மூடநம்பிக்கைகள், பிற்போக்குக் கொள்கைகள் அஞ்ஞான வாதங்கள், என்பன நீக்கப்படவேண்டும் என்ருர். பாரதி பலமுறை அழுத்தியும் அறுத்துறுத்தியும் கூறி உள்ள இக்கருத்தைத்தான் அவருக்குமுன் 'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்று அருட்சோதி இராமலிங்க வள்ளலார் கூறினுர். இவ்வாருனபண்பாட்டு மலர்ச்சியில்தான் கலைகளின் வளர்ச்சியும் தங்கியுள்ளது. இந்தியக்கலைக்கு உலகில் அதிகசெல்வாக்கு உண்டு. வாங்குபவனுக்கும் விற்பவனுக்குமிடையில் சந்தை அமைந்துள்ளதென்ருல் கலைஞனுக்கும் ரசிகனுக்கும் இடையில் உள்ளதே கலை ஆகும். இக்கலை முவ கூறியதுபோல கள்ளாகவும் மாறலாம். காவியமாகவும் மாறலாம். பண்பாட்டு மலர்ச்சி, எழுச்சி பெருத ஒரு சமூகம் கலையைக் கள்ளாகச் சுவைக்கலாம். ஆனுல் காவியமாகக் கலையை உருவாக்கக் கலாச்சாரத்தினுல் தான் முடியும் இந்திய கலாச்சாரம் மங்கி அழியாது தொடர்ந்திருக்க கலாச்சார மலர்ச்சி அவசியமானது. எனவே பாரதி தனது யுகக் கருத்தில் கலாச்சாரப் புரட்சிக்கு இடம் கொடுத்தார்.

பாரதியின் யுகப் புரட்சியைத் தொகுத்துப் பார்க்கும்போது அத்தனையும் செறிந்ததாக பாஞ்சாலி சபதம் காணப்படுகின்றது. பழமைக்கும் புதுமைக்கும் ஏற்படும் யுகப்போராட்டம் இதில் சித்திரிக்கப்பட்டுள்ளது. சுதந்திரம், நாடு, அரசியல். பெண்உரிமை, இலக்கிய மறுமலர்ச்சி என்பவற்றை அடக்கிய லட்சியக் கனவாகவே பாஞ்ஞாலி சபதம் உளது. தாங்கமுடியாத கொடுமை தாண்டவமாடிஞல் ஆக்கும் சக்தி கொண்ட பெண்கள் அழிக்கும் சக்தியாக மாறுவர் என்பதினைப் பின்னணியில் கொண்ட சிலப்பதிகாரத்தைப் போலப் பாஞ்சாலி சபதத்தைப் பாரதி படைத்தார்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமானும் அவர் ஆற்றிய சமய மொழித் தொண்டும்

சைவசமய வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அநவரதமும் அயராது, உடல் பொருள் ஆவியாம் மூன்றினையும் ஒருங்கே அர்ப்பணித்து உழைத்த சைவப் பெருமக்கள் பலரை ஈன்றெடுத்த பெருமை ஈழத்துக்கே உண்டெனின் அது மிகையாகாது.

ஈழத்தை ஆண்ட இராவணனே பெருஞ் சிவபக்தனாகத் திகழ்ந்தான். அவனை 'இராவணன் மேலது நீறு' என்று தேவாரம் புகழ்ந்து பேசுகின்ற வாழையடி வாழையாகஈழத்துச் சைவப் பெருமக்கள், சைவ சமய உண்மைகளை உணர்ந்து வாழ்ந்ததோடு, அதன் வளர்ச்சிக்கும் இடையறாது உழைத்தனர். ஈழத்துச் சைவப்பெரியார்கள் பலர் ஈழத்தில் மட்டுமல்ல, கடல் கடந்து' சென்று தமிழகத்திலுங்கூடச் சைவப்பணிகள் பல செய்தார்கள் என்றால், அவர்களின் சமய ஆர்வத்தையும், சமயப் பற்றையும், சமயப்பணியையும் எங்ஙனம் எடுத்து இயம்புவது?

ஈழத்துச் சைவப்பெரியார்கள் பலர் தமது வாழ்வின் பெரும்பகுதியைச் சமயத் தொண்டிற்காகவே செலவு செய்தனர். இந்தியாவுக்குச் சென்று, ஆதீனங்களிற் பல்லாண்டுகள் தங்கியிருந்து, சைவசமய உண்மைகளை ஆராய்ந்து உணர்ந்தனர். அவர்களில் ஒருசிலர் துறவறம் பூண்டு 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உள்ளத்தோடு சைவ சமய வளர்ச்சிக்கு ஈழத்திலும் தமிழகத்திலும் அரும் பணிகள் பல புரிந்தனர்.

சைவசமய நூல்களை அச்சிட்டு வெளியிட்டும், நுண்ணறிவால் நுணுகிக்கண்ட சைவசமய உண்மைகளைச் சொற்பொழிவுகளாக நிகழ்த்தியும், நுட்பமும் திட்பமும் அமைந்த உரைகளைச் சைவநூல்களுக்கு எழுதி எளிதாக்கியும், ஆண்டுகள் பல ஆய்ந்துகண்ட உண்மைகளை நூல்களாக வெளியிட்டும் ஈழத்துச் சைவ அறிஞர்கள் பணிகள் பல புரிந்துள்ளனர். இப்படிப்பட்ட சைவ அறிஞர்கள் சைவசமயப் பணிகளைச் செய்வதோடு மட்டும் நில்லாது பல இலக்கியப் பணிகளையும்சலிப்பின்றிச்செய்து வந்தனர்.

இவ்வாறாகச் சைவ சமயப்பணி, தமிழ்ப்பணி, இலக்கியப்பணி முதலியவற்றை செய்தவர்களுள் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பெருமானே தலையாயவர் எனலாம்.

நாவலர் பெருமானவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப்பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்குகலியாப்தம்4924க்கும் சாலிவாகன சகாப்தம் 1745க்கும் சமமாகிய சித்திரபானு வருடம் மார்கழி மாதம் ஐந்தாந்திகதி புதன் கிழமை இரவு அவிட்ட நட்சத்திரமும் பூர்வபக்கப் பஞ்சமித் திதியும். வச்சிர யோகமும், பமலவ கரணமும் கூடிய நேரத்திலே சிங்கலக்கினத்திலே 'உதயசூரியன்' எனப் பிறந்தார்

நாவலர் பெருமானின் திருவவதாரம் ஈழத்துச் சைவ வரலாற்றில் ஏன் தமிழகத்துச் சைவ வரலாற்றிலேயே மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். உணர்ச்சியின்றி, உள்ளத்திலே உறுதியின்றி வாழ்ந்த ஈழத்துச் சைவப் பெருமக்களுக்கு ஊக்கமும் உறுதியும் கொடுத்து விழித்தெழச் செய்தவர் நாவலர் பெருமான்.

கிறிஸ்தவ சமய உண்மைகளை உணர்ந்த இவர், பாதிரிமாரின் போலி ஒழுக்கத்தைக் கண்டு சினந்து எழுவார். அவர்களின் போலி ஒழுக்கம் நாவலர் பெருமானுக்குப் பெரும் வெறுப்பைக் கொடுத்தது. போலி ஒழுக்கத்தை ஒழித்துச் சமூகத்தைச் சீர்ப்படுத்த வேண்டும் என்று அவர் உள்ளம் விழைந்தது' எனவே போலி வாழ்வை வெறுத்தார். போலி மார்க்கத்தைக் கண்டித்தார்.

இவ்வாறு சைவசமயத்துக்குச் செய்த பல தொண்டுகளுடன் இலக்கியப் பணியையும் முக்கிய பணியாகப் பெருமான் செய்துவந்தார். தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும் அச்சகங்கள் நிறுவினார். பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். சைவப் பிள்ளைகள் படிப்பதற்குத் தாய் நாட்டிலும் சேய்நாட்டிலும் பல சைவப் பாடசாலைகள் எழுந்தன. சொற்பொழிவுகளால் சைவத்தின் மாண்பை, தமிழின் சிறப்பை, இலக்கியத்தின் இனிமையை மக்களுக்கு எடுத்தெடுத்து உரைத்தார்.

பாமரர் தொடக்கம் படித்தவர் ஈறாக யாவரும் எளிதிற் புரிந்துகொள்ளக்கூடியதாக, கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றையெல்லாம் பெருமான் உரைநடையில் எழுதி உதவினார். இதனால் செய்யுட்களைப் படித்துப் பொருளறிந்து உய்த்துணரமுடியா மக்கள் உரை நடையைப் படித்து எளிதில் விளங்கி இன்புறுவாராயினர். எளிமையும் புதுமையும் கலந்த இவரது வசனநடை இன்றும் உயர்ந்து திகழ்கின்ற காரணத்தினால்தான் இவரை 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று தமிழகம் போற்றிப் புகழ்கின்றது. இவர் பேறு மன்னனாகவும், நாமன்னனாகவும் விளங்கினார். இவர் செய்த பெருந்தொண்டினை,

''நல்லை நகர் ஆறுமுக
நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே?
சுருதியெங்கே?
-எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள்
எங்கேப்ர சங்க
மெங்கே?
ஆத்தன் அறிவெங்கே
அறை''

என்று சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் கூறிப் போந்தார்.

நாவலர் பெருமான் பல சைவ நூல்களையும் திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையாருரை, சேனாவரையம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, பிரயோகவிவேகம், நன்னூல் விருத்தி கந்தபுராணம், சேதுபுராணம், பாரதம், சைவசமய நெறியுரை, தருக்க சங்கிரகம் முதலாம் நூல்களையும் பதிப்பித்து உதவினார், சேக்கிழார் புராணத்தை உரை நடையிற் பக்திச்சுவை பெருக் கெடுத்தோட எழுதித் தமிழ்த்தாயின் அழகுக்குப் புதுமெருகூட்டினார்.

இப்படியாக ஆறுமுகநாவலர் அவர்கள் சைவம், தமிழ், இலக்கியம் ஆகியவற்றுக்கெனச் செய்ததொண்டுகள் அளவற்றனவேயாம். எத்தனையோ மக்கள் இலக்கிய இரசிகர்களாகவும், இலக்கிய மேதைகளாகவும், இலக்கியச் சிற்பிகளாகவும், சைவசீலர்களாகவும், சைவக்காவலராகவும், சைவநெறியாளர்களாகவும், தமிழ்ச் செஞ்சொற்கொண்டல்களாகவும் விளங்க மூலகர்த்தாவாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் அவர்களேயாம்.

பெருமானது உடையிலும் உணவிலும் சைவம் தவழ்ந்தது. சொல்லிலும் செயலிலும் இலக்கியம் மிளிர்ந்தது. பொதுவாகச் சைவ உலகமும் சிறப்பாக இலக்கிய உலகமும் இவரை என்றும் போற்றும் என்பதுதிண்ணம்.

இக் காரணத்தினாலேயே ஆறுமுகநாவலர் பிறந்த நல்லையில் நாவலருக்கு விழா எடுத்தனர்; சிலை அமைத்தனர். நாவலர் சபையாரின் செயற்கரும் தொண்டினால் நல்லையிற் குடிகொண்டு திருவருள் பாலிக்கும், துள்ளி வரும் புள்ளிமயில் வாகனனும் வள்ளி காந்தனை, வந்தனை செய்யச்செல்லும் பக்தகோடிகளும். அவ்வழியாற் செல்லும் பிரயாணிகளும் நாவலர் சிலையைக் காணுகின்றனர். கண்டு அவரை நினைவு கூருகிறன்னர்.

— முருக. சூரியன் —

## உள்ளக்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்துவதுதான் விஞ்ஞானம். திருத்தமுற ஒழுங்காகத் திட்டமிட்டுச் செயற்படும் செயல்களும் விஞ்ஞானமே. மற்றவர்களுக்குப் புரியாத உயர்ந்த கருத்துக்களே விஞ்ஞானமென்று யாராவது கூறினல் அது தவறான கருத்தாகும், இன்று விஞ்ஞான வளர்ச்சியால் மனிதனின் அறிவு வளர்ச்சி மலையிலிருந்து ஊறெடுத்துப்பாயும் ஆற்றுநீர்போல உள்ளக் கிணற்றிலிருந்து ஊற்றெடுத்து விரிந்துகொண்டே போகின்றது என்றால் மிகையாகாது.

### விஞ்ஞான அறிவு அவசியமா?

சிக்கனம், சுத்தம், விரைவு, அழகு முதலிய வற்றோடு சமையல் முதலாம் வேலைகள் அனைத்தையும் முடித்துக்கொள்ள மின் அடுப்புகள் மினுக்கும் பெட்டிகள். குளிர்சாதனப்பெட்டிகள், மின்சார விளக்குகள், மின் விசிறிகள் போன்றவை நமக்குப் பேருதவியளிக்கின்றன

கைகால் முதலிய உறுப்புக்களை இழந்தோருக்கு மாற்றுறுப்புகளைப் பொருத்தவும், விழிமாற்று இதய இதழ் மாற்று போன்ற மருத்துவ துறைகளுக்கும் விஞ்ஞானம் இணையற்ற சேவைகளைச் செய்கிறது. சத்திரசிகிச்சை, 'எக்ஸ்றே' பரிசோதனை, மின்தாக்கம் போன்ற சிகிச்சைகள் மனிதனுக்கு பேருதவியளிக்கின்றன.

''ஒருமனிதனது வாழ்வின் பூரணத்துவம் அவரது அறிவு விருத்தியில் தான் தங்கியுள்ளது'' என்கிறார் ஓர் அறிஞர் அறிவிற் சிறந்து ஆக்கத்தில் உயர்ந்து விளங்கும் மேலை நாடுகளிலெல்லாம் அறிவென்னும் அழியாச்செல்வத்தின் பயனால் விஞ்ஞான அறிவு மேம்பட்டு அந்நாட்டுக் குழந்தைகளுக்கிருக்கும் அடிப்படை விஞ்ஞான அறிவு எம்நாட்டு மாணவர்களிடமில்லை யெனலாம் எனவே விஞ்ஞான அறிவை மாணவர்கள் தம்மிடையே பரப்ப வேண்டும்.

# தடிமல் நோயின் தன்மைகளும் சிகிச்சைகளும்

இந்நோய்க்கு இலக்காகாத மனிதர்கள் உலகில் இல்லையென்றே கூறலாம், எவ்வயதினரையும், எப்பாலாரையும் இலகுவில் தாக்கும் வல்லமை இந்நோய்க்கு உண்டு. 'கடுகு சிறிதானாலும் காரம்பெரிது' என்று கூறுவதுபோல இது ஒரு சிறிய நோய்எனக் கருதினாலும் இதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானதாகும். ஏனெனில் இந்நோய்க்கு நுண்ணங்களே — Viruses- காரணகர்த்தாவாக இருக்கின்றமையால் இந் நுண்ணங்கள் மனிதனின் தொண்டை, நாசி ஆகிய உறுப்புக்களில் நிரந்தரமாய்க் குடிகொண்டிருக்கின்றன. இவற்றை ஆங்கிலத்தில் 'கொமன்சால்' (Commensals) என்று கூறுவர்.

**காரணம்:**

உறுதுணைக் காரணங்களே (Predisposing Causes) இந்நோய் ஏற்பட முக்கியஏதுக்களாய் இருக்கின்றன, அவை யாவன அதிககுளிர், அதிக வெப்பம், திடீர் சுவாத்திய மாற்றம் ஆகியவையே. இப்படியான காரணங்களால் தேகம் இளைத்து. நோயெதிர்க்கும்சக்தி குன்றிவிடுகிறது. 'நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு வேட்டை' என்பதற்கொப்ப இந்தப் பெலவீனமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மேற்கூறிய நுண்ணங்கள் அவ்வப் பகுதியில் வேக்காட்டை யுண்டுபண்ணுகின்றன. இதையே இந்நோயின் ஆரம்ப பருவம் (Primary எனப்படும். இதையடுத்து விஷக்கிருமிகளான 'ஸ்ரெப்ரோகோக்கஸ்' 'ஸ்ரவைலோ கோக்கஸ்', 'நியூமோ கோக்கஸ்' ஆகியவற்றின் தொந்தரவுகள் ஏற்படும். ஆரம்ப பருவத்தில் உள்ள ஒருவர் சனநெருக்கமான இடங்களுக்குச் சென்றால் இந்த விஷக்கிருமிகளின் தாக்கத்திற்கு ஆளாக வேண்டும்: இப்படித் தோற்றிக்கொள்ளும் நிலையை இரண்டாம்பருவம் (Secondary) என்று சொல்லப்படும்.

**குணங்குறிகள்:**

இந்நோயின் குணங்குறிகளை இரண்டு பிரிவுக்குள் அடக்கலாம்.

1 தீவிரநிலை ((Acute Stage).
2 நாட்பட்டநிலை (Chronic Stage)).

**தீவிரநிலையில் குணங்குறிகள்:**

முதலில் முகம் வெப்பமடையும், தொடர்ந்து கழுத்துக்கு மேற்பட்ட பகுதி பாரமடையும், பின்பு படிப்படியாகத் தலையிடி, நாசி அரிப்பு, மூக்கடைப்பு, கண்ணெரிவு, தொண்டை வரட்சி, தொண்டை நோவு, அசௌகரியம் ஆகியவற்றைத் தொடர்ந்து தும்மலும் மூக்கால் நீர்வடிதலும் ஏற்படும். இவை அனைத்தும் ஆரம்ப பருவத்திற்கு (Primary Infection) [illegible] டொரு நாட்களுக்கு நீடிக்கும். சிலருக்கு ஆரம்ப பருவத்துடனேயே நோய் சுகப்படுவதும் உண்டு. தவறினால் இரண்டாம் பருவவேக்காடு (Secondary Infection) ஆரம்பிக்கும். இந் நிலை ஆரம்பமானதும் மூக்கிலிருந்து வடிந்தநீர் சளியாக (Purulent) உருப்பெறும். நோயாளி மிகவும் அவஸ்தைப்படுவான். அதாவது அடைபட்டிருக்கும் மூக்குத் துவாரத்துக்குள் சிறுதுரும்பு செலுத்தித் தும்மினாலும் அடுத்தகணம் மூக்குச் சிறுக அடைத்துக்கொள்ளும். சிலரில் சிறிதளவு சுரமும் காணப்படும்.

**நாட்பட்ட நிலையில் குணங்குறிகள்;**

நாட்பட்ட நிலையென்று கூறுமிடத்து இந்நோயின் உபத்திரவங்களையே Compucation குறிக்கும். இரண்டாம்பருவ நோயைச் சரிவரக் கண்காணித்துச்சிகிச்சை அளிக்காவிட்டால் நோயானது நாட்பட்ட நிலையை அடைவதோடு பல உபத்திரவங்களையும் உண்டாக்குர என்பதில் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும் இந்நிலையில் கிருமிகளின் தொற்றுந் தன்மையானது மற்றும் தலைப்பிரதேசங்களான என்புக்குடாக்கள் (Slnises.) காதுக்குழாய்கள், குரல்வளை, காற்றுக்குளாய், (Larynx), சுவாசக்குழாய், (Bronchs), சுவாசப்பை என்பவற்றைப்பற்றி, இன்னோரன்ன தாங்கொணா அவஸ்தைகளை ஏற்படுத்தும் என்பதை எந்தப்பொதுமகனும் தட்டிக் கழிக்க முடியாது

அ. கிருமிகள் என்புக்குடாக்களுக்கு பரவுமிடத்துப் பிறிதோர் நோயை ஏற்படுத்தும் இதை ஆங்கிலத்தில் (Sinusitis) என்பர். இந்நோய் ஏற்பட்டால் நோயாளி அதிஉக்கிரமான தலையிடிக்கும், முகவாய் எலும்புகளைத் தொட முடியாத அளவு வேதனைக்கும் ஆளாவான். இந்நோயும் நாட்பட்ட நிலையடைவதைத் தவிர்க்க முடியாது. அப்படி ஏற்படும் பட்சத்தில் சீறும்போது மூக்கிலிருந்து நாற்றத்துடன் கூடிய சளி வெளியாகும். இடைக்கிடை கன்ன எலும்பு—(Maxillary-bone), நெற்றியெலும்பு—(Frontal bone) ஆகியவற்றில் தொட்டால் வேதனையும், குனிந்தால் தலையைத் தூக்க முடியாத உணர்வும், மூக்கடைப்பும், தும்மலும் உண்டாகும்.

(ஆ) காதுக்குழாய்களுக்குக் கிருமிகள் பரவினால் மிகவும் பாரதூரமான விளைவுகளுக்கு ஆளாகவேண்டியேற்படும் இப்படிப் பரவுமிடத்து ஐம்புலன்களில் ஒன்றான செவிப்புலனின் செய்கையை இழக்கவேண்டிய கட்டமும் உண்டாகும். அன்றேல் நடுக்காதுத் தாபிதம்—(Otitis media) உண்டாகும். இந்நோய் ஏற்படுங்கால் சுரமும் காணப்படும்.

(15-ம் பக்கம் பார்க்க)

— வைத்தியக்கலாநிதி க. மருது —
[ டீ. ஐ. எப். எஸ். - கௌரவ (இலங்கை) ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான உலகின் தந்தையர்

— தொகுப்பு : கி. அல்பேட் பங்கிராஜ் —

### மெண்ட்லெவ்

இரசாயனத் துறை வரலாற்றில் ஆங்காங்கே சிதறிக் கிடந்த மூலகங்களை ஒருங்கே திரட்டி அவற்றின் மூலக அணு நிரைப்படி வரிசையாக நிரைப்படுத்தி ஓர் அட்டவணையாக ஈந்த மாபெரும் விஞ்ஞானிதான் ருஷ்யநாட்டைச் சேர்ந்த திமிற்றி மெண்ட்லெவ். இவரது சாதனையை என்றும் மறக்காதிருக்க இன்றும் 'மெண்ட்லெவ்வின் ஆவர்த்தன பாகுபாடு' இரசாயன இயற்துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஓர் நாள் நித்திரைக்குச் சென்ற மெண்ட்லெவ் கனவுலகில் மூலகங்களின் வரிசையைக் கண்டார். உடனே துயில் விட்டெழுந்து அவர் ஒரு காகிதத்தில் கனவுலகில் கண்ட காட்சியினை எழுத்தாக வடித்தார். அதுதான் இன்றைய ஆவர்த்தன பாகுபாடு அவரின் ஊகத்திறன் ஏனைய மூலகங்களைக் கண்டு பிடிப்பதற்கு மூலகர்த்தாவாக விளங்கிய தெனில் அவரின் திறமையைக் கூறத் தேவையில்லை.

### பிரடறிக் வேலர்

(1827—1902)

இற்றைக்கு 139 வருடங்களாக இரசாயனத்தில் ஒரு முக்கிய துறையாக விளங்கும் சேதனவுறுப்பு இரசாயனத்தை ஆரம்பித்து வைத்த விஞ்ஞான மேதை தான் பிரடறிக்வேலர். இது வரை காலமும் தொகுக்க முடியாது என்று கருதிவந்த யூறியாவை தமது ஆய்வு சாலையில் ஆக்கித் தந்த பெருமை பிரடறிக் வேலரையே சாரும். ஜேர்மனியில் உயர்ந்த கல்வி அறிவு பெற்றவருக்கு மகனாகப் பிறந்த வேலர் மருத்துவத் துறையில் பட்டம் பெற்று இரசாயனத்துறையில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். இதனால் இவர் பல கூட்டு இரசாயன (காபன்)ச் சேர்வைகளை உண்டாக்கி இரசாயனத்துறையில் புதிய அத்தியாயத்தை உண்டாக்கினார்.

### சாமுவேல் மோர்ஸ்

(1791—1872)

முதன்முதல் கம்பிமூலம் செய்தி அனுப்பிய விஞ்ஞானி மோர்ஸ் இளம் வயதிலே சித்திரம் தீட்டுவதில் சிறந்து விளங்கினார் கல்லூரியில் விஞ்ஞான பாடத்தில் உதவாக்கரை மாணவனாக ஆசிரியரின் இழிசொல்லுக்கு இலக்காகி அனேக தடவை வெளியேற்றப்பட்டவர். அமெரிக்காவில் பிறந்து ஐரோப்பாவில் பயிற்சிபெற்று மீண்டும் தாயகம் திரும்பி பௌதிகத் துறையில் ஈடுபடலானார். விஞ்ஞானி மைக்கல் பரடேயின் தத்துவங்களை ஆதாரமாக வைத்து தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஈற்றில் 1836-ல் தந்தித் தொடர்புக் கருவியைக் கண்டுபிடித்தார் சித்திரக்கலை பயின்று தந்தியைக் கண்டு பிடித்த விஞ்ஞானி மோர்ஸ் 81வது வயதில் இவ்வுலகை நீத்தார்.

### வோல்ட்டா

(1745—1827)

இத்தாலி நாட்டில் பிறந்த வோல்ட்டா சிறுவயதிலே பட்டம் பெற்று சிறு கல்லூரி ஒன்றில் ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் பணியாற்றினார். நாம் இன்று பாவிக்கும் பட்டரிக்கு முன்னோடியான ஒரு பட்டரியைத் தன்னாராய்ச்சியின்மூலம் உலகுக்களித்தவர் வோல்ட்டா தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு மின்சாரத்தின் தன்மை அது செயல்படும் திறன் என்பவற்றைக் கண்டு அறிவதற்காக 'கொண்டென்சர்' என வழங்கப்படும் கருவியைக் கண்டுபிடித்தார். இவரின் திறமைக்காக பிரான்சு நாட்டு/நெப்போலியன் இவருக்குத் தங்கப்பதக்கம் பரிசளித்து கௌரவித்தான். மின்சாரத்துறையில் ஏற்பட்ட பல மாற்றங்களுக்குக் காரணமானவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பெயர் அழியாவண்ணம் என்றும் நிலவும் பொருட்டு மின்சார அலகு ஒன்றிற்கு (வோல்ட்) அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### என்ரிக்கோ பெர்மி

(1901)

இன்றைய விஞ்ஞான உலகில் அணு ஆற்றல் எடைபோட முடியாத அளவுக்கு முன்னேறிவிட்டது. எந்தத் துறையை நோக்கிடினும் அத்துறையின் அபாரமுன்னேற்றத்துக்கு அணு ஆற்றலே அடிகோலியது. இப்படிப்பட்ட அணு ஆற்றலை ''கருப்பிளவு'' Nuclear Fission) மூலம்வெளிக்கொணரக் காரணமாக இருந்த விஞ்ஞானிதான் என்ரிக்கோ பெர்மி. இத்தாலி நாட்டில் சாதாரண புகையிரத இலாகா உத்தியோகத்தரின் இளையமகனாகப்பிறந்த பெர்மி தனது சிறுவயதில் விமானமாதிரி அமைப்புகள் மோட்டார்கள் அமைப்பதில் அதிக ஊக்கம் காட்டினார். பாடசாலையில் பல அரிய கட்டுரைகள் வெளியிட்டு டாக்டர் பட்டம் பெற்றார் 1930-ம் ஆண்டும் மூலக்கூறுகள், எலக்ரோன்கள், கதிர்வீச்சு, வாயுக்களின் நடத்தை பற்றி 30க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு அநேக பட்டங்களைப் பெற்றார். இறுதியாக 1934-ம் ஆண்டில் அணுத்தாக்கம் பற்றிய ஆராய்வில் இறங்கி நியுட்ரோன் கருத்தாக்கத்தைக் கண்டுபிடித்தார்.

### ஹான்ஸ் ஏ. பெதே

(1906)

மின்விசை உற்பத்தி செய்யும் அணுஉலைகள் செய்வதற்கும், ஆபத்துவிளைவிக்கக்கூடிய சூரியக்கதிரியக்கம் கொஸ்மிக் கதிரியக்கம் இவற்றினின்றும் விண்வெளிக் கலன்களைப் பாதுகாக்கும் கவசங்களைச்செய்வதற்கும் அடிப்படை ஆராய்ச்சி புரிந்தவிஞ்ஞானிதான் ஹான்ஸ் ஏ. பெதே [illegible] சியிலிருந்தும் தப்பி ஓடி அமெரிக்காவில் குடியேறியவர். இரண்டாவது உலகப் போரில் முதல் அணுக்குண்டைத் தயாரித்த விஞ்ஞானிகளுள் இவரும் ஒருவர் பௌதீகத் துறைக்கான நோபல்பரிசைப் பெற்ற 27-வது அமெரிக்கர் இவர். இளமையில் ஜெர்மனியிலே படித்துப்பட்டம் பெற்று, சிறிதுகாலம் இங்கிலாந்திலும் பணியாற்றிஇறுதியாக அமெரிக்காவில் 1935-ல் குடியேறினார். அமெரிக்க அணுவிசைக்குழு இவருக்கு அநேக பரிசுகளை வழங்கிக் கௌரவித்தது.

### அல்பேட் அயஸ்ன்தீன்

(1879—1955)

நவீன அறிவியலின் தந்தை. அணுக்குண்டு செய்யக் கருவூலம் கொடுத்த அறிவுமேதை. இதுவரை தோன்றிய விஞ்ஞானிகளில் முதல்வர். மின்சாரப்பொறியியல் வல்லுநரின் புத்திரனாக ஜெர்மனியில் பிறந்த ஸ்தீன் சிறுவயதில் கல்வியில் மந்தமாக இருந்தபோதும் 26-வது வயதில் கலாநிதிப் பட்டம்பெற்று சுவிற்சர்லாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளில் பேராசிரியராகப் பணியாற்றினார். இவரது சார்புக் கொள்கையின் நான்குதத்துவங்களின் அடிப்படையிலேயே அணுக்குண்டு உருவாக்கப்பட்டது. உலகயுத்தத்தின் பின் உயர்தரபடிப்புக்காக இளைப்பாறி 1955-ல் இறக்கும்வரை சார்ச்சியின் கொள்கையை ஆராய்ந்த வண்ணமிருந்தார். 1921-ல் பௌதீகத்துக்கான நோபல் பரிசைப்பெற்றார்.

## 'எக்ஸ்போ 70 செலவுகள்

ஜப்பானில் (ஓர்ஸக்காவில்) நடைபெற்று வரும் 'எக்ஸ்போ70' உலகப் பொருட்காட்சி (செலவிடப்படுபவை) பற்றிய சில புள்ளி விவரங்கள்:

தினசரி (சராசரியாக) வருகை தருவோர். 420,000 பேர்:

தினசரி அவர்களுக்கு உணவுக்காகத்தேவைப் படுபவை:

170 மாடுகள் (37.588 டன்).

140பன்றிகள்(7தொன்)

30000 கோழிகள்

24 தொன்360,000முட்டைகள்.

183 தொன் காய்கறிகள். 23தொன் மீன்கள்

47500 பவுண்டு ரொட்டி.

20,000 தொன் தண்ணீர்.

140,000 க்யூபிக்மீட்டர் எக்கேஸ். [சமையல் மற்றும் வெந்நீருக்காக]

150,000 கிலோவாட் மின்சாரம்.

# மொழிக்கு உரிமை ....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யழகனார்.(சோமசுந்தரனார்) நம் தமிழைத் தாயாக, குழந்தையாக, செல்வியாக, செம்மைமிகு தெய்வமாக, நலமிகு நாமகளாகப் பல இடங்களில் வாழ்த்தி வழுத்துகிறார். எம்மை வாழ்விக்கும் தமிழ்மொழியை மறந்து யாம் வேற்று மொழிகளைக் கற்று எம் மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றுவிட்டோம் என்று எம் மீது குறை காண்கின்றார். அத்தோடு நந்தமிழ் ஓதுதலை விட்டு பண்டை நடைமுறை பாவனை, நன்னெறிவிட்டு மற்றமயன் மொழிதொட்டு உமிகுத்தி கைசதித் திட்டோம் என்றும் உணவிருக்க விடமுண்டு கெட்டோம் என்றும் எம் இழிநிலைக்காக இரங்குகிறார். இப்படி வீழ்ச்சியுற்ற நாம் எழுச்சியுற வேண்டின்,

''ஐம்புலச் செம்புலம்
வேண்டில் —நேரில்
அருந்தமிழ் மலைவாழ்க்கை
அறநெறி வேண்டில்
செம்பொருளின்பமும்
வேண்டில்— தெய்வத்
திருவள்ளுவர் மொழி
சிந்தைசெய்வீரே''

என்று அறிவுரை கூறும் புலவர் மங்கல மறைமொழி ஒளவையின் மந்திரவாய் மொழியையும் மனம் கொள்ளுமாறு வேண்டுகிறார். அப்பொழுதுதான் எம் இனத்தின் மானமும் வீரமும் சேரும். செம்மை மாறாத வாழ்க்கையும் ஆண்மையும் சேரும், ஞானமும் வீடும் கைகூடும் என்று உறுதியளிக்கின்றார்:

### மொழிக்கு உரிமைக்குரல் எழுப்பிய தீரர்

எம்மொழியின் பெருமை பேசிய நம்புலவர் வெறும் மொழிப் புலவராக மட்டும் விளங்கவில்லை சிறந்த அரசியல் அறிஞராக முன்கூட்டி உணர்கின்ற மூதறிஞராக விளங்கினார். வேற்று மொழி ஆங்கிலத்தை வேண்டாம் என்றவர் எம்நாட்டு மொழி என்ற ஒரே காரணத்தால் சிங்களத்தை சிந்தையில் ஏற்போம் என்று சிங்களச் சகோதரருக்குப் 'பக்கவாத்தியம்' பாடும் முற்போக்காளராக மாறி எம் மொழிக்குக் குழிதோண்டிப் புதைக்க முனைந்தவர் அல்ல அவர். 'தெய்வத்தமிழைச் சிங்களத்தைத் தேசமொழிகளாக்குவோம்' என்றுகூறி இவ்விரு மொழிகளையும் ஈழத்தின் இரு கண்களாகக் காண விரும்பும் கவிஞர் 'எம்மில் யாரும் சிறியரல்லர் என்று நினைந்து போற்றுவோம்' என்று அறுதியிட்டு உறுதி கூறுகிறார்.

தன் செவ்வுரையைச் செவிமடுக்க மறுப்போருக்கு

'அஞ்சு விரலும் சேர்ந்
திடில் அரிய கருமம்
புரியலாம்
கொஞ்சமொன்று
நோவுறிற் கூடுங்
கருமமில்லையே'

என எச்சரிக்கிறார். எனினும் இந்த எச்சரிக்கையை ஏற்று எம் அரசாங்கம் ஏற்றது செய்யுமா என்பது பெருங்கேள்விதான்.

### தமிழர் கடன்

தங்கமயமான தோற்றத்தோடு களங்கமில்லா உள்ளத்தோடு அகத்தின் அழகு முகத்தில் ஒலிக்க தங்கத் தகட்டில் வெள்ளிக்கம்பிகள் பதித்தாற்போன்ற அவருடைய தாடி மெல்லிய காற்றிற்கு அசைந்து அழகு கொடுக்க அதனைத் தன் மெல்விரல்களால் தடவிக் கொண்டு தமிழ்கூறும் நல்லுலகிற்கு அவர் அள்ளி அளித்த பாடல்கள் ஏறக்குறையப் பத்தாயிரம். அத்தோடு உரைநடைக் கட்டுரைகளும் பல. அவற்றை 1. சிறுவர் இலக்கியம், 2. தோத்திர இலக்கியம் 3 சித்தாந்த இலக்கியம் 4 வரலாற்று இலக்கியம் 5. உரைநடை இலக்கியமென ஐம்பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். எனினும் இதுவரையில் வெளிவந்த அவரின் பாடல்களோ நூல்களோ மிகச் சிலவேயாகும். அவர் யாத்த பாடல்கள் கட்டுரைகள் அனைத்தையும் விரைவில் நூல்வடிவில் கொண்டுவருவதே யாம் அவருக்குச்செய்யும் கைம்மாறு இதிலே அவருக்கு யாம் எழுப்பும் அறியாத நினைவுச் சின்னமும்கூட நன்றி மறவாத நற்பண்பு தமிழரின் தனிப் பண்பு என்பதை உலகுக்கு எடுத்துரைக்க இது நல்லதொரு வாய்ப்பு. வாய்ப்பினைப் பயன்படுத்துவதே தமிழர் கடன்.

# சிறுபோக ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

காது. ஏனைய பயிர்களைப் போல் 6'' ஆழம்வரை மண்ணைப் பண்படுத்தவேண்டும்.

**இனங்கள்:** அ சன்கலோ-மஞ்சள்விதை 4 மாதம்.

ஆ கிளைசீன்றகற் - கறுப்பு விதை - 3 1/2 மாதம்.

இ தைசாங் E 32 - 80 நாட்கள்.

**நடுகைவிதை:** ஒரு ஏக்கருக்கு 30 இருத்தல்.

**பயிரிடுங்காலம்;** சிறுபோகத்தில் சித்திரை மழையின் பின் 2-ம் இனத்தை கிளிநொச்சிப்பகுதியில் பரீட்சார்த்தமாக உண்டுபண்ண முடியும்.

**பயிர்செய்யும்முறை:** வரம்புகளில் வரிசைக்கிடையில் 2' யும் பயிர் நிலையங்களுக்கிடையில் 6''—9'' வரையும் இருக்கக்கூடியதாகப் பயிரிடவேண்டும். விதைகள் காய்ந்த நிலையிலே நடவேண்டும், வித்திட்ட 5-ம் நாள் நீர்ப்பாச்சவேண்டும். வாய்க்காலில் அரைப் பங்கு உயரத்திற்கு நீர் நிரம்புதல் வேண்டும். பின் 2 வாரங்களுக்கொருமுறை வாய்க்கால் நிறையக்கூடியதாக நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும்.

**பசளையிடுதல்:** (i) பயிர்நடும்பொழுது அதிஎரிகை ஒரு அந்தர்போடப்படுதல்வேண்டு(ii) 3-ம் வாரம் நவச்சார கந்தகை (அமோனியம் சல்பேற்) 1 அந்தர் மேற்கட்டாகப் போடுதல் வேண்டும். (iii) பயிர்கள் வெழுறி மஞ்சள்நிறம் உடையதாகக் காணப்பட்டால் நவச்சார கந்தகை மீண்டும் 1/2 அந்தர் மேற்கட்டாகப் போடலாம்.

**களை அகற்றல்:** 3-ம், 6-ம் வாரங்களில் களைகளைக் கட்டுப்படுத்தவேண்டும்.

### நோய்களும் பூச்சிபுழுக்களும்

**மயிர்க்கொட்டி:** என்றின் ஒரு அவுன்சுக்கு 2 கலன் நீர் வீதம் கலந்து பயிர் நனையக் கூடியதாக 3-ம், 6-ம்கிழமை களில் தெளிக்கவும்.

**விளைவு சேர்த்தல்:** தானியங்கள் முதிர்வடைந்ததும் இலைகள் உதிர்ந்துவிடும் ஒரே தடவையில் விளைவைச் சேர்த்து தடிகளால் அடித்து அல்லது உழுயந்திரஉதவியால் வேருக்கலாம்

**விளைவு:** நீர்ப்பாய்ச்சல் வசதியுடன் 1500 இருத்தல் வரை ஒரு ஏக்கருக்குக்கிடைக்கும். 1967லும், 68லும் எல்லகராவில் பரீட்சார்த்தமாகச் செய்கைபண்ணப் பட்டு2000 இருத்தல்பெறப் பட்டது.

**பயிர்ச் செய்கைச் செலவு:** 250/—300/-ரூபா. சுத்தலாபம் 250—300 ரூபா. இருத்தல் 50 சதமாக மகாஇலுப்பள்ளம- ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நடுகை விதைகள் பெறலாம். விதைகளைச் சீதுவாவிலுள்ள இலங்கை எண்ணெய்க் கொழுப்புக்கூட்டுத்தாபனத்திற்கு விற்கலாம்.

### 5. சணல்

சணல் ஏக்கருக்குத் தேவைப்படும் நடுகைவிதை 60 இருத்தல். இது 45 நாட்களில் பூக்க ஆரம்பிக்கும். அக்காலத்தில் இதனை அழித்து உழவு செய்தால் ஏக்கர் ஒன்றிற்கு 10தொன் பசுந்தாட்பசளை கிடைக்கும்.

மேற்கூறப்பட்ட பயிரினங்களுக்குத் தேவைப்படும் நீர்ப்பாசனம்: இந்தியகமத்தொழில் ஆராய்ச்சி நிபுணர்கள் ஒரு ஏக்கர் நெல் வேளாண்மைக்குத் தேவையான நீரைக் கொண்டு மேற்கூறப்பட்ட பயிரினங்களில் ஒன்றை ஐந்துஏக்கர்களில் விளைவிக்கலாம் எனக் கருதுகின்றனர். ஆனால் திட்டமாக ஒரு ஏக்கர் வேளாண்மைக்குத் தேவையான நீரைக் கொண்டு 3ஏக்கர் விளைவிக்கலாம். சித்திரை, வைகாசி மாதங்களில்மழைஇருப்பின் 2 வாரத்திற் கொருமுறை நீர்ப்பாய்ச்சல் அவசியம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13ம் பக்கத் தொடர்ச்சி)

# தடிமல் நோய்..

அத்தோடு காதுக்குள் குத்து வேதனை— (Throbbing pain) காணும். இதைக் காதுக் குத்து—(Earaehe) என்று பிழைபட எண்ணிச் சிகிச்சை அளிப்பது பொதுமக்களிடையே காணப்படும் பெரும் குறைபாடாகும். நாளடைவில் இந்நோயின்பேருகக் காதிலிருந்து சீழ் வடியும்.

(இ) மேலும் கிருமிகள் குரல்வளை, காற்றுக்குழாய், சுவாசக்குழாய், சுவாசப்பை ஆகியவற்றைப் பற்றிக் கொண்டால் அவ்வப் பிரதேசங்களுக்குரிய நோய்கள் உண்டாகும். உதாரணமாக சுவாசப்பை தாக்கப்படும் போது சுவாத சன்னி (Pneumonia) ஏற்படும். இவ்வியாதிகள் பின்பு ஆராயப் படும்.

**சிகிச்சை:**

தடிமலுக்கென நேரடி (Specific) மருந்து இல்லையென்றே கூறவேண்டும். ஆகையால் இந்நோயாளி தன்னளவிலாவது தனியிடத்தை நாடிச் சமூகத்திற்கு உதவியாய் இருக்கவேண்டும் ஏனெனில். இந்நோய் மற்றவர்களுக்குத் தொற்றுந்தன்மை வாய்ந்தது. சுரம் கண்டால் படுக்கையில் இருத்தல் மிக அவசியம். நேரடி மருந்தின்மையால் அவ்வப்போது இருக்கும் அவஸ்தைகளுக்கு ஏற்ப ஔடதங்களைப் பாவித்து, அசௌகரியங்களிலிருந்து விடுதலை பெறவேண்டியுள்ளது. மக்களின் கைவைத்தியங்களுக்குக் கட்டுப் படாதவிடத்து வைத்தியர்களை நாடித் தக்க பரிகாரம் பெறுவிடில் மேற்கூறிய ரோகங்களுக்கு ஆளாக வேண்டியேற்படும் என்பதைச் சாதாரண மனிதன் தெரிந்துகொள்ளவேண்டிய தவசியம்.

# நமது நூல் நிலையம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியும்'' என்பதை வலியுறுத்தியுள்ளமை வரவேற்கத் தக்கது'

ஸ்ரீமான் ஏ. வி. மயில்வாகனம் ஆங்கிலத்தில் கூறியுள்ள தேரின் தத்துவங்களின் உண்மைகளும் ஸ்ரீ லஸ்ரீ சுவாமிநாத தம்பிரானின் விநாயக விளக்கமும் இறைவனின் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

இம்மலரின் வாயிலாக வாசகர்கள் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானின் அருட்திறனைத் தெளிவாக அறியக்கூடியதாகவுள்ளமை பாராட்டற்குரியது.

—வி பரிபூரணனந்த சர்மா

0 0 0

நூல்-பார்வை. எழுதியவர்: சாந்தன். வெளியீடு- யாழ் இலக்கிய நண்பர் கழகம், மாவிட்டபுரம். விலை: 50 சதம்.

இன்று ஈழத்து இலக்கிய உலகில் யதார்த்த இலக்கியம் மக்கள் வாழ்வில்காணப் படும் குறைபாடுகளையும், அவற்றிற்குரிய காரணங்களையும், அதைத் தீர்க்கும் வழிவகைகளையும் காட்டும் இலக்கியங்கள் படைக்க வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்துவருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மனக்கற்பனைகளுக்கும், தீய நினைவுகளுக்கும் ஊக்கம் கொடுக்கும் உணர்ச்சிக் கதைகள்தான்' நாவல்கள், சிறுகதைகளாக வெளிவந்த நிலை மாறிவருவதும், மக்கள் வாழ்வுக்குப் பயன்தரும் கதைகள் வெளிவருவதும் கண்டு ஓரளவு மகிழ்ச்சி அடையலாம்.

இந்தவகையில் மக்கள் முன் இருக்கும் வாழ்க்கை

(16-ம் பக்கம் பார்க்க)


இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா

நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடித்த






REGAL JAFFNA

Daily 4 Shows

Alfred Hitch Kichi

Master piece

Paul Newman Julte Andrews

in

TORN CURTAIN



ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30 மணி

போயா, பிரிபோயா

2-30 மணி

நான் வளர்த்ததங்கை



வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30 மணி

எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா

நடித்த

சந்திரோதயம்



MANOHARA

JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p m.

Poya-Prepoya 10-30 a.m.

A Charles H. Schneer

Production

THE VALLEY OF GWANGI

(Techni Color)


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தெளிகருவி

சொந்தப் பாவிப்பிலிருந்த தெளிகருவி ஒன்று 15-7-70 காலை 9 மணிக்கு நுணசை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில்வைத்துவிற்கப்படும். செ. கந்தசாமி, மாதகல். 2155

திறமையான நிலையில் ஸ்பிறே பெயின்ரிங் கண் (Gun) கொம்பிரசர் மோட்டர் உடன் விற்பனைக்கு உண்டு. S. M. சங்கரலிங்கம், லிங்கம் கராச், மன்னார். 3135

கைத்தறிக்குரிய 100 ம் நம்பர் ரீட்ஸ் (100 S Reeds) நல்ல நிலைமையிலுள்ளன வாய்த் தேவைப்படுகின்றன. விற்பனவுக்கு வைத்திருப்போர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் - மனேஜர், வசந்தபுரம் சில்க்ஸ் 7, 2-ம் ஒழுங்கை, பிரவுண்வீதி, யாழ்ப்பாணம். 3130

## தேவை

மானிப்பாய்க் கிராமசபையின் ஆயுர்வேத வைத்திய சாலைக்கு ஓர் அற்றன்டன் தேவை. ஆயுர்வேத அநுபவமும், ஆயுர்வேத வைத்திய தகுதிப் பத்திரங்களும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்கவேண்டும், வைத்திய அநுபவம் உள்ளவர்களுக்குச் சலுகை காண்பிக்கப்படும். விண்ணப்பமுடிவுத்திகதி15-7-70 தலைவர், மானிப்பாய் கிராம சபை, மானிப்பாய் கிராம சபை அலுவலகம், ஆனைக்கோட்டை, 28-7-70 3139

## வாடகைக்கு

வியாபாரிமூலை, பருத்தித் துறையில் பாடசாலைகள், கந்தோர்கள், கடற்கரைக்கு அண்மையில் சகல வசதிகளுமுள்ள வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. 3137

## வகுப்புகள்

இசைவகுப்பு:

வாய்ப்பாட்டு உயர்தர இசைவகுப்புகள். நடத்துபவர் செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி 57, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3133

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல. 3136 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3136

மண் சமையலறை. நாற்புறமும் விறாந்தையோடு கூடிய 2 அறைகளைக் கொண்ட கல்வீடுள்ள, ஒரு பகுதி தாழ் நிலமான 30 பரப்பு காணி காரைநகர், சாந்தன் புளியடியில் விற்பனைக்குண்டு. தபாற்கந்தோரில் இருந்து 5 நிமிட நடை தூரம். விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். P. W. J. முத்தையா பீ. ஏ. இளைப்பாறிய ஆசிரியர், கட்டுடை, மானிப்பாய். 3142


இன்று முதல்!

ராஜா- யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள்

பிரிபோயா, போயா 4 காட்சிகள்




★ காந்தராவ்

★ ராஜ்ஸ்ரீ

★ ஜெயந்தி

நடித்த

மாவீரன் ஜெயசீலன்

(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற சித்திரம்)



ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி

நாகேஷ்—ஜெயந்தி

நடித்த

இரு கோடுகள்



தினசரி 4 காட்சிகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

ரவிச்சந்திரன் — சரோஜாதேவி

நாகேஷ், பாலையா

நடித்த

ஓடும் நதி

டைரக்ஷன்: தாதாமிராசி

பின்னணி: சுசிலா - சௌந்தரராஜன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிமொழிகள்!

உங்கள் உள்ளங்களை, எண்ணங்களை இந்த உலகைப்போல் விசாலமாக்கிக் கொள்ளுங்கள். கடலின் ஆழமும் எல்லையற்ற ஆகாயத்தின் விஸ்தீரணமும் உடையதாக இதயத்தை ஆக்கிக் கொள்ளுங்கள்.

0 0 0

சாதிப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்னவழி என்றால் மேலே இருப்பவர்களைக் கீழே தள்ளுவதன்று. கீழே உள்ளவர்களையும் மேலே இழுப்பதாகும். இதுவே சிறந்த வழி.

—விவேகானந்தர்






# தமிழ்நாடு முதல் அமைச்சர் லண்டன் பயணமானர்

சென்னை, ஜூலை 2

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தமது முதலாவது வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற்கொண்டு இன்று விமானமூலம் லண்டன் புறப்பட்டுச் சென்றார். பம்பாய் விமான நிலையத்தில் தமிழ்நாடு அமைச்சர்களும் நீதியரசர்களும், தி மு க பிரமுகர்களும் அவரை வழி அனுப்பி வைத்தனர்.

வெளி நாடுகளுக்குச் சென்று தி. மு க பணிகளை எடுத்து விளக் வேண்டும்' என்ற காலஞ்சென்ற முதலமைச்சர் திரு. அண்ணுதுரையின் விருப்பத்தை தமது பிறநாட்டு விஜயத்தின்போது நிறைவேற்ற முடியுமெனத் தாம் நம்புவதாக திரு. கருணாநிதி விமானநிலையத்தில் பேசுகையில் கூறினார்.

3 வாரகால வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டு லண்டன் செல்லும் இவர் பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் செல்வார். திரு. கருணாநிதியுடன் அவரது மனைவி திருமதி தயாளு அம்மாள் அவரது நிரந்தரக் காரியதரிசி திரு வைத்திலிங்கம், குடும்படாக்டர் கே. ஆம்பிரகாம் ஆகியோரும் சென்றுள்ளனர்.

# பூஜ்யம் தபால்

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள்
பிரதம மந்திரி
கொழும்பு.

அம்மணி!

பொதுமக்களின் அமோகமான ஆதரவைப்பெற்று, பலநாடுகளும் போற்றும் முறையில் தாங்கள் இலங்கையின் பிரதம மந்திரியாகியுள்ளீர்கள். தங்கள் ஆட்சி மேலான வெற்றிபெறவேண்டுமென்று உண்மையில் விரும்புகிறவர்களில் யானுமொருவன்.

தமிழர் உள்ளிட்டு இந்நாட்டவர் அனைவருக்கும் விமோசனம் பிறக்குமென்று ஆவலுடன் இருக்கும் இச்சமயத்தில் தங்கள் அமைச்சரவையில் நீதியமைச்சராக இருப்பவர், ''கிண்டியாயநம'' என்று ஒரு ''குண்டு'' போட்டதைக் கேட்டதும், பெரிதும் திடுக்கிட்டேன்.

இந்நாட்டிலுள்ள தமிழர் அனைவரும், இங்கு படையெடுத்த ஆக்கிரமிப்பாளரின் சந்ததியினர்'' என்று சிங்களவர் நினைப்பதாக, அவர் செனேட்சபையில் கூறியதைக் கேட்டு தாங்களும் அதிர்ச்சியடைந்திருப்பீர்கள்.

தமிழருக்கு நேசக்கரம் நீட்டுவதாகக்கூறி, சமூக ஒற்றுமையை ஏற்படுத்தத் தாங்கள் ஆவல்கொண்டிருக்கையில், தங்களது அமைச்சர் ஒருவரே இவ்விதம் அசம்பாவிதமாகக் கூறியுள்ளதைப்பற்றி தாங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?

இந்தக்கூற்று, ஏற்கெனவே புண்பட்டுள்ள தமிழருக்கு எப்படியிருக்குமென்பதையும், பொறுப்புள்ள ஒரு அமைச்சர் இப்படி வகுப்பு விஷத்தைக் கக்குவதால் எவ்வளவு ஆபத்து ஏற்படுமென்பதையும் தங்களுக்கு விளக்கத் தேவையில்லை.

சிங்களவர் 2500 வருடங்களுக்குமேல் இங்கு வசிப்பதாகவும், அக்காலத்தில் இந்தியாவிலிருந்து பல படையெடுப்புக்கள் நடந்துள்ளதாக சரித்திரம் கூறுவதாகவும் அதே நீதிஅமைச்சர் கூறியுள்ளார்.

இருக்கலாம். அப்போது நடந்த படையெடுப்புகளுக்கு இப்போதுள்ள தமிழர்மீது பழிபோடுவது நீதியா? மேலும் அந்த சரித்திரகாலத்தில் இருநாடுகளுக்கும் எவ்வளவோ நல்ல உறவுகளும் இருந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு பிரித்தாளும் நோக்கத்துடன், கூடாத விஷயங்களை மட்டும் பாரபட்சமாக அந்நியர் எழுதிவைத்துள்ள சரித்திரம் இப்போது நமக்குத் தேவைதானா? அவற்றைக் கிழித்தெறிந்துவிட்டு ஒற்றுமையையும் நல்லுறவையும் வளர்க்கும்படியான முறையில் சரித்திரம் எழுத ஆவன செய்வீர்களா?

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு:-

தாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வர ஆவலுடன் இருப்பதாக அறிந்தேன். மிக மகிழ்ச்சி. இங்கு வருவதற்குள்ளாக, புண்பட்ட தமிழர்மனம் ஆறும்படி தாங்கள் செய்வீர்களென்றே நம்புகிறேன்.

'பூ'

பரியோவான் கல்லூரி

# தொழில் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

பரியோவான் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு ஆர். பானுதேவனல் கல்லூரி முகாமையாளருக்கு எதிராகத் தொழில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணை இன்று இரண்டாவது தடவையாக மீண்டும் நடைபெற்றது.

மனுதார் தரப்பில் திரு. ஸி. தியாகராசா கியூ. ஸி. ஆஜரானர். வழக்கை இன்னெரு திகதிக்கு ஒத்திவைக்கும்படி கல்லூரி முகாமையாளர் தரப்பி கேடகப்பட்டது. இதைத் தொடர்ந்து தொழில் விசாரணைத் தலைவர் வழக்கை ஜூலை மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைத்து, செலவுதொகையை (300 கினீஸ்) கட்டும்படி பரியோவான் கல்லூரி முகாமையாளரிடம் உத்தரவிட்டார்.

# கூட்டுத்தாபன புதிய தலைவர்கள்

கோட்டை, வியா

கைத்தொழில், விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா தமது அமைச்சின் கீழுள்ள 5 கூட்டுத்தாபனங்களுக்குப் புதிய டைரக்டர்களை நியமித்துள்ளார்.

கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத் தலைவராக திரு. கே. ஸி. தங்கராசா மீண்டும் நியமனம்பெற்றுள்ளார். இலங்கை எண்ணெய் கூட்டுத்தாபனம்: திரு. ஜி. பி. விக்கிரமநாயக்கா, இலங்கை தோல் கூட்டுத்தாபனம் திரு. விவியன் கொடிகார. இலங்கை சிமெந்துக்கூட்டுத்தாபனம்: திரு. ஈ. எம். விஜயநாயக்கா மட்பாண்டக் கூட்டுத்தாபனம் திரு டி பி பட்டியாராச்சி (மீண்டும் நியமனம்)

# நமது நூல் ...

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகள், மாணவர் பிரச்னைகள், பொருளாதார சீர்கேட்டால் ஏற்படும் குடும்பப் பிரச்னைகள்பற்றி இந்நூலில் இருக்குமென நினைத்து ஆர்வத்துடன்படித்தேன். ஏமாற்றம் இல்லாவிட்டாலும் மகிழ்ச்சி ஏற்படவில்லை.

இத்தொகுப்பில் நல்ல தரமான சிறுகதைகளைப் படைக்கவேண்டுமென்ற ஆசிரியரின் ஆர்வம்துடிப்பதைக் காணமுடிகிறது. ஆனல் அது பூத்துக் காய்த்துக் கனியவேண்டும். ''பெரிதாகச் சொல்லக்கூடியதாக இத் தொகுதியில் ஒன்றுமேயில்லை'' என ஆசிரியர் தன்னைத்தானே விமர்சித்திருக்கின்றார்.

கலைச்செல்வி. விவேகி, கதம்பம் போன்ற இதழ்களில் வெளிவந்த ஆறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளது.

எழுத்துப்பிழைகள் மலிந்திருக்கின்றன. ஆரம்ப முயற்சி; தொடர்ந்து வளரலாம்.

—மயிலை சிவா.

# கனிஷ்ட பலகலைக்கழகங்கள் மூடும் யோசனை இல்லை

## தூதுக் குழுவிடம் அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்போதுள்ள கனிஷ்ட பல்கலைக்கழகங்களை மூடுவதற்கோ, போதனு பிரிவுகளை மூடுவதற்கோ கல்வி அமைச்சு உத்தேசித்திருக்கவில்லை. பல்கலைக்கழக மாணவர்களின் சம்பளத் திட்டம் சம்பந்தமாக பரிசீலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்வி அமைச்சர் அல்ஹாக் பதியுதீன் மகமூத் நேற்று முன்தினம் கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் சந்தித்த கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர் தூதுகுழுவிடம் தெரிவித்தார்.

பொல்கொல்லை. பலாலி, தெகிவளை, கேகாலை, குளியாப்பிட்டியா, காலி ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மாணவர்கள் அமைச்சரை சந்தித்தனர்.

— —

# அண்ணமார் கோயிலில்

## உயிர்ப்பலி நிறுத்தம்

(நமது நிருபர்)

பலாலி விமான நிலயத்திற்கு முன்னுல் உள்ள அண்ணமார் கோவிலில் நடைபெற்றுவந்த உயிர்ப்பலி நேற்றுத் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிமக்கள் ஒன்றுகூடி இம்முடிவை ஏற்றுக் கொண்டனர்.

சிறுபான்மைத் தமிழர்களால் பாதுகாக்கப்பட்டுவந்த இவ்வாலயத்தில் ஜூலை மாதம் 1-ம் திகதி தொடக்கம் உயிர்ப்பலி செய்வதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தடை செய்வது ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடியார்களின்வழிபாட்டை தடை செய்யத்திட்டமிட்டவர்களையும் முன்யோசனையோடு கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுத்து கலவரத்தை விலக்கி ஆலயப்பிரவேசத்தை அனுகூலமாக்க வேண்டும்.''

# கழுத்தில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். மாஜிஸ்திரேட் இவர்களை இம்மாதம் 7-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. இராசையா புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. கனகலிங்கம் தீர்ப்பு வழங்குவதை 7-ம் திகதி வரைஒத்திவைத்துப் பொலிசாரை மேற்கொண்டு விசாரணை செய்யும்படி உத்தரவிட்டார். (குவிம)

# புதிய அரசாங்க அதிபர்கள்

கோட்டை, வெள்ளி

அரசாங்க அதிபர்கள் சேவையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசாங்க அதிபர்கள் சிலரை கொழும்புக்கு மாற்றியும், வேறு உயர் பதவிகள் கொடுக்கப்பட்டும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர், வவனியா அரசாங்க அதிபர் திரு. பி. சீ. பெரேரா, அம்பாந்தோட்டை அரசாங்க அதிபர் திரு திலகரத்தின ஆகியோர் பொதுநிர்வாக அமைச்சில் நியமனம் பெற்றுள்ளனர்.

திருகோணமலை அரசாங்க அதிபராக திரு, லயனல் பெர்னண்டோவும், வவனியாவில் திரு: நெவில் ஜெயவீராவும், மட்டக்களப்பில் திரு. கே. நேசையாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பொலிஸ் கான்ஸ்டபிள் திடீர் மரணம்

மட்டுவில், வியா

கிளிநொச்சிப் பொலிஸ் நிலயத்தை சேர்ந்த பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவர் திடீரென மரணமானர். கடமையில் இருந்த ஊரெழுவைச்சேர்ந்த சரவணமுத்து என்ற கான்ஸ்டபிளே இவ்விதம் மரணமானர். விசாரணை தொடர்கிறது.

# சந்திரக்கல் களவு

வாஷிங்டன் ஜூலை 2

அப்பலோ-11 விண்வெளி வீரர்களால் அம்புலியிலிருந்து பூமிக்குக்கொண்டுவரப்பட்ட சந்திரமாதிரிக்கற்கள் சிலகளவாடப்பட்டுவிட்டனவாம்.


# திருமண அழைப்பு

கதிரவேலு — இந்திராணி

நொச்சிமோட்டை வவனியாவைச் சேர்ந்த காலஞ்சென்ற வீ. தம்பையா தம்பதிகளின் புதல்வர் கதிரவேலுவுக்கும் (புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய ஆசிரியர்) கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ந. தம்பு (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) தம்பதிகளின் புதல்வி இந்திராணிக்கும் 5-7-70 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கும் 10-25 மணிக்குமிடையில் நல்லூர்ச்சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும். 6-00 மணியிலிருந்து மணமகனில்லத்தில் விருந்து பசாரம் நடைபெறும்.

3144


இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு [illegible] 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org